கிராம நலம்

டிசம்பர் '60 விலை 13



அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி சென்னையில் 24-12-1960-ல் ஆரம்பித்து தொடர்ந்து ஆறு வாரங்கள் நடைபெறும்.





“ நான் செய்ததும், செய்யத் தவறியதுமான எத்தனையோ தவறுகளுக்காக, பின்னால் வரும் சந்ததியாரின் சாபங்களுக்கு நான் ஆளாக வேண்டியவனாக இருக்கலாம். ஆனால், ராட்டை திரும்பவும் புத்துயிர் பெற வேண்டும் என்று நான் சொன்னதற்காக பிற்கால சந்ததியாரின் வாழ்த்து எனக்குக் கிடைக்கும் என்ற திட நம்பிக்கை எனக்கு உண்டு. எனக்கு உள்ளது எல்லாவற்றையும் அதற்காகப் பணயம் வைத்திருக்கிறேன். ஏனெனில், ராட்டை சுற்றும் பொழுது, அதன் ஒவ்வொரு சுழற்சியிலும் சாந்தத்தையும், நல்லெண்ணத்தையும், அன்பையுமே அது நூற்கிறது. ”

CONNEMARA PUBLIC LIBRARY
1 JAN 1961
MADRAS

கிராம நலம்

"கிராமங்கள் வாழ, கிராமப் பொருள் ஓங்க
திட்டங்கள் மேற்கொள்வோம் சேர்ந்து"

— காந்தி மணிக்குறள்.

மாடி 6 | டிசம்பர் 1960 | படி 3

பொருளடக்கம்

	பக்கம்.
சமுதாய நலத் திட்டம்—ஜெயப்பிரகாஷ் நாராயண்.	2
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும் நிர்வாகத் திறமையும்— ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரி.	5
கிராம உணவு உற்பத்தித் திட்டம் - (விவசாய அமைச்சரின் வேண்டுகோள்)	7
அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி	8
சமுதாய நலத் திட்டம்—கூட்டுறவு நீர்ப்பாசன முறை	10
"முயற்சி திருவினை ஆக்கும்"—ஸ்ரீ கே. வி. கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.ஏ.	13
சிறு கவனமும் பெரும் பயனும்—ஸ்ரீ அ. ராமமூர்த்தி	15
கிராமியப் பாடல்கள்—ஒரு வேண்டுகோள்	16
பிள்ளையா ? தொல்லையா ? (ஓரங்க நாடகம்) —ஸ்ரீ அ. கேசவமூர்த்தி, எம்.ஏ.	17
சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் எட்டாண்டு வளர்ச்சி	22
உழைப்போம் வாரீர் !—ஸ்ரீ மு. அ. கணேசன்	27
நோயற்றே வாழ்வே குறைவற்ற செல்வம் !	29
கூட்டுறவு பற்றிய புத்தகங்களுக்குப் பரிசுகள்	31
ஒற்றுமை ஓங்குக—ஸ்ரீ ச. இரா. சி. மணி	31
பாண்டிநாட்டு நாடோடிப் பாடல்கள்—"சீரான்"	34

பகுதி-2

பஞ்சாயத்துத் திட்ட வரவு செலவுத் திட்டம்	(i—xii)

"சுயராஜ்யம் என்பது ஒரு புனிதமான மொழி. வேத மொழி. தன்னை ஆண்டு கொள்வதும் தன்னை அடக்கி கொள்வதுமே அதன் பொருள். எவ்விதக் கட்டுபாடுமின்மை என்னும் பொருளுடைய சுயேச்சை சுயராஜ்யமாகாது."

'கிராம நல' இதழ்
ஆலோசனைக் குழு

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்.,
பிரதமச் செயலாளர்.

ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி
கிராம அபிவிருத்திக் கமிஷனர்

ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை
துணைக் காரியதரிசி [பஞ்சாயத்து]

ஸ்ரீ கே. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [பயிற்சி]

ஸ்ரீ டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [திட்டம்]

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,
பொதுஜனத் தொடர்பு அதிகாரி-
ஆசிரியர்.

"கிராம நலம்" பத்திரிகையில் வெளியிட கதை, கட்டுரை, பாட்டு முதலியனவும் அவை சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனைத்தும் "ஆசிரியர், "கிராம நலம்", கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கிராம நலம்—சந்தா விவரம்

ஆண்டு சந்தா ரூ. 1·50 ந.பை.
ஆறுமாத சந்தா 0·75 ந.பை.
தனிப் பிரதி 0·13 ந.பை.

சந்தா, மற்றும் "கிராம நலம்" பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா கடிதப்போக்குவரத்துகளும் 'பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு எழுதப்படவேண்டும். ஸ்டாம்புகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது. வி. பி. பி. மூலம் பிரதிகள் அனுப்பப்படமாட்டாது.

சமுதாய நலத் திட்டம்

(ஜெயப்பிரகாஷ் நாராயண்)

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தையும், அதன் ஸ்தாபனத்தையும் எதிர்த்து ஒருவிதமான தீவிரப் பிரசாரம் நடைபெற்றுவருவதை சென்ற சில மாதங்களாக நான் கவனித்து வருகிறேன். எல்லா இடத்திலும் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படுவதுபோல, இங்கும் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படவேண்டுமென்பதில் சந்தேகமில்லை; சாத்தியப்பட்டால், இவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் பற்றியும் யோசனை தெரிவிக்கப்பட வேண்டும்; ஆனால், அது ஆக்க ரீதியாகவும் நல்லெண்ணம் நிறைந்ததாகவும் இருக்கவேண்டும். துரதிர்ஷ்டவசமாக, இதை மறந்து கண்டனம் தெரிவிக்கப்படுவது எனக்கு அதிர்ச்சியைத் தருகிறது.

சர்வோதயம்-அல்லது காந்தி-வினோபா இயக்கத்தைச் சேர்ந்த நாம் இவ்வியக்கத்தின் சமூக அம்சங்களைக் கொண்டு பார்ப்பதானால்—சமுதாய அபிவிருத்தித் திட்டத்தைப்போல, அதே முயற்சியிலேயே ஈடுபட்டிருக்கிறோம். இதில், கிராம சங்கல்பம் ஆத்மீக லோகாதய அம்சங்கள் உட்பட கிராமதானம், கிராம நிர்மாணம், கிராம சுயராஜ்யம் ஆகிய முறைகளைக் கையாளுகிறோம். நம் முயற்சி இஷ்டபூர்வமானதும், சர்க்கார் சார்பற்றதுமாகும்.

சென்ற மூன்று அல்லது நான்கு வருடங்களாக, சர்க்கார் திட்டங்களையும், சர்க்கார் சார்பற்ற திட்டங்களையும் ஒத்துழைக்கவைத்து ஒருமுகப்படுத்த இருதரப்பாரும் முனைந்து முயற்சித்து வருகின்றனர். ஓரளவு வெற்றியும் ஏற்கெனவே கிடைத்திருக்கிறது. சர்க்கார் ஏற்பாடுகளும் நமது சர்வோதய ஸ்தாபனமும் இன்னும் திறமையாக இருந்து, உயர்மட்டங்களில் உருவாக்கப்படும் கொள்கைகளைக் கூர்மையாகத் தெரிந்துகொண்டிருந்தால், மேலும் அதிக அளவில் வெற்றிபெற்றிருக்க முடியும். ஆனால், இரு தரப்பாரும், இந்த உணர்வை ஏற்படுத்துவதற்கு வேண்டிய விவாத ஏற்பாடுகளையும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் முறைகளையும் வளர்க்கத் தவறிவிட்டனர்.

இது எப்படியிருந்தபோதிலும், சமுதாய அபிவிருத்தியை தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் யாவற்றிலும் முதன்மையாகவே நான் கருதுவேன். என்னைப் பொறுத்த வரையில், சமுதாய அபிவிருத்தியில் பெரும்பாலும் எல்லாம்-புதிய சமூகத்தையும் வாழ்க்கை முறையையும், உண்டாக்குவது தொழில்மயமாக்குவது, விவசாய அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், வேலையளிப்பு, வறுமையை ஒழிப்பது, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஆகியவையும் இன்னும் பல விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

சமுதாய அபிவிருத்தி மந்திராலயத்தை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக நான் கருதுகிறேன். இம் மந்திராலயத்துடன் நெருங்கிப் பழகும் நல் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் அங்கு கண்ட தன்னலம் கருதாத சேவை, உணர்ச்சி வேகம், துணிச்சல், சுறுசுறுப்பு ஆகியவை எல்லா சர்க்கார் முயற்சிகளுக்கும், சர்க்கார் சார்பற்ற முயற்சிகளுக்கும் முன்மாதிரியாகக் கொள்ளலாமென்பதை நான் கூற விரும்புகிறேன்.

சமுதாய அபிவிருத்தி வேலையில் நெருங்கிய, நேரடித் தொடர்புடையவர்கள்—அதிகாரிகளும், அதிகாரிகளல்லாதாரும்—இந்தியரும், வெளிநாட்டினரும், இத்திட்டம் மெதுவாக ஊர்ந்துசெல்கிறது என்பதை அறிவார்கள்; துரிதமாகப் பிரமாத பலன்களை எதிர்பார்ப்பவர்கள் உண்மை நிலை தெரியாதவர்களே.

இத்திட்டத்தின் நோக்கம் பொது முயற்சி மனப்பான்மையை உருவாக்குவதுதான். இது உருவாகிவிட்டால், முன்னேற்றமும் துரிதமாக இருக்கும்; ஆனால், நமது சமுதாயத்தில் இந்த மனப்பான்மைதான் இல்லை. இதை ஏற்படுத்த நாள் பிடிக்கும்; திறமையும் பரந்த மனப்பான்மையும் வேண்டும். சில சமயங்களில் அன்பு, சேவை, பொது உணர்வு ஆகிய மந்திரத்தால் புரட்சிகரமான மாறுதல்கள் அங்கங்கே ஏற்படுவதுண்டு; ஆனால் இந்த நற்பண்புகள் எல்லாம், சர்க்கார் ஸ்தாபனங்களிலோ, அல்லது சர்க்கார் சார்பற்ற ஸ்தாபனங்களிலோ சேர்ந்து காண்பது அரிது.

பஞ்சாயத்து ராஜ்யம்

பல வருஷங்களாகக் கிடைத்துள்ள அனுபவத்தைக் கொண்டு, பொது முயற்சி மனப்பான்மையை உருவாக்குவதற்குரிய வழிகளில் ஒன்று, இப்போது சரியாகக்

கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அது அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும் வேலையையும் நிறைவேற்றும் வேலையையும் அதிகாரிகளிடமிருந்து பிரித்து சமுதாயத்திடமே வழங்க வேண்டுமென்பதாகும். இப்படியாக, பஞ்சாயத்து ராஜ் என்று சொல்லப்படுகிற ஜனநாயக ரீதியான அதிகாரப் பரவல் முறை பிறந்தது.

பஞ்சாயத்து ராஜ் திட்டத்தை, எட்டு வருஷ சமுதாய அபிவிருத்தி முயற்சியினால் ஏற்பட்ட மிகச் சிறந்த திட்டமாகக் கருதுகிறேன். நமது அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றியவர்கள், சுயராஜ்யத்தை மக்களுக்குக் கொண்டு செல்வதையும், அதை உண்மையாகவும் அவர்களுக்குப் பொருள் உள்ளதாகவும் ஆக்குவதையும், சுயராஜ்யத்தை நடத்துவதில் மக்கள் பங்குகொண்டு அதன் ஒளியை அனுபவிக்கச் செய்வதையும் தங்கள் வேலையாகக் கொண்டிருக்கவேண்டும்.

ஆனால், துரதிருஷ்டவசமாக இவை நிகழவில்லை. உற்சாகக் குறைவு பரந்து வளர்ந்தது; பாராமுக மனப்பான்மையும் பொறுப்பின்மையும் வளர்ந்தன; ஆனால் இதற்கு இப்போது வழி ஏற்பட்டிருப்பது அதிருஷ்டமே; அது துரிதமாகவும் புரட்சிகரமாகவும் இல்லையென்றாலும் கூட, கணிசமான முயற்சி தொடங்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்து ராஜ், அபிவிருத்தித் திட்டங்களில் பொது மக்களுக்கு உற்சாகமேற்படுத்துவதற்கான உபாயமாகவே முதலில் கருதப்பட்டது. ஆனால், பிரதம மந்திரியும், ஸ்ரீ எஸ். கே. டேயும் இப்புதுமையின் அரசியல் முக்கியதததுவத்தை விரைவில் உணர்ந்தனர். பண்டித நேரு, ராஜஸ்தானில் இத்திட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் இதன் புரட்சிகரமான தன்மை பற்றி விளக்கமாக உரை நிகழ்த்தினர். இத்துணிச்சலான முயற்சியில் முதல் முதலில் இறங்கிய பெருமை ராஜஸ்தானைச் சேர்ந்ததாகும்; இத்திட்டம் துவக்கப்பட்டு ஒரு வருஷம் கழிந்த பிறகும்கூட, இதன் புரட்சிகரமான தன்மை பற்றி மக்கள் அவ்வளவாக உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

கிராமப் பஞ்சாயத்துக்கள் வெகு காலமாக இந்தியாவில் இருந்து வந்திருக்கின்றன; இப்புதிய திட்டமும் மேற்படிப் பஞ்சாயத்துக்களின் விஸ்தரிப்பு நடவடிக்கைதான் என்று சில சமயங்களில் கருதப்படுகிறது; அது சரியல்ல, இதுவரை, இருந்து வந்த பஞ்சாயத்துக்கள் கிராம சுயாட்சி வேலைகள் எதையும் மேற்கொள்ளவில்லை. அவை, கிராமங்களை, ஜில்லா அதிகார வர்க்கத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளும், இறுதியாக மாகாண சர்க்காரின் கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டு வருவதற்கான கருவியாகவே இருந்தன. ஆகவே, பஞ்சாயத்து ராஜ்யம், அதிகாரத்தையும் நிர்வாகத்தையும் பரவச் செய்வதற்கான ஏற்பாடாக அப்போது கருதப்படவில்லை; அதிகார வர்க்கப் பரவல் முறையாகவே கருதப்பட்டது. அதைப்பற்றி நன்றாகத் தெரிந்திருப்பவர்கள் இப்படித்தான் அடிக்கடி என்னிடம் கூறியுள்ளனர்.

தற்போதைய அதிகாரப் பரவல் ஏற்பாடும் மேலே கூறப்பட்டதுபோல, கெடுக்கப்படும் அபாயமில்லை என்று நான் கூறவில்லை. அதிகாரத்திலும் அந்தஸ்திலும் ஆசையுள்ளவர்கள் இம்முயற்சிகளை எல்லாம் சூலைத்து தோல்வியுறச் செய்யக்கூடும். ஆனால், இப்படி நடைபெறாது என்பதை உறுதியளிக்கும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

முதலில் பிரதம மந்திரியும், சமுதாய அபிவிருத்தி மந்திரியும் மக்களிடம் உண்மை அதிகாரத்தையும் வேலைகளையும் ஒப்புவிக்க மனப்பூர்வமாக ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர்; இதைச் சாத்தியமாக்குவதற்கு வேண்டிய ஆதார வசதிகளையும் தரச் சித்தமாக இருக்கின்றனர்.

இரண்டாவதாக, இத்திட்டம் அமுல் செய்யப்பட்டு வரும் ராஜஸ்தான், ஆந்திரா ஆகிய இரண்டு ராஜ்யங்களில், அங்கு நடைபெறும் முயற்சி, வாஸ்தவமானது, இதயபூர்வமானது என்பதை விளக்கப் போதுமானதாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட சட்டங்களிலும் விதிகளிலும் குறைபாடுகள் இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளவும், மக்களின் அதிகாரத்துக்குச் சாதகமாக மாற்றங்கள் செய்யவும் அவர்கள் தயாராக இருக்கின்றனர்.

இந்தப் பரிசோதனை, நமது ஜனநாயகத்தின் அமைப்பையும் அது நடைபெறும் விதத்தையும் புரட்சிகரமாக மாற்றும்; இதன் வெற்றி பல சூழ்நிலைகளைப் பொறுத்து இருக்கிறது; எல்லாவற்றுக்கும் மேலாக மக்களின் மன நிலையில் புரட்சி ஏற்படவேண்டும். அதாவது மக்கள் தங்கள் குறுகிய பாசங்களைத் துறந்து (தனிப்பட்டவர், குடும்பம், இனம், ஜாதி முதலியவற்றின் மீதுள்ள பாசம்) சமுதாயத்தின் பொது நலனுக்கு முதலிடம் அளிக்கவும், சுய அரசாங்கத்தின் பொறுப்புக்களை வகிக்கவும் மனம் பக்குவப்படவேண்டும்.

இத்தகைய விழிப்பை ஏற்படுத்துவது அடிமட்டத்தில் உள்ள சர்க்கார் ஏற்பாடுகளால் முடியாத காரியமாகும். அரசியல், சமூக ஊழியர்கள் இந்த விழிப்பைக் கொண்டுவர வேண்டும். ஆனால், அவர்கள் எவ்வளவு பற்றற்ற முறையில் இவற்றை அணுகுகிறார்கள் என்பதைப் பொறுத்தே, இது வெற்றி பெறமுடியும்.

அரசியல் கட்சிகள் தியாகத்துக்குத் தயாராக வேண்டும்

இதற்காகத்தான் அரசியல் கட்சிகள் தங்களை உறுதியாகக் கட்டுப்பாட்டுக்குட்படுத்தி ஸ்தல அதிகாரிகளின் விஷயத்தில் தலையிடாமலிருக்க வேண்டுமென்று நான் அடிக்கடி கூறிவருகிறேன்.

அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தனிப்பட்ட அங்கத்தினர்கள் கலந்துகொள்ளலாம்; ஆனால், அது தனிப்பட்ட முறையில்தான் இருக்க வேண்டும். அரசியல் கட்சிகள் ஒரே இடத்தில் அதிகாரம் குவிக்கப்பட்டுள்ள கட்சிகளாகும்; இவற்றை தலைமை ஸ்தாபனங்கள் கட்டுப்படுத்தி நடத்தி வருகின்றன.

மக்கள் சுய அரசாங்கத்தின் ஸ்தல ஸ்தாபனங்கள் அடியிலிருந்து தோன்ற வேண்டும்; இவை மக்களின் சிந்தனைகளை மட்டுமின்றி, ஆசைகளையும் தேவைகளையும் தெரிந்துகொள்வதாக இருக்கவேண்டும்; மக்களின் நேரடிக் கட்டுப்பாட்டிலும் இருக்கவேண்டும்.

இவையெல்லாம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட சக்திகளாகும்; அரசியல் கட்சிகள் பலம் வாய்ந்ததாக இருப்பதால், இவ்விரண்டு சக்திகளும் மோதிக் கொண்டால், மக்களும் அவர்களுடைய ஜனநாயக ஸ்தாபனமும் கெட்டுவிடும் என்பது பெரும்பாலும் நிச்சயமே.

சமூக ஊழியர்களைப் பொறுத்தவரையில், கிராம அபிவிருத்தி ஸ்தாபனங்களையும், சர்வோதயத் தொண்டர்களையும் பொறுத்தவரையில், பஞ்சாயத்து ராஜ்யமும், மனோநிலைப் புரட்சியை உண்டுபண்ணுவதும் அவர்கள் முன்னிற்கும் பெரியதொரு பிரச்னையாகும்; இதை உதாசீனம் செய்தால், அவர்களின் எல்லா லட்சியமும் பாழாகிவிடும்.

பஞ்சாயத்து ராஜ்யத்தின் சின்னமாகிய மக்கள் ஜனநாயகம் நடைபெறுவதை நிச்சயமாகத் தடைசெய்யக்கூடிய மூன்றாவது அம்சம், கடுமையான பொருளாதார, சமூக ஏற்றத் தாழ்வுகள் இருப்பதாகும். ஜாதி முறைகளால் அமையப் பெற்றுள்ள சமூக அமைப்பு, நில உடமையில் காணப்படும் வித்தியாசம், நிலச் சொந்தக்காரர்களுக்கும் நிலமில்லாதோருக்குமிடையே காணப்படும் பிரிவு ஆகிய சூழ்நிலைகள் ஜனநாயக அதிகாரப் பரவல் முறை லட்சியத்தை தோல்வியுறச் செய்யக்கூடும். ஜாதி முறையை ஒழிப்பது ஹிந்து சமூகத்துக்குள்ளேயே மேற்கொள்ளப்படவேண்டிய சீர்திருத்தமாகும். ஆனால் நில உச்சவரம்புச் சட்டம் மெதுவாக நிறைவேற்றப்பட்டு வருவதால், கிராமப்புறத் தொழில்மய நடவடிக்கை புறக்கணிக்கப்பட்டுவருகிறது.

நிலத்தை கிராமத்துக்கு உடமையாக்குவது

சர்க்கார், நில உடமையைக் கிராமத்தின் வசமாக்குவதற்கு, அதாவது நிலத்தை மீண்டும் வினியோகம் செய்யாமல், தனிப்பட்டவர்களின் உடமைக்குப் பதிலாக, நிலத்தைக் கிராமத்துக்கே உடமையாக்குவதற்கு வேண்டி சட்டமியற்றுவதற்கு ஏற்ற பொதுஜன அபிப்பிராயத்தை கிராமதான இயக்கம் உருவாக்கிவிட்டது என்பது எனது சொந்தக் கருத்து; வினோபாஜி இதை ஒப்புக்கொள்வாரா என்பது எனக்குத் தெரியாது.

சோஷலிஸத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் இக் கொள்கையை எதிர்க்கமாட்டார்கள். அரசியல் கட்சிகளின் பேச்சுக்களிலிருந்து முடிவு செய்வதென்றால் சோஷலிஸ்ட் அல்லாதவர்களைவிட சோஷலிஸ்டுகளே ஏராளமாகக் காணப்படுகின்றனர்.

கிராமப்புரத்தைத் தொழில்மயமாக்குவது பற்றிக் கூறினேன்; இதன் வழியாக வேறொரு கருத்து எனக்குத் தோன்றுகிறது; இது அரசியல் அதிகாரப் பரவல் முறையை ஏற்படுத்த முயன்று வருபவர்களிடையே அதிகமாகப் பரவவில்லை. இது பொருளாதார அதிகாரப் பரவல் முறையாகும். பொருளாதார அதிகாரப் பரவல் முறைத் திட்டங்களும் அதற்கு வேண்டிய ஸ்தாபனங்களும் அதைக் கொண்டுவருவதற்கான முறைகளுமின்றி அரசியல் அதிகாரப் பரவல் முறையைக் கொண்டுவர முடியாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்: பஞ்சாயத்து ராஜ்யமும் உண்மையாகவும் திறமையாகவும் இயங்க முடியாது. இப்பிரச்னை மீது இனி கவனம் செலுத்தப்படுமென்று நம்புகிறேன்.

(உபயம்: குருக்ஷேத்திரா.)

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டமும் நிர்வாகத் திறமையும்

(ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரி, திட்டக் கமிஷனின் முன்னுள் துணை அக்கிராசனர்).

முதலிரண்டு திட்டங்களின் விளைவாகக் கிடைத்துள்ள பலன்களைத் தொடர்ந்து மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நபர் விகித தேசீய வருமானம் 1973–74-க்குள்ளாக, 1950–51-ல் இருந்ததைப்போல் இரட்டிப்பாக வேண்டுமென்று கொள்ளப்பட்டுள்ள லட்சியம் கைகூடுவதற்கு ஏற்ற வகையில், அபிவிருத்தித் திட்டங்கள் இதில் அடங்கியுள்ளன. இதைத் தனியாகப் பிரித்துப் பரிசீலிக்கக் கூடாது ; சமூகப் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் முக்கியமானதொரு கட்டத்தையே இது குறிக்கிறது.

மூன்றுவது திட்டத்தில், நமது தேசீய வருமான வருடாந்திர அதிகரிப்பு 5 சதவிகிதமாக இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருப்பது, நமது தேவைகளைக் கருத்தில் கொண்டு பார்த்தால் மிகவும் நியாயமானதே ; இதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய தேசீய முயற்சியும் கிடைக்குமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

நமது நிர்வாகத் திறமையை மேம்படுத்துவதன்மூலமும், முதலிரண்டு திட்டக் காலத்தில் பெரும் திட்ட வேலைகளில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளின் பயனுகவும் மூன்றுவது திட்டக் காலத்தில் செய்யப்படவிருக்கிற முதலீடுகளின் பயனுகவும் உற்பத்தி அதிகரித்து நல்ல பலன்கள் கிடைக்கும். திட்ட வெற்றிக்கு இது மிகவும் முக்கியமானதாகும்.

பாசனத் திட்டங்கள்

பெரிய, நடுத்தர பாசனத் திட்ட வேலைகளில் நாம் செய்திருக்கும் முதலீடுகள்பற்றி முதலில் குறிப்பிட விரும்புகிறேன். முதலிரண்டு திட்டங்களிலும் இவற்றுக்காக மொத்தம் 770 கோடி ரூபாய் செலவாகியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றுவது திட்டத்தில் 650 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, மூன்று திட்டங்களில் இவ்வகைக்கான மொத்தச் செலவு 1,400 கோடி ரூபாய். பெரும்பாலான ராஜ்யங்களில், செலவாகியிருக்கும் தொகையின் வட்டித் தொகைகூட கிடைக்கவில்லை என்பதாக இரண்டாவது நிதிக் கமிஷன் கூறியிருக்கிறது. நமக்குக் கிடைத்துவருகிற பாசன வசதிகளைப் பயன்படுத்துவதில் தவிர்க்கக்கூடிய காலதாமதமிருந்து வருகிறதென்று, திட்டக் கமிஷனும்கூட அதன் அறிக்கைகளில் கூறியிருக்கிறது. விவசாய உற்பத்திக் குறியளவு நிறைவேருமலிருப்பதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். கவனமாகத் திட்டமிட்டு, அவைகளைத் திறமையாக நிறைவேற்றி, கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பையும் ஏற்படுத்தி பல அனுகூலங்கள் துரிதமாகப் பயன்படுத்தப்பட்டால், மேலும் ஆதார வசதிகள் கிடைக்கும்; தேசீய வருமானமும் பெருகும்.

மின்சார வேலைத் திட்டங்களிலும் நாம் பெருமளவில் முதலீடு செய்திருக்கிறோம். முதலிரண்டு திட்டங்களிலும், ஜல மின்சார, அனல் மின்சாரத் திட்டங்களுக்காக சுமார் 670 கோடி ரூபாய் செலவாக்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கும்கூட, சில மின்சார போர்டுகளுக்குத்தான், அவற்றின் முதலீடுகளிலிருந்து போதிய அளவு வருமானம்—வட்டி முதலியவை—கிடைத்திருப்பதாக இரண்டாவது நிதிக் கமிஷன் சுட்டிக்காட்டியிருக்கிறது. மின்சாரத் தேவைகளைத் தக்க சமயத்தில் பூர்த்தி செய்வதற்கும், அவசியமான இடங்களில் மின்சார உபயோகத்தைத் தூண்டுவதற்கும் முயற்சி செய்தால் இத் திட்டங்களில் நிதி நிலைமைகளை நிச்சயமாக மேம்படுத்தலாம் என்பது மட்டுமல்ல, தேய்மானத்துக்கு ஒதுக்கப்பட்ட பிறகும் நல்ல வருமானம் கிடைக்கும். உச்ச பட்ச லாபம் கிடைக்க இவ் வேலைத் திட்டங்களைக் கவனமாக நிர்வகிக்க வேண்டிய அவசியம் மிகத் தெளிவாக இருக்கிறது.

விவசாய உற்பத்தி

அடுத்தபடி, விவசாய உற்பத்தியைக் கவனிப்போம். சிறு பாசனத் திட்டங்களும் சமுதாய அபிவிருத்தியும் அடங்கிய விவசாய உற்பத்தித் திட்டங்களுக்கு நமது திட்டங்களில் கணிசமான அளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 530 கோடி ரூபாயாகும். மூன்றுவது திட்டத்தில் 1,025 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நமது பொருளாதாரத்தில் விவசாயத் துறைக்குரிய ஜீவாதாரமான பங்கு நகல் திட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

நம் நாட்டின் பெரும் பகுதிகளிலும், சப்ளைகள், சாதனங்கள், கடனுதவிகள் ஆகியவை தக்க சமயத்தில் தகுதியுடையவர்களுக்கு போதிய அளவில் கிடைக்கும் விதத்தில் அவைகளை நிர்வகித்தாலே போதும், உற்பத்தியும் பெருகிவிடும். சில பகுதிகளில், திருந்திய விவசாய முறைகளை விவசாயிகளுக்குச் சொல்லித் தரவேண்டியது அவசியமென்பது உணரப்பட்டிருக்கிறது. இங்கும்கூட, நவீன முறைகளைக் கையாளுவதில் ஏற்படும் கால தாமதத்தைக் குறைக்கலாம்.

பாசன வசதிகள், மண்ணரிப்புத் தடுப்பு ஏற்பாடுகள், நல்ல விதை, ரசாயன உரம், கடன் ஆகியவை சம்பந்த

மான வசதிகள் ஆகிய சௌகரியங்களை உச்சபட்சமாகப் பயன்படுத்தி, இரண்டாவது திட்டத்தில் நிர்ணயிக்கப் பட்டுள்ள விவசாய உற்பத்தி குறியளவை நிறைவேற்ற முடிந்திருந்தால், நமது பொருளாதாரம் இன்னும் சிறந்த முறையில் வலுவடைந்திருக்கும். அப்படிச் செய்திருந் தால், நம் மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள் களும், நம் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள் களும் நமக்குக் கிடைத்திருக்கும் என்பதோடு மட்டுமல் லாமல், அன்னியச் செலாவணி நிலைமையை எளிதாக்கக் கூடியபடி ஏற்றுமதியும் அதிகரித்திருக்கும். விலை யேற்றப் போக்குகளையும் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

தொழில் துறையில் வளர்ச்சி....

தொழில் ஸ்தாபனங்களுக்கு, தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் பெருமளவில் முதலீடு செய்யப் பட்டிருக்கிறது. இத் தொழில் ஸ்தாபனங்கள் உற்பத்தித் திட்டங்களைத் துரிதப்படுத்தினால், அன்னியச் செலா வணித் தேவை குறையும். இவ் விஷயத்தில் பொதுத் துறையைச் சேர்ந்த உருக்கு ஆலைகளைக் குறிப்பிடலாம். ஆலைகளுக்குள்ளேயே உற்பத்தித் திறமையை அதி கரித்தும், நிலக்கரி, இரும்புக் கனி முதலிய சப்ளைகளை தேவைப்படும்போது, போதிய அளவு கிடைக்கும் விதத் தில் திறமையாக அமைத்தும், இரண்டாவது திட்டக் காலக் குறியளவுகளை மேம்படுத்தலாம்; மூன்றாவது திட்டக் குறி யளவுகளைப் பூர்த்தி செய்வதற்கு வசதியாக, அடிப் படையை ஸ்திரமாக்கலாம்.

திட்ட நகலில், பாசனம், மின்சாரம், விவசாய உற்பத்தி, தொழில்கள் ஆகிய ஒவ்வொரு தலைப்பிலும், முதலீட்டுக் குக்குரிய வருமானங்களைப் பெறுவதற்குரிய யோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன. இவை கவனமாக ஆராயப்பட்டு, பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு மென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிர்வாகத் திறமை-அடிப்படைத் தேவை

நமது திட்ட வெற்றிக்கு, நிர்வாகத் திறமை எவ்வளவு தூரம் முக்கியமானது என்பதையும் வேலைத் தரங்களைப் படிப்படியாக முன்னேற்ற வேண்டியதன் முக்கியத்துவத் தையும் மேற்கூறிய உதாரணங்கள் விளக்குகின்றன. டில்லியிலும், ராஜ்யங்களிலுமுள்ள பெரிய நிர்வாக ஏற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்ந்து நடைபெற வேண்டியதொரு முறையாகும். நமது நிர்வாகம் நம் நாட்டின் லட்சக்கணக்கான குடும்பங்களின் நல்வாழ்வை ஒட்டியதாகும். ஆகவே, பொது மக்களுடன் நேரடியான தொடர்பு இருக்கிற கட்டம் வரையில், நமது நிர்வாகத்தில் உயர்ந்த திறமையையும், மாசற்ற நேர்மையையும் ஏற் படுத்த வேண்டியது அவசியமாகும்.

அதாவது, எல்லாக் கட்டங்களிலும் வேலை வரம்புகள் தெளிவாக்கப்படவேண்டும்: அதிகாரிகள் தங்கள் கடமை களை நிறைவேற்றும் விதத்தில் அவர்களுக்குப் பொருத்த மான பயிற்சியளிக்கப்படவேண்டும். விதிகளும் நடை முறைகளும் சரியாக நிறைவேற்றப்படுகின்றனவா என்பது கூர்மையாகக் கவனிக்கப்படவேண்டும். சுட்டிக் காட்டப்படும் குறைபாடுகள் துரிதமாக அகற்றப்பட வேண்டும். பொறுப்புகள் துல்லியமாக நிறைவேற்றப் படுகின்றனவா என்றும் பார்த்துக்கொள்ள வேண்டும். மக்களிடையே சேவை செய்யவேண்டியிருப்பவர்கள் பெரும்பாலும் எல்லா சமயங்களிலும் அவர்களுடனேயே வாழ்ந்து அவர்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். இவையெல்லாம் நிறைவேற, அனுதினமும் இடைவிடாது முயற்சி இருந்துவரவேண்டும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டுமென்னும் எண்ணம் மத்திய, ராஜ்ய சர்க்கார்களிடையே வளர்ந்துவருகிறது என்பதில் சந்தேகமில்லை. இந்த சோதனையைச் சமாளிக்க, எல்லா வித முயற்சிகளும் படிப்படியாக, இடைவிடாது மேற் கொள்ளப்படுமென்பதிலும் சந்தேகமில்லை.

(" யோஜனாவில் " வெளிவந்த கட்டுரை)

சென்னையில் பெருமழையினால் பாதிக்கப்பட்டவர்களுடன் முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ்.

கிராம உணவு உற்பத்தித் திட்டம்

பஞ்சாயத்துகளின் முக்கிய பொறுப்பு-விவசாய அமைச்சரின் வேண்டுகோள்

"சென்னை மாநிலத்தில் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உணவு உற்பத்தியை இப்பொழுது உள்ள அளவோடுகூட, மேலும் 33 சதவிகிதம் அதிகரிக்கச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் எல்லாப் பஞ்சாயத்துகளுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும், முக்கிய பங்கு உண்டு. ஒவ்வொரு கிராமமும் அதன் முழு உற்பத்தித் திட்டத்தைத் தயாரித்து, நல்ல முடிவுக்கு வர வேண்டும். இதை 1961-ம் வருஷம் மார்ச் முதல் தேதிக்குள் வகுத்து அனுப்பிவைக்கவேண்டும்" என்று 1960-ம் வருஷம் டிசெம்பர் மாதம் 3-ம் தேதியில் சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் பேசுகையில் விவசாயத்துறை அமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"இதுதான் ஆரம்ப நிலை. இந்தக் காரியத்தை தளராத உறுதியுடனும் சேவை மனப்பான்மையுடனும் செய்யவேண்டும்", என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்கள்.

"1960-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ம் தேதியில் செயல்படத் தொடங்கியிருக்கும் 75 பஞ்சாயத்து யூனியன்களில், இந்த உணவு உற்பத்தித் திட்டம் வகுக்கப்படவேண்டும். இந்த 75 பஞ்சாயத்து யூனியன்களில், சுமார் 3,000 பஞ்சாயத்துக்கள் உள்ளன. இந்த 3,000 பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றும், **தனக்கென்று ஒரு கிராம உணவு உற்பத்தித் திட்டத்தை வகுக்க வேண்டியது அவசியம்**" என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பத்திரிகையாளர் கூட்டத்தில் அரசாங்க பிரதமக்காரியதரிசி-அபிவிருத்திக் கமிஷனர், ஸ்ரீ. ஆர். ஏ. கோபாலசுவாமி, ஐ.சி.எஸ்., வேளாண்மைத்துறை காரியதரிசி, ஸ்ரீ ஏ. வெங்கடேசன், ஐ.ஏ.எஸ்., வேளாண்மைத்துறை இயக்குனர் ஸ்ரீ வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ், மற்றும் கிராம அபிவிருத்தி, தலநிர்வாகத்துறை அதிகாரிகள், உணவு வேளாண்மைத்துறை அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கிராமம் முழுவதிற்குமாக ஒரு உணவு உற்பத்தித் திட்டம் தயாரிக்கவேண்டும் என்ற இந்தக்கருத்தானது முன்பே திருவள்ளூர் வட்டாரம் கல்யாணகுப்பம் கிராமத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தக் கிராமத்திற்கான உணவு, உற்பத்தித் திட்டமானது அந்தக் கிராமப்பஞ்சாயத்தாலேயே தயாரிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டுவருகிறது. மாநில அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்., அவர்கள் மற்ற அதிகாரிகளுடன், 1960-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 19-ம் தேதி, 20-ம் தேதி ஆகிய இரண்டு தினங்களில், இந்தக் கிராமத்திற்கு நேரில் சென்றிருந்து, கிராம மக்களையே திட்டம் தீட்டச் செய்தார். அதன்படி அந்தக் கிராமத்திற்கென்று ஒரு உணவு உற்பத்தித் திட்டம் அந்தக் கிராம மக்களாலேயே தயாரிக்கப்பட்டது. (இதைப்பற்றிய விவரம் **கிராம நலம்** அக்டோபர் மாத இதழில் வெளிவந்துள்ளது.)

ரசாயன உர உபயோக அபிவிருத்தியைப் பொறுத்த வரை, கிடைக்கக் கூடிய உரத்தை, ஒதுக்கீடு செய்து அவை நன்கு பயன் படுத்தப்படுகின்றனவா என்பதை மேற்பார்வையிடும் பொறுப்பு பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கு இருக்கும்.

பெரிய பாசன பகுதிகளைப் பராமரிப்பதின் பொறுப்பை ராஜ்ய சர்க்கார் தன்னிடம் வைத்துக்கொள்ளும். சிறிய பாசன வசதிகளைப் பாராமரிக்கும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் கூட்டுறவுப் பண்ணையின் பங்கு என்ன என்பதை விளக்கும்பொழுது, அமைச்சர் "பல இடங்களில் ரயத்துகளுக்கு, கடன் வசதிகளையும் இதர உதவிகளையும் செய்ய சேவா கூட்டுறவுகள் உள்ளன. சில இடங்களில் கூட்டு கூட்டுறவுப்பண்ணை இருக்கிறது" என்று கூறினார்கள்.

"பஞ்சாயத்துகளும் கிராமக் கூட்டுறவும் பரஸ்பரம் ஒத்துழைத்துச் செயல்படுகின்றன. நல்ல விளைச்சலை ஏற்படுத்தும் வேலை சாகுபடியாளருடையது. பஞ்சாயத்துகள் அவர்களுக்கு உதவி புரியவே இருக்கின்றன" என்று கூறினார்.

"தஞ்சை மாவட்டத்தில் அமுல் நடத்தப்படும் தீவிர சாகுபடித்திட்டத்தின்கீழ் அங்கு தேவையான உரம் அனைத்தும் தட்டில்லாமல் கிடைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன" என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்

அரசாங்கப் பிரதம காரியதரிசி ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்., அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள் :— "புதிய அமைப்பில் ஒவ்வொரு பஞ்சாயத்தும் தனது கிராமத்தில் விவசாய உற்பத்தி வேலையைக் கவனிக்கும். பஞ்சாயத்து யூனியன் இணைப்புஸ்தாபனமாகச் செய்யப்படும். உணவு உற்பத்தி இயக்கம் சம்பந்தமாக 12,000 கிராமப் பஞ்சாயத்துகளுடன் விவசாய மந்திரி நேரடித் தொடர்புகொள்கிறார். அதுதான் இப்போது பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் தனிச்சிறப்பாகும்."

"இந்தப் பொறுப்பை பஞ்சாயத்துகள் உணர்ந்து சீரிய முறையில் செயலாற்றும் என நம்புகிறோம். உள்ளூர் வசதிகளையெல்லாம் திரட்டிப் பாடுபடவேண்டும். செயலாற்றும் திறன் படைத்த பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் இந்தத் துறையில் நல்ல முறையில் வேலை செய்து குறிப்பிட்ட இலக்கை அடைய பாடுபடவேண்டும்."

G.N.—2A

அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி

டிசம்பர்-ஜனவரி மாதத்தில் இரண்டு பொருட்காட்சிகள் சென்னையில் நடைபெற இருக்கின்றன. ஒன்று ஐலண்டு மைதானத்தில் நடக்கவிருக்கும் தொழில் துறை சம்பந்தப் பட்ட பொருட்காட்சி. பிரம்மாண்டமான அளவில் இந்தப் பொருட்காட்சியை நடத்த தென் இந்திய வர்த்தக சங்கம் முடிவுசெய்துள்ளது. மற்றொரு பொருட்காட்சி தேனும் பேட்டையில் 1960-ம் வருஷம் டிசெம்பர் மாதம் 24-ம் தேதியில் ஆரம்பமாகும் கதர், கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி. ஆண்டுதோறும் சென்னையில் பொருட் காட்சிகள் நடந்துகொண்டு தான் இருக்கின்றன. ஆனால், இந்த ஆண்டு நடைபெறும் கதர், கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி விசேஷமாகக் குறிப் பிடத்தக்க ஒன்றாகும். மகாத்மா காந்தியடிகளின் நிர்மாணத்திட்டத்தின் அடிப்படை அம்சங்களை விளக்கியும் அந்தத் திட்டத்தை நாடு எவ்வளவு தூரம் கடைப் பிடித்து வந்துள்ளது என்பதை தெள்ளெனக்காட்டும் வகையில், இந்தப் பொருட்காட்சிஅமைந்திருக்கும். இந்தப் பொருட்காட்சியை நடத்துகின்ற பொறுப்பை கிராம அபிவிருத்தி, தலநிர்வாகத்துறை ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தப் பொருட்காட்சியில் கீழ்க்கண்ட அரசாங்க இலாக் காக்கள் பங்கெடுத்துக் கொள்கின்றன :—

(1) வேளாண்மை, கால்நடைத்துறை.
(2) கிராமக் கைத்தொழில்கள் பகுதி.
(3) காட்டிலாகா.
(4) ஹரிஜன நலப்பாதுகாப்புத் துறை.
(5) கல்வி.
(6) மாதர் நலத்துறை.
(7) புள்ளி விவரத் துறை.

பஞ்சாயத்து ஆட்சி முறை விளக்கம்

அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைகள் பஞ்சாயத்து மூலமாக நடைபெற வழிவகை செய்யப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்து ஆட்சியின் மூலம் கிராம முன்னேற்றத் திற்கான வழிமுறைகளை பொருட்காட்சியில் தெள்ளென விளக்கிக்காட்டுகின்ற முறையில் கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறையினர் சிறந்த முறையில் விசேஷ ஏற்பாடு கள் செய்துள்ளனர். சிறப்பாக, கிராமசேவக், கிராம சேவகி முதலியோரின் பயிற்சி முறைகளைப்பற்றி விரிவாக விளக்கியிருப்பதை இப்பொருட் காட்சியில் காணலாம். மற்றும் பஞ்சாயத்து யூனியன் அலுவல்கள், மாவட்ட அபி விருத்தி மன்றங்களின் வேலைகள் என்னென்ன என்பதை யும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட விவரங்களை விளக்கிக் காட்டும் வகையிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன இத்துடன் குடும்ப இயல் பகுதியும் சேர்க்கப்பட்டுள்ளது கிராமங்களில் உள்ள குடும்பங்கள் எல்லாம் தேவையான வசதிகளைப் பெற்று, உணவு, உடை, இருப்பிடம் ஆகிய தேவைகளில் ஒருவித குறையும் இல்லாமல் இன்பமாக வாழ்வது என்ற லட்சியத்தை குடும்ப இயல் பகுதியில் விரிவாக விளக்கிக்காட்டும் முறையில் ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

சேவா கிராம குடில்

கிராமக் கைத்தொழில், கதர் அபிவிருத்தி ஆகிய துறை களில் கண்டுள்ள முன்னேற்றங்களைப்பற்றி விரிவாக விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. கிராமக் கைத்தொழில்கள் பற்றிய எல்லா அம்சங்களையும் தெளிவாக விளக்கிக்காட்டும் வகையில் நடைமுறை ஏற்பாடுகளும் செய்யப்பட் டுள்ளன. மிகவும் முக்கியமாக குறிப்பிடவேண்டிய அம் சம் என்னவென்றால், பொருட்காட்சியின் மத்தியில் அமை கப்பட்டுள்ள சேவாகிராமக் குடில்போன்ற மாதிரி அமைப்பு முறை. மகாத்மா காந்தியடிகளின் தொண்டுக்கும், சேவைக்கும் நிலைக்களனாகவும், எடுத்துக்காட்டாகவும் தலமாகவும் விளங்கிய சேவாகிராம ஆசிரமத்தின் மாதிரி அமைப்பு முறை நிறுவப்பட்டிருப்பது எல்லோரும் கண்டு பயன்பெறவேண்டிய மிக முக்கியமான அம்ச மாகும். மகாத்மாவின் வாழ்க்கையை விளக்கிக்காட்டும் வகையில் அவர் வாழ்க்கை சம்பந்தப்பட்ட பெரிய பெரிய நிழல்படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன், அவர் காட்டிய வழிமுறைகள், நெறிமுறைக் கோட் பாடுகள் எல்லாவற்றையும் தெளிவாக விளக்கிக் காட்டும் வகையில் சித்திரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் பொருட்காட்சி மைதானத்தில் ஒவ்வொரு நாளும் சர்வோ தயப் பிரார்த்தனையும் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

குழந்தைகள் அரங்கு

கிராமியப் பண்புக்கமைந்த முறையில், ஆடல், பாடல், வேடிக்கை நிகழ்ச்சிகள் (கலை நிகழ்ச்சிகள்) வழக்கம்போல் பொருட் காட்சி மைதானத்தில் நடைபெறும். அத்துடன், குழந்தைகள் இன்பமாகப் பொழுது போக்க ஏற்றமுறை யில் விசேஷ வசதிகள் செய்யப்படும். குழந்தைகளுக் கென்றே பொருட்காட்சி மைதானத்தில் ஒரு பகுதி ஒதுக் கப்பட்டுள்ளது. இது ஒரு புது அம்சமாகும். குழந்தை களுக்கு அறிவூட்டும் வகையில் பயன் படத்தக்க வேடிக்கை விளையாட்டுகள் நடைபெறும்.

காந்தியடிகள் உருவாக்க நினைத்த கிராம ராஜ்யம் என்னும் லட்சியத்தை நோக்கிச் செல்லும் முன்னேற்றப் பாதையில் ஒரு சிறு விளக்கமாக இப்பொருட்காட்சி அமை யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொருட்காட்சியின் முழு அமைப்புமே ஒரு சர்க்காபோல் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த மாத இதழின் அட்டைப்படம் இதை விளக்கிக் காட்டுகிறது.

மத்திய அரசாங்கத் தொழில், வர்த்தகத் துறை அமைச் சர் ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் இப்பொருட் காட்சியை 1960-ம் வருஷம் டிசெம்பர் மாதம் 24-ம் தேதி யில் திறந்து வைத்தார்கள். கிராம நல்வாழ்க்கையில் நம் பிக்கையும், ஆர்வமும் கொண்ட ஒவ்வொருவரும், சிறப் பாக, கிராமப் பஞ்சாயத்துகளில் பொறுப்பு வகிப்பவர்கள் எல்லோரும் இப்பொருட் காட்சியைக் கண்டு பயன் பெறு தல் நலம்.

1–3. 27–9–60-ல் மாதவரம் பால் பண்ணையில் மேலும் மூன்று பிரிவுகளை முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் ஆரம்பித்து வைத்தார்.

G.N.—3

4–ம் 6–ம் : தொழிலாளர்களிடையே கல்விபரப்பும் திட்டத்தை தொழில் துறை அமைச்சர் ஸ்ரீ ஆர். வெங்கடராமன் 29–9–60-ல் ஆரம்பித்து வைத்தார்.

5–ம் 7–ம் : ஈரோட்டையும் பள்ளிப்பாளையத்தையும் இணைக்கும் பாலத்தை மத்திய அரசாங்க அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் திறந்து வைத்தார்.

சமுதாய நலத் திட்டம்

கூட்டுறவு நீர்ப்பாசன முறை

உலகத் தொழில்களில் உயர் தொழிலாகிய உழவுத் தொழில் நீரின்றி அமையாதென்பது யாவருமறிந்ததே. வளமுள்ள நிலமாயினும், வாட்டம் போக்கும் நல்ல பல உரங்கள் இட்டுப் பயிரிடினும் நீரில்லையேல் பயனில்லை. இந்த நிலையில்தான் நம் நாட்டில் பல பகுதிகள் பயிரிட வசதியின்றி தரிசாகக் கிடக்கின்றன. தென்னுற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடியைச் சேர்ந்த விழப்பள்ளம் பகுதி நிலங்கள் அணைக்கட்டோ, ஏரியோ, ஆறோ இல்லாமல் பயிரிட வாய்ப்பின்றி இருந்தன. இந்நிலையை மாற்றி அமைத்து அப்பகுதியை வளம்பெற்ற நிலமாக மாற்ற வழி வகைகளை எண்ணியிருந்தோம். இந்நிலையில்தான் குறிஞ்சிப்பாடி வட்டார வளர்ச்சி அலுவலகத்தார் எங்கள் துயர் நீங்க வழிகாட்டினர். 1959-ம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் ஒரு நாள், வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கிராம சேவகராகப் பணியாற்றிய திரு. பழனியப்பன் அவர்கள் விழப்பள்ளம் விவசாயப் பெருங்குடி மக்களை ஒன்று திரட்டி கூட்டுறவு முறையில் நீரூற்றுக் குழாய் அமைப்பதால் விளையும் நலன்களை எடுத்துக் கூறினர். அவ்வாறே அமைத்துப் பயன்பெறலாம் என முடிவு செய்தனர். அதற்கானவற்றை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. கே. சிவராமகிருட்டிணன், B.Sc., (Ag.) அவர்கள் முழு மனதுடன் செய்வதாக உறுதியளித்து அவ்வாறே உதவினர்கள்.

அதன்படி 24 ஏக்கர் நிலத்திற்கு உரிய பதினொருவர் ஒன்றுகூடி, கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் திரு. சுப்பிரமணிய முதலியார் உதவியுடன், கூட்டுறவு நீர்ப்பாசன சங்கம் அமைப்பதென 1959-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ந் தேதியில் முடிவு செய்தனர்.

அதன்படி ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் சந்தாத் தொகை வசூல் செய்து கூட்டுறவு விவசாய வங்கியில் கட்டுவதாக வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சிவராமகிருட்டிணன் அவர்கள் தலைமையில் முடிவு செய்து, திரு. அ. ப. வைத்திலிங்கம் அவர்களை அமைப்பாளராக இருந்து சங்க வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பிறகு குறிஞ்சிப்பாடி கூட்டுறவு விவசாய வங்கியில் ரூ. 400 கட்டி, சென்னை மாநில அரசினர்க்கு விண்ணப்பித்துக்கொள்ளப்பட்டது. பின்னர் நீரூற்றுக் குழாய் கிணறு அமைக்க "பவர் டிரில்" தேவை என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். ஏ. சுந்தரராசன், I.A.S. அவர்கட்கு விண்ணப்பித்துக்கொண்டோம். மாவட்ட விவசாய அலுவலர் திரு. எம். கே. லிங்கையா அவர்களையும் கண்டு கேட்டுக்கொள்ளப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பலமுறை சந்தித்து 1959-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் "பவர்டிரில்" பெற்றோம்.

1959-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ந் தேதியில் "பவர் டிரில்" கொண்டு வரப்பட்டு திரு. எஸ். கே. சம்பந்தன் அவர்கள், B.A., M.L.C. தலைமையில் மாநில விவசாயத் துணை இயக்குநர் திரு. முகமது அலி அவர்களைக் கொண்டு வேலை தொடங்கப்பட்டது. பல இன்னல்களுக்கிடையே இரண்டு மாத காலம் வேலைதொடர்ந்து நடைபெற்றது. நல்லகாலமாக 1959-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ந் தேதியில் 410 அடி ஆழம் சென்றதும், பூமி மட்டத்திற்குமேல் சுமார் 3 அங்குலம் தானுகவே நீர்வழிந்துவரத் தொடங்கியது. நீரைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டோம். அதுவும் தானுகவே நீர் வருவது எங்கள் மகிழ்வை இருமடங்காக்கியது. இக்கூட்டுறவுத் திட்டத்தின் வெற்றியின் அறிகுறியாகவே அதனை நாங்கள் எண்ணினேம். இதுவரையில் அரசியலார் எங்கள் சங்கத்தைப் பதிவு செய்யவோ, பணம் அனுமதிக்கவோ இல்லை. இதற்கிடையில் நீரூற்றுக் குழாய் அமைக்க வெளியில் கடன் வாங்கியும், எங்கள் பங்குத் தொகை ரூ. 3,370 வசூல் செய்தும் வேலை நடந்து வந்தது. ஆயினும் "பவர் டிரில்" வேலை முடிந்ததும் அதற்கான தொகை செலுத்தப்படவில்லை என்ற காரணத்தால் இரு திங்களாக "பவர் டிரில்" இங்கேயே இருந்துவிட்டது. இந்நிலையை மாநில விவசாய இயக்குநர் திரு. ஏ. வெங்கடேசன் அவர்களை அணுகி விளக்கினேம். அரசியலார் பணம் வந்ததும் பணம் செலுத்துவதாக உறுதியளித்து அவர் கருணைகொண்டு மூன்று மாதம் தவணை பெற்று வந்தோம். சங்கம் பதிவு செய்யப்படவும், பணம் பெறவும் வழி வகை தேடி மாநில அபிவிருத்தித் துணைச் செயலாளர் திரு. டி. என். சேஷன் I.A.S. அவர்களை அணுகினேம். அவர்கள் எம் நிலை கண்டு விவசாய இயக்குநருக்கு அறிவித்து உடனடியாக உத்திரவு கிடைக்க உதவினர். மாநில அபிவிருத்தி இலாகாவினரும், நிதி இலாகாவினரும் உத்திரவு விரைவில் கிடைக்கப் பெரிதும் துணை செய்தனர். G.O.Ms. No. 220, dated 12-11-59 உத்திரவின்படி ரூ. 16,500 கடனுகவும், ரூ.5,500 மானியமாகவும் கிடைக்க வழியேற்பட்டது. அதன்படி மாநிலக் கூட்டுறவு பதிவாளர் அவர்கள் ஆணையின் வண்ணம் 1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந்தேதியில் மாவட்ட உப பதிவாளரால் சங்கம் பதிவு செய்யப்பட்டது. அது "விழப்பள்ளம் கூட்டுறவு நீரூற்றுப் பாசனச் சங்கம் 2163" எனப்பட்டது.

1960ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் தேதியில் திரு எஸ். கே. சம்பந்தன், B.A., M. L.C. அவர்கள் தலைமையில் மாவட்ட

ஆட்சித் தலைவர் திரு. எஸ். ஏ. சுந்தரராசன், I.A.S. அவர்களால் சங்கம் முறைப்படி துவக்கப்பட்டது. அன்று முதல் அக்குழாய்க் கிணற்றில் பாசன வசதி பெற்று பயிரிட்டுப் பயன் பெற்று வருகிறோம். 1960-ம் ஆண்டு பிப்ரவரி மீ 25-ந் தேதி மாநில விவசாய இயக்குநர் திரு.எ. வெங்கடேசன் I.A.S. அவர்கள் குழாய் கிணறுள்ள இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டுப் பெருமைப் படுத்தினார்கள்.

எங்கள் சங்கம் ஆரம்பித்து ஓர் ஆண்டு காலம் கடந்தது. இத்தருணத்தில் 1960-ம் ஆண்டு செப்டம்பர் மீ 19-ந் தேதியில் குறிஞ்சிப்பாடிக்கு மாண்புமிகு மாநில முதலமைச்சர் திரு கே. காமராஜ் அவர்கள் வருகை தந்தார்கள். அதுபோது அவர்கட்கு வரவேற்பிதழ் அளித்து, பழங்குடி மாணவர்க்கு அவர் கையால் உடை வழங்கச் செய்து எங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டோம்.

எங்கட்கு அரசியலார் 20 ஆண்டு தவணையில் ரூ. 7,500 கடனாகவும், 10 ஆண்டுத் தவணையில் ரூ. 9,000 கடனாகவும், ரூ. 5,500 மானியமாகவும், ஆக. ரூ. 22,000 அளிக்க உத்தரவிட்டுள்ளனர். இத்தொகையில் கடனாக ரூ. 7,500-ம், மானியமாக ரூ. 2,500-ம் பெற்றுக் கொண்டோம். நீரிறைக்கும் பொறி வாங்குவதற்காக உள்ள மீதி தொகை (ரூ. 9,000 கடன் தொகை; ரூ. 3,000 மானியம்) ஆக ரூ. 12,000. அத்தொகையை வேறு வேலைக்காகக் கேட்டுள்ளோம். அதாவது தண்ணீர் பாசனத்திற்கு சிமிண்ட் குழாய்கள் வாங்க ரூ. 4,000-மும், டிராக்டர் வாங்க ரூ. 8,000-மும் கேட்டிருந்தோம். ஆனால் டிராக்டர் விலை ரூ. 18,000 ஆவதால் இப்போது அது வாங்குவதற்கு இயலவில்லை. ஆதலாலும், 3 அங்குல தண்ணீர் வழிந்துகொண்டிருந்த குழாயிலிருந்து இப்போது நீர் குறைந்து 2 அங்குலம் வருவதாலும், மேலும் குறைந்தால் நீரிறைக்க பொறி தேவைப்படுமாதலாலும் மிகுதித் தொகை ரூ. 8,000-ஐ பின்னர் நீரிறைக்கும் பொறி வாங்கப் பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளோம்.

இத்தகைய கூட்டுறவு நீர்ப்பாசனத் திட்டங்கள் விவசாய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி நாடு நலம்பெற வழிகாட்டுவனவாகும். இத்திட்டங்கள் மூலம் பொருள் குறைவாக உள்ள ஏழை உழவர்கள் பெரிதும் பலனடைந்து உயர்வடைவார்கள். இத்தகைய திட்டங்கள்தான் வளர்ந்து வரும் நம் நாட்டின் இப்போதைய தேவைகள். ஆயினும் இத்திட்டங்கள் நிறைவேற நீண்ட காலம் பிடிக்கிறது. அரசியலார் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பெரிதும் துணை செய்யவேண்டும். அரசியலார் திட்டங்கள் வெளியிட்டாலும் அதனை நிறைவேற்றிப் பயன் பெறச் செய்வோர் அரசியல் அலுவலர்களேயாவர். ஆகவே, இத்தகைய திட்டங்கள் நிறைவேற அலுவலர்கள் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது. எனவே இத்திட்டங்களை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டுழைக்கும் அலுவலர்கள் தாம் தம் கடமையை நிறைவேற்றுகிறோம் என்ற எண்ணத்தோடுமட்டுமன்றி, நம் நாட்டிற்குச் சேவை செய்கிறோம் என்ற பெரு நோக்கோடு, தம் இன்னல்களையும் பொருட்படுத்தாது பணியாற்றி இத்திட்டங்களை விரைவில் நிறைவேற்ற ஆவன செய்யவேண்டும். இத்தகைய சங்கத்தினைத் தொடங்க எம் பகுதியிலிருந்து மேலும் மூன்று குழுவினர் விண்ணப்பித்துள்ளனர். இத்தகைய சங்கங்களை நாட்டில் பரப்ப ஏற்பாடு செய்ய வேண்டுவது மிகவும் அவசியமாகும்.

(விழப்பள்ளம் கூட்டுறவு நீரூற்றுப் பாசன சங்கத்தார் அனுப்பிய கட்டுரை.)

உலக ஜனத்தொகைப் பிரச்சினைகள்

இந்திய ஜனவிருத்தி ஆராய்ச்சியாளரின் கருத்து,.

உலகத்தின் இன்றைய ஜனத்தொகை 290 கோடியாக இருக்கிறது என்றும், ஆண்டுதோறும் அது நிகரமாக 4·9 கோடி வீதம் அதிகரித்து வருகிறது என்றும் இந்திய ஜனத்தொகை ஆராய்ச்சிக் கழகத்தின் டைரெக்டர் **டாக்டர் எஸ். சந்திரசேகர் 1960-ம் ஆண்டு** செப்டெம்பர் 28-ந் தேதி இஸ்தான்புல் தொழில் நுட்பக் சர்வ கலாசாலையில் உரை நிகழ்த்துகையில் கூறினார். ஜனத்தொகை தற்போதைய வேகத்தில் அதிகரித்துக்கொண்டு போனால், உலக ஜனத்தொகை இ.பி. 2,000 வருஷத்துக்குள் 400 கோடியை எட்டிவிடுவது சாத்தியமே.

உலக ஜனத்தொகை இந்த அளவுக்கு அதிகரித்துவிடாது என்றும், பஞ்சத்தினாலும், இதர இயற்கை அனர்த்தங்களினாலும் ஜனத்தொகை குறைந்துவிடக்கூடும் என்றும் டாக்டர் சந்திரசேகர் குறிப்பிட்டார்.

அபிவிருத்தி குன்றிய ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் பற்றிப் பேசுகையில், ஜனத்தொகையைப் படிப்படியாகக் கட்டுப்படுத்துவது விஷயத்தில் சென்ற பத்து வருஷ காலத்தில் இந்திய சர்க்கார் அனுசரித்து வந்துள்ள கொள்கையை அவர் விளக்கிக் கூறினார்; ஜனன விகிதத்தைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் ஏற்கெனவே பலன் அளிக்க ஆரம்பித்துள்ளன என்று அவர் கூறினார். பொருளாதாரத்தை நவீன மயமாக்குவதற்கு மட்டுமின்றி, ஜனத்தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதற்கும் இந்திய சர்க்கார் மேற்கொண்டுவந்துள்ள முயற்சிகளை அவர் பாராட்டினார்.

—:—:—



25–11–60–ல் மாநில எண்ணெ வித்துக்கள் பரிசீலனைக் கமிட்டியின் முதல் கூட்டத்தை உள்நாட்டுத்துறை அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் ஆரம்பித்து வைத்தார்.

25–11–60-ல் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி பத்திரிகையாளர்களுக்கு நிதி அமைச்சர் ஸ்ரீ சுப்பிரமணியம் விளக்கிக் கூறினர்கள்.



"முயற்சி திருவினை ஆக்கும்"...

R.P.

ஸ்ரீ கே. வி. கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.ஏ.

சமுதாய வளர்ச்சியை கூட்டு முயற்சி, ஒன்றுபட்ட உழைப்பே மாண்புற வைக்கும். இவ்வுயரிய அறப்பண்பின் பெரும் பணிக்கு எடுத்துக்காட்டு வட ஆற்காடு மாவட்டத்தில் கணியம்பாடிப் பகுதியில் மக்களே பாதை அமைத்த ஒப்புயர்வற்ற பணியாகும்.

மேகங்கள் தவழும் பசுமைமலிந்த மலையும் மலையடுத்த காடும், காடு அடுத்த வயலும், வயலடுத்த நீர்த்தேக்கங்களும் ஒருங்கே அமைந்த தமிழ் இலக்கியத்தின் மெய்ம்மைக்காட்சி இந்த மாவட்டத்தில் கொளையமேட்டிலிருந்து நாயக்கனேரி வரை தொடர்ந்திலங்கல் கண்கூடு. தண்மைக் காற்றும், பசுமைத் தோற்றமும், மரம்விட்டு மரம் தொட்டு பறந்து கூவித்திரியும் எழில் கொஞ்சம் பறவைகளும், சலசலவென்று ஓடும் அருவிகளும், இடை இடையே அச்சத்தை ஊட்டும் பயங்கர மிருகங்களின் குரலும், திடீரென்று சீறி ஓடும் பாம்புகளும், இன்னபிற இந்தப் பிரதேசத்தில் விளங்கல் வெள்ளிடை மலை.

அந்த மக்கள் பட்ட துயா....

இடை இடையே, பன்னெடுங்காலமாக அயராது உழைக்கும் உழவர் கூட்டம் கரடு முரடான இடங்களைச் செம்மைப்படுத்தி நிலமாக்கி, வயலாக மாற்றி வளமாக்கி பயிர் வளர்த்த பெருமையை என்னென்று கூறுவது! அவர்கள் பட்டபாடு கல் மனத்தையும் கரைய வைக்கும், இருக்குமிடம் நீங்கி, நகரத்தை அடைய வேண்டுமானால், படும் துன்பத்திற்களவேயில்லை. பெற்ற பொருளை விற்க வேண்டுமென்றாலும், இருக்கும் பொருளை அயலார் வாங்க வேண்டுமென்றாலும், முடியாத நிலைதான் பன்னெடுங்காலமாக இந்தப் பிரதேசத்திலே நிலவிற்று. நலக்குறைவு ஏற்பட்ட பொழுதெல்லாம், பாதை வசதியின்மையால் எத்துணை எத்துணை துன்பங்களை அந்த மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்! பெறவல்ல நன்மைகளை இழந்தே, அப்பகுதியினர் வாழ்ந்தனர். பன்னெடுங்காலமாக சரியான பாதை இல்லை என்றமைக்கு இப்பகுதியே எடுத்துக்காட்டு என்றாலும், இப்பகுதி சீர்படுமா என்று ஐயம் எழுந்ததேயின்றி, ஐயத்தைப் போக்கும் நிலைக்கு வழி வகுத்தவர் எவருமில்லை.

சமுதாயத் திட்ட வளர்ச்சி என்ற கதிரவன் தோன்றியதும் பாதை வகுக்க வழி பிறந்தது. உண்மைக்கு உழைக்கும் தூய கிராம சேவக் தொண்டர்களும், அதிபரும் ஒன்று கூடி, வெகு சிரமப்பட்டு மக்கள் வசிக்கும் இடம் சென்று பாதை அமைக்கும் வழி கோலினர். பாதை அமைக்கும் வழியறிந்தாலும், அந்தப் பிரதேசத்திலே அரசினர்க்குரிய பகுதியும் விவசாயிகளுக்குரிய பகுதியும், இடையே சிறு கால்வாய்களும் அவைகளைத் தொடர்ந்து முட்புதர்களும், பெரிய கற்பாறைகளும், சிறு சிறு மலைகளும், பள்ளங்களும் மேடுகளும் பின்னிப் பிணைந்து கிடந்தன. மேட்டை இடித்து, பள்ளத்தை நிரப்பி, முட் புதரை ஒழித்து, கற்பாறைகளை அகற்றி, அரசினர் இடத்தைப் பெற்றாலும், பன்னெடுங்காலமாக வளமாக்கப்பட்ட நிலங்களைப் பெறுவது அரிதென்ற அவலம் அவர்களை விட்டபாடில்லை.

எண்ணில ஆண்டுகளாகப் பாதையின்றி வேதனையுறும் விவசாய சமுதாயத்தினர் பலர் நிலமளிக்க உளங்கனியவில்லையென்றாலும், வட்டார வளர்ச்சி அதிகாரி விவசாயிகளை அன்பால் அணுகி, நட்பால் நவின்று, பண்பால் பழகி, பாதை அமைக்க வேண்டியதின் அவசியத்தை செவ்வனே விளக்கிக் கூறினார்கள். அதன்பிறகு, கிராம மக்கள் மனங்கனிந்து உருகி, உளமார பாதை அமைக்க தேவையான நிலங்களை உவகையுடன் அளித்தனர்.

முதலில் பிரமிப்புத்தான் தட்டியது!

சாலை அமைக்கும் வேலை முழு மூச்சுடன் தொடங்கியது. பாதை அமைக்கும் முறையைப்பற்றி சீர் பெற ஆராய்ந்தனர். அரசாங்க அதிகாரிகள், விவசாயிகளுடன் மனமொத்து கலந்து பேசி அவர்களின் உதவி கொண்டு பாதை அமைக்க திட்டம் தீட்டினர். நானும் அதன் பின்னர் நேரில் அங்கு சென்று பார்த்தேன். "எலியைப் பிடிக்க மலையை வெட்டுவதா" என்று எண்ணும்படியாக இருந்தது முதலில்! அவ்வளவு சிரமமான காரியமாகத் தென்பட்டது! இது நடை முறைக்கு இயலாத காரியம் என்றுதான் எல்லோரும் எண்ணினர் முதலில். ஆனால்,

"முயற்சி திருவினை ஆக்கும்" என்ற நன்னம்பிக்கை இதயத்தில் அரும்ப, எண்ணிய இன்னல் பலவரினும் அஞ்சற்க என்ற துணிவு கொண்டு உறுதியுடனும் ஊக்கத்துடனும் கிராம இளைஞர்களும், முதியவர்களும், வட்டார வளர்ச்சி அலுவலகத்தினரும், யானும் தெய்வத்திருவருளை வழிபட்டு ஆக்க வேலையில் துணிந்து இறங்கினோம். மனிதனின் உண்மையான முயற்சி பயன் அளிக்கத் தொடங்கியது. தோல்வி தோற்றோடியது. பாதை அமைக்கும் பணி தொடர்ந்து சீரிய முறையில் நடைபெற்றது.

கூட்டுமுயற்சியின் மகத்தான சாதனை

தினந்தோறும் 70 முதல் 100 பேர், இளைஞர்கள், முதியவர்கள் எல்லோருமாக சேர்ந்து இத்துறையில் முழு மூச்சுடன் பணியாற்றினர். கிராம மக்கள் திரண்டெழுந்து கூட்டாகப் பணியாற்றிய அந்தக் காட்சி நெஞ்சிலே என்னென்றும் பதிய வைத்துக்கொள்ளவேண்டிய காட்சியாகும். 1960 ஆகஸ்ட் 13-ம் நாள் இந்தச் சாலை அமைக்கும் வேலை தொடங்கியது. ஆகஸ்ட் 27-ம் நாள் சரியாக 14 நாட்களுக்குள், இந்த வேலை சிறப்பாக செய்து முடிக்கப்பட்டது என்றாலும், மீண்டும் ஆகஸ்ட் 28-ம் நாள் தொடர்ந்து மக்கள் இத்துறையில் இன்னும் பணியாற்றி வருகின்றனர்.

அறிவிப்பு—

புதிய தொடர் கட்டுரை

கடந்த சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, தமிழ் நாட்டின் பத்திரிகைத் துறையிலே சிறந்த தொண்டாற்றி, நிரம்ப அநுபவம் பெற்று அடக்கத்தோடு பணிபுரிபவர் **ஸ்ரீ வெ சாமிநாத சர்மா** அவர்கள். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் இவர் விளங்கியது யாவரும் அறிந்ததே. சரித்திரம், சமூகம், அரசியல், வாழ்க்கை வரலாறு போன்ற பல்வேறு துறைகளிலும் இவர் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் சுமார் எழுபதுக்கு மேல் இருக்கும். கவியரசர் பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை, திரு. வி. க., வ. வே. சு. அய்யர், சுப்பிரமணிய சிவா முதலிய தமிழ்ச் சான்றோருடன் நெருங்கிப் பழகிய முதுபெரும் கல்விச் செல்வர். **"கிராம நலத்தில்"** தொடர்ந்து கட்டுரை எழுத முன்வந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இத் தொடர் கட்டுரையின் தலைப்பு **"கிராம வாழ்க்கையும் காந்தியடிகளும்"** என்பதாகும். முதல் கட்டுரை **"கிராம நலம்"** 1961-ம் ஆண்டு ஜனவரி இதழில் வெளிவரும்.

ஆசிரியர், **"கிராம நலம்"**

முக்கிய அறிவிப்பு

அநேக பஞ்சாயத்துக்களிலிருந்து **"கிராம நலம்"** இதழை தங்களுடைய பஞ்சாயத்துக்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டு கடிதங்கள் "பொது ஜனத் தொடர்பு அதிகாரிக்கு" வருகின்றன. நகராட்சி, நாட்டாட்சி மன்றங்களின் மேற்பார்வையாளர் **(Inspector of Municipal Councils and Local Boards)** அனுப்புகின்ற பட்டியலில் கண்டுள்ள பஞ்சாயத்துக்களுக்கு **"கிராம நலம்"** இதழ் அனுப்பப்பட்டு வருகிறது. ஆகவே **"கிராம நலம்"** வேண்டும் பஞ்சாயத்துக்கள், நேரே, நகராட்சி, நாட்டாட்சி மன்ற மேற்பார்வையாளர் அலுவலகத்திற்கு தங்களுடைய வேண்டுகோளை அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் அந்த வேண்டுகோளின் பிரதி ஒன்றை "பொதுஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர்,
"கிராம நலம்"

காடுகளை அழித்து, மலையை வெட்டி, கல்லை உடைத்து இரண்டரை மைல் நீளம் மக்களே முன் வந்து பாதை அமைத்தமை பாராட்டற்குரியது. இதற்கான உழைப்பின் மதிப்பு ரூபாய் ஆராயிரம். கிராம மக்கள் அளித்த நிலத்தின் மதிப்பு ரூபாய் பன்னிரண்டாயிரம் (12,000). பஞ்சாயத்துத் தலைவர்கள் தீவிர பங்கெடுத்துக்கொண்டனர். மூங்கில்பட்டு பஞ்சாயத்து தலைவர் திரு. பூங்காவன கவுண்டர், விருப்பாட்சிபுரம் பஞ்சாயத்து தலைவர் திரு முனிரத்தினக் கவுண்டர், சொளைமேடு மாணிக்க கவுண்டர், நாய்யக்கனேரி பூங்காவனகவுண்டர் ஆகியோர்களை சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். வட்டார வளர்ச்சி அதிகாரி, கிராம சேவகர்கள், கிராம சேவகி மற்றும் சமூகக் கல்வி அதிகாரிகள் எல்லோரும் ஊக்கத்துடன் பாடுபட்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக, மக்கள் காட்டிய ஆர்வமும் ஒத்துழைப்பும் பாராட்டற்பாலது. சமூகத்தின் கூட்டு முயற்சி எல்லா முயற்சிகளிலும் தலையாய முயற்சியாகும். மக்கள் அறப்பணியின் நல்லொளி எங்கும் பரவிட பாடு படுவோம் என்று உறுதி எடுத்துக்கொள்வோமாக! கிராம மக்கள் ஒன்றுபட்டு பாடு பட்டால், அந்த வைரம் பாய்ந்த உழைப்பாளர் கூட்டம் உறுதியுடன் பாடுபட முன்வந்து விட்டால், பின்பு பாலைவனமாகக் கிடக்கும் இடங்களெல்லாம் சோலை வனமாக மிளிரத்தொடங்கிவிடாதா!

ஜப்பானிய சாகுபடி முறை பற்றி இந்தக் கட்டுரை ஆராய்கிறது :

சிறு கவனமும் பெரும் பயனும்

(ஸ்ரீ அ. ராமமூர்த்தி, ஆசிரியர், ஹரித்துவாரமங்கலம், தஞ்சை மாவட்டம்.)

1960–61-ம் வருஷத்தில் 32 லட்சம் ஏக்கரில் ஜப்பானிய முறையில் நெல் சாகுபடி செய்ய சென்னை சர்க்கார் திட்டமிட்டிருக்கின்றனர் என்ற செய்தியை விவசாயிகள் பத்திரிகைகளில் படித்திருக்கலாம்.

நமது ராஜ்யத்தில் சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் ஜப்பானிய முறை நெல் சாகுபடித் திட்டம் ஆரம்பமாகியது. ஏராளமான விவசாயிகள் இந்த முறையைக் கையாண்டு பெரும் பயன் அடைந்துள்ளனர் என்று நாம் அறிகிறோம்.

ஆயினும் இன்னும் பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் இம்முறையைப் பரீட்சித்துப் பார்க்காமலேயே இருந்து வருகின்றனர். இதற்குக் காரணம் என்ன ?

குறிப்பிட்ட ஒரு புது முறையைக் கையாள்வதற்கு முன்னால் அதனால் ஏற்படக்கூடிய இலாப நஷ்டங்களைப் பற்றி நிதானமாகச் சிந்தித்து ஆராய்ந்து தெளிவான முடிவுக்கு வரவேண்டும். பழைய முறையோடு புதிய முறையை ஒத்திட்டுப் பார்க்க வேண்டும். நிர்வாக வற்பாடுகளில் அவசியமான சாத்தியக் கூறுகளைப் பற்றி நன்கு யோசிக்கவேண்டும்.

சிறு அம்சமும் கவனிக்கப்படவேண்டும்

விவசாயம் என்பது ஒரு "**தொடர்ந்த கவனம்**" ஆகும். ஒவ்வொரு சிறிய அம்சமும் நல்ல கவனம் பெற்றால் பெரும்பயனை மொத்தமாகக் காணலாம். ஏனென்றால் பல சிறு அம்சங்கள் சேர்ந்துதான் மொத்தமாக உருவாகின்றன.

நல்ல கவனம் பெறாத ஒரு அதிக முதலீட்டை விட சிறந்த கவனம் பெற்ற ஒரு குறைந்த முதலீடு லாபகரமானது என்ற உண்மை வியாபாரத்திற்கு மட்டுமல்ல—விவசாயத்திற்கும் பொருந்தும். இந்த வழியில் ஜப்பானிய சாகுபடி முறைகளைப் பற்றி ஆராய்வோம்.

ஜப்பானிய சாகுபடி முறையில் அதிக உழைப்பும் கால தாமதமும் ஆவதாகப் பல விவசாயிகள் கருதுகின்றனர். உதாரணமாக வரிசை வரிசையாக நடுவதில் சிறிது அதிகமாகக் காலமும் கூலியும் செலவாவதைச் சுட்டிக் காட்டுகின்றனர். உண்மையில் இவ்வாறு கருதுவது போதிய ஆராய்ச்சியின்மையின் காரணமாகத்தான் !

விவசாயத்தில் வரிசைக் கிரமமான கீழ்க் கண்ட அம்சங்கள் சேர்ந்துதான் முடிவில் "மகசூல்" என்ற மொத்த உருவெடுக்கின்றன அல்லவா ?

(1) நிலத்தைப் பண்படுத்தல், (2) விதைத்தல், (3) நாற்று நடுதல், (4) முன்னும் பின்னும் உரமிடுதல், (5) களை யெடுத்தலும், பூச்சிகளை அழித்தலும், (6) சரியான நீராணிக்கம்.

மேற்கண்ட ஒவ்வொரு அம்சமும் சரியான கவனம் பெருவிட்டால், மகசூல் பாதிக்கப்படுமென்பது அனைவரும் அறிந்த விஷயமே.

இந்த சரியான சிறு அம்ச கவனத்தைத் தான் ஜப்பானிய முறை சாகுபடித் திட்டம் வற்புறுத்துகிறது என்பது ஊன்றிக் கவனிப்பவர்களுக்கு நன்கு புரியும்.

கால தாமதம் வேறு, கால விரயம் வேறு

சிறு அம்சங்களில் நல்ல கவனம் செலுத்தப்பட்டால் **கால தாமதம்** ஆகலாம். ஆனால் **கால விரயம்** ஆகாது என்பது மட்டும் நிச்சயம் !

ஆம் ! கால தாமதம் முக்கியமல்ல, கால விரயம் தான் கவனிக்கப்பட வேண்டியது அவசியம், உண்மையில் 'கால தாமதம்' என்பது வேறு—கால விரயம் என்பது வேறு ! கால் விரயம் தான் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று !

சரியான **காலமும்** சரியான **முறையும்** சேர்ந்தால்தான் நல்ல பயன் கிடைக்க முடியும். இவ்விரண்டும் ஒருங்கே சேர்ந்ததுதான் ஜப்பானிய சாகுபடி முறை. **சரியான முறையோடு சேராத காலமே கால விரயம் ஆகும்!**

சரியான காலத்தில் விதை விதைப்பதற்கு விவசாயிக்குத் தெரியலாம். ஆனால் அவன் உபயோகிப்பது தரமான விதைகள் தானா என்பதுதான் கேள்வி ! உரிய காலத்தில் விதைத்தாலும் உருப்படா விதைகள் எவ்வாறு நல்ல பயனைக் கொடுக்க முடியும் ? பொறுக்கியெடுத்த நல்ல தரமான விதைகளைத் தேர்ந்தெடுப்பது ஜப்பானிய சாகுபடி முறையின் முதல் அம்சமாகும்.

"எருவிட்டால் மட்டும் போதாது. எத்தகைய எருவை எந்த அளவு எந்த சமயத்தில் போடவேண்டும் ? " என்று திட்டம் கூறுகிறது.

"நான்கே நாட்களில் நட்டு முடித்து விட்டேன்" என்று பெருமைப்பட்டுக் கொள்வதைவிட "எப்படி நட்டேன்" என்று சிந்திப்பதே விவசாயிக்குப் பயன் தரத்தக்கதாகும் என்று அது எடுத்துக் காட்டுகிறது.

" களையெடுப்புக் கூலிக் கணக்கு மட்டும் அதனுடைய உண்மைப் பயனை முடியாது " என்று அத்திட்டம் சொல்லாமல் சொல்லுகிறது.

விவசாயத்தில் " **சிறு அம்சங்களில் சிறந்த கவனம் செலுத்தாத** " விவசாயிக்குத்தான் " **உழுதவன் கணக்குப்** பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது " என்ற பழமொழி பொருந்தும் !

பல துளி சிறு வெள்ளம். **விவசாயத்தில் சிறு கவனம்** பெரும் பயனைகும்.

அரசாங்க விவசாயத் துறையினர் தாங்கள் செய்த பல்வேறு பரிசோதனைகள் மூலம் அனுபவ ரீதியாக ஜப்பானிய சாகுபடி முறையை ஆராய்ந்து அதை நமது ராஜ்யத்திற்கு ஏற்ற முறையில் அமைத்துள்ளனர்.

நல்ல தரமான விதைகளை உபயோகிப்பது, போதுமான அளவு உரமிடுவது, வரிசை வரிசையாக நடுவது (பத்தி நடவு), ஊடு சாகுபடி செய்வது போன்ற பல்வேறு " **சிறு சிறு அம்ச சிறந்த கவனமே** " இம் முறையின் அம்சங்களாகும். விவசாயிகளுக்குப் பெரும்பயனை ஜப்பானிய முறை சாகுபடித் திட்டம் அளிக்க வல்லது என்று அனுபவம் நமக்குப் படிப்பிக்கின்றது.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் விவசாய இலாகா பணியாளர்கள் இம்முறையைப் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்ல நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நம்மிடம் வரும் வரையில் காத்திராது நாமே அவர்களை நாடி அவர்களது ஆலோசனைகளைப் பெறலாம்.

சிக்கனம் சிறந்த பயன் கொண்ட முறை

இத்திட்டம் ஆரம்பமானதிலிருந்து இதுவரை சுமார் 33 லட்சம் ஏக்கர் நிலப் பரப்பில் இம்முறை கையாளப் படுகிறது. அடுத்து வரும் ஆண்டில் மேலும் 32 லட்சம் ஏக்கரில் இம்முறை அனுஷ்டிக்கப்பட அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. " சிக்கனமும் சிறந்த பயனும் " கொண்டது ஜப்பானிய சாகுபடி முறை என்பது அநேகமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் சில தாலுக்காக்களில் அமெரிக்க போர்டு ஸ்தாபன உதவியுடன் தீவிர விவசாய உற்பத்தித் திட்டம் அமுலுக்கு வந்திருப்பதால் அத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் பெரும்பயனடைவர் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது. விவசாயிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வார்களாக !

" சிறு சிறு அம்ச சிறந்த கவனமே பெரும் பயனை விளையும் " என்பது விவசாயிகளுக்கு ஒரு நிரந்தரமான பொன் மொழியாகும்.

கிராமியப் பாடல்கள்

(ஒரு வேண்டுகோள்)

தமிழ்நாட்டு கிராமியப் பாடல்களைப் பற்றிய கட்டுரைகளை " **கிராம நலத்தில்** " அவ்வப்பொழுது வெளியிட்டு வருகிறோம். கிராமியப் பாடல்கள் கிராம மக்களின் இதயத் துடிப்பை தெள்ளெனக் காட்டுகின்றன. ஊர் பேர் தெரியாத நாடோடிக் கவிஞர்கள் எத்தனையோ பேர் எத்தனையோ பாடல்களை பாடிவிட்டுப் போயிருக்கலாம். இந்த நாட்டின் பண்பு, கலாச்சாரம் ஆகியவற்றின் பிரதிபலிப்பாக விளங்கும் " கிராமியப் பாடல்கள் " எல்லாவற்றையும் எப்பாடுபட்டாவது சேகரித்தாகவேண்டும். புராதனக் கிராமியக் கலைகள் இந்த நாட்டின் விலை மதிக்க முடியாத சொத்து. அவைகளைக் கண்ணேபோல் காக்கவேண்டும். இந்தத் துறையில் தன்னாலான சிறு பணியை " **கிராம நலம்** " செய்யக் காத்துக்கொண்டிருக்கிறது. இந்த வகையில் '' **கிராம நலத்தை" ஊக்குவிக்க வேண்டியது** யது தமிழ்ப்பெரு மக்களேயாவார்.

" கிராமியப் பாடல்கள் " பற்றி ஆராய்ந்து பரிசீலனை செய்ய அமைக்கப்பட்ட கமிட்டி 1960-ம் ஆண்டு மார்ச்சுமீ 5உல் கூடி ஒரு நல்ல முடிவை எடுத்தது. அதன்படி வட்டார அலுவலகங்கள், கிராம வளர்ச்சி பயிற்சி நிலையங்கள், மாதர் நிலயங்களைச் சேர்ந்த செய்தி நிலையங்கள் அத்தனையும் இந்தத் துறையில் ஈடுபட்டு கிராமியப் பாடல்களை அந்தந்தப் பிரதேசங்களில் சேகரித்து, அவைகளை " **கிராம நலத்** "திற்கு அனுப்பிவைக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது அந்த முடிவாகும். அரசாங்கம் இந்த முடிவை ஒத்துக்கொண்டுள்ளது. அதன்படி மாவட்டக் கலெக்டர்கள், கிராம வளர்ச்சி பயிற்சி நிலையங்களின் தலைவர்கள், மாதர் நலத் துறைத் தலைவர் ஆகியோர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இந்த முறையில் அவர்கள் நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளவேண்டும். அப்படிச் சேகரிக்கின்ற கிராமியப் பாடல்களை பிரசுரத்திற்காக "**கிராம நலத்**"திற்கும் '' **சௌபாக்கியத்திற்கும்** " அனுப்பி வைக்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

இது ஒரு அரிய வாய்ப்பாகும். இந்த வாய்ப்பினை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சீரிய முறையில் பயன்படுத்திக் கொள்வார்களென எதிர்பார்க்கிறோம். " கிராமியப் பாடல்களை " சேகரிப்பதில் தீவிரக் கவனம் செலுத்தி, " **கிராம நலத்** "திற்கு அவைகளை உடனுக்குடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். கிராமியக் கலைகள் மங்கிப் போய்விடாமல், மறுபடியும் அவைகளுக்கு புத்துயிர் ஊட்டி, மலரச் செய்யவேண்டியது எல்லோருடைய கடமை என்பதை மறுபடியும் ஒரு முறை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறோம்.

ஆசிரியர்,
" **கிராம நலம்** ".

பிள்ளையா? தொல்லையா?

R.P

திரு அ. கேசவமூர்த்தி, எம். ஏ.

காட்சி 1

இடம்.—திருமண வீட்டின் ஒரு பகுதி.

உறுப்பினர்.—பரமசிவம், மனேகர்.

மனேகர்.—பரமசிவம்! திருமணம் எப்படி? எல்லாம் ஒரே புரட்சிமயமாக இருக்கிறதே!

பரமசிவம்.—புரட்சியில்லே மனேகர்! மங்கலகாரியத்தில் வறட்சி என்று சொல்; பொருத்தமாக இருக்கும்.

மனே.—அப்பா பரமசிவம்! நீ எப்போதுமே பழைய பரமசிவம்தாம்பா! எந்த ஏற்பாட்டிலே குறை என்று கேட்கிறேன்?

பர.—கலியாண வீட்டிலே பாடுகிற பாட்டா அது?

மனே.—பொருத்தமான இடத்திலே திருத்தமான வேலே அது! புது மணமக்களை—வாழ்வின் வளத்தை—இன்பத்தை நுகரத் துடிப்பவர்களை வைத்துக் கொண்டு எப்படியெல்லாம் மருட்டி மிரட்டுகிருர்கள்! சம்சாரம் ஒரு சாகரம்; மாயை, மாயை, எல்லாம் மாயை; எனக் கூறி மணமக்களது மகிழ்ச்சியில் மண்ணைப் போடுவதைவிட இந்த ஏற்பாடு இனிமையானதென்பதே என் கருத்து.

பர.—குடும்பக் கட்டுப்பாட்டுக் கூட்டத்திலே பாடவேண்டிய பாட்டா அது! திருமண மண்டபத்திலே எத்தனை பேரை திருதிருவென விழிக்க வைத்தது அது?

மனே.—புரட்சி புரட்சி என்று மிரட்சியடைகிருயே, நாட்டிலே உள்ளதைத்தானே அந்தப் பாட்டு காட்டுகிறது. நீதான் திருப்பிப் பாடேன், உனக்குத்தான் பாகவதர் பரமசிவம் என்ற பட்டமும் உண்டே!

பர.—" ஆஸ்பத்திரியை ".

மனே.—அதில்லே! தொடக்கம் வேறே!

பர.—" ஆப்ரேஷனை "

மனே.—அட பழைய பரமசிவம்! அதுவுமில்லேப்பா!

பர.—ஞாபகசக்தி முன்புமாதிரி இல்லேப்பா—குழந்தை குட்டிக பெருகிட்டதில்லே! நீதான் தொடங்கேன்

மனே.—" அரசமரத்தைச் சுற்றியதும்
அடிவயிற்றைப் பற்றியதும்
அந்தக்காலம்—அது—அந்தக் காலம்" (2 முறை பாடல்).

பர.—அடுத்தது நினைவில்லேன்னு அதையே பாடுவதா?

மனே.—நீதான் சொல்லேன் அடுத்த பகுதியை.

பர.—" ஆஸ்பத்திரியை தேடுவதும்
ஆப்ரேஷனை நாடுவதும்
இந்தக் காலம்—இது—இந்தக் காலம்."
(2 முறை)

" ஊசி மருந்துக்காக "

மனே.—என்னப்பா " தணிக்கை " பண்ணிட்டையே ஒரு பகுதியை; பரமசிவம் சென்சார் போர்டா?

பர.—" இரட்டையர்கள் " என்று நம்மைச் சொல்வார்கள் இல்லையா? எனவே நீயே பாட்டை முடித்துவிடு!

மனே.—" காசி ராமேஸ்வரம் காணத்தவித்தது
அந்தக் காலம்—அது—அந்தக் காலம்"
(2 முறை)

பர.—"ஊசி மருந்துக்காக ஊரெல்லாம் அலேவது
இந்தக் காலம்—இது— இந்தக் காலம்"
(2 முறை)

மனே.—கலியாண வீடுகளிலே உன் காலட்சேபத்தை வைத்துவிட்டால், கனகச்சிதமாய் இருக்கும்போலிருக்கே; உன் சாரீரப் பொருத்தம், சரீரப் பொருத்தம்..........................

பர.—சரீரம் சரிந்து எவ்வளவோ காலமாச்சு மனேகர்!

மனே.—அதைத்தான் முன்பே கேட்க நினைத்தேன் பரமசிவம். ஏன் இப்படி இளைத்துக் களைத்து நொடித்துப் போனுய்?

பர.—குடும்பம் பெரியது; குழந்தைகள் பல; எனவே குழப்பங்களும் பல.

மனே.—என்ன பரமசிவம் என்னிடமே ஏமாற்றுகிருயே? உனக்குக் குழந்தைகள் இப்போது எத்தனை?

பர.—ஐந்து குழந்தைகள்.

மனோ.—(குறுக்கிட்டு) பரமசிவம்! உன் திருமண அழைப்பே என்னிடம் இருக்கு; 1956 ஜனவரியிலே தானே உன் திருமணம்; ஆண்டு 5; குழந்தைகள் 5; எப்படியப்பா முடியும்?

பர.—மனோகர்! ஏனப்பா என் மன வேதனையைக் கிளறுகிறாய்? ஐந்து ஆண்டும் ஐந்து பேறுகாலம்; மொத்தம் ஐந்து!

மனோ.—(கிண்டலாக) "எண்ணி எண்ணிப் பார்க்க மனம் இன்பம் கொண்டாடுதே!"

பர.—(குறுக்கிட்டு) கேலியாக இருக்கிறதா உனக்கு? தாலி அறுகிறது எனக்கு! குழந்தை பிறப்பது நம்ம கையிலா இருக்கு மனோகர்?

மனோ.—(கிண்டலாக) குசேலர் 27 குழந்தைகள் பெற வில்லையா!

பர.—ஐந்தாண்டில் 5 குழந்தைகள் என்றால் முடிவில் எத்தனையோ?

மனோ.—(கிண்டலாக) 100 குழந்தைகள் பெற்றான் திருத ராஷ்டிரன்; பிறவிக் குருடனுக்குப் பிள்ளை 100 என்றால் அதைவிடக் குறைவாயிருப்பது நமக்குப் பெருமை தருமா? "உள்ளுவதெல்லாம் உயர் வுள்ளல்" என்று வள்ளுவரும் சொல்லியிருக் கிறாரே!

பர.—மனோகர்! நீ என்ன நினைத்தாலும் சரி! இந்தியாவுக்கு உலக மன்றத்தில் இவ்வளவு செல்வாக்கு இருக்கக் காரணம் நமது தொகை 40 கோடி என்பதே.

மனோ.—சீனாவுக்கு அடுத்தபடியாக மக்கள் தொகை மிக்க நாடு இந்தியாதான்; (கிண்டலாக) சீன—இந்தியச் சிக்கலுக்கு இதுவும் ஓர் காரணம் என்று சிலர் சொல்லுவதிலும் உண்மை இல்லாமலில்லை!

பர.—உலகில் ஏழு மனிதரில் இந்தியன் ஒருவனுமே!

மனோ.—தொகை, வலிமையின் வகையிலே ஒன்று.

பர.—இல்லையென்றால் ரஷ்யாவிலே பல குழந்தைகளைப் பெற்ற பெண்களுக்குப் பட்டமும், பரிசும் தருவார்களா? இங்கிலாந்திலேகூட "இங்கிரிமெண்ட்" தருகிறார்களாமே!

மனோ.—இங்கிரிமெண்ட்டா?

பர.—ஆமாம் மனோகர்! குழந்தையின் தொகை கூடக் கூட ஊதியமும் அங்கு உயருகிறதாம்.

மனோ.—பிள்ளைச் செல்வம் என்பது அங்குதான் நடை முறையில் இருக்கிறது.

பர.—அங்குள்ள அரசாங்கம் பிள்ளை பெறுவோருக்குப் பரிசு, பட்டம் ஆகியவை தரும்போது, இங்குமட்டும் ஏன் குழந்தைகளை குறையுங்கள் எனக் கூறுகிறது?

மனோ.—படித்த நம்போன்றோர் பகுத்தறியாவிடில் பாமரரைப்பற்றி என்ன சொல்ல முடியும்? மேனாட்டு நிலை வேறு; வாழ்க்கை வசதிகள், வாய்ப்புகள், வளங்கள்—நிரம்ப உண்டு அங்கே! காரும் ரேடியோவும் டெலிவிஷனும் அங்கே எங்கும் காணலாம்! நம் நாட்டு நிலை வேறு. பஞ்சம், பசி, பட்டினி என்று மக்கள் நெஞ்சம் பதறும்போது, வறுமை வாட்டும்போது, பிணிகள் தாக்கும்போது, நிலமில்லை, வளமில்லை என்னும் ஏக்கம் எழும்பும் போது—மக்கள் தொகை கூடினால் சிக்கலும் கூடும்.

பர.—அமெரிக்காவிலே குழந்தைகள் பிறப்பு குறை கிறதாமே! அட அமெரிக்காவே!

மனோ.—பிள்ளைப் பெருக்கத்திற்குக் காரணம் வாழ்வில் வளமில்லாததுதான். ஆரம்பப்பள்ளி ஆசிரியர், எழுதுகோல் ஏந்தும் கிளார்க்—ஆகியோருக்கு வாழ் வில் காணும் இன்பம், களிப்பு, சுவை எல்லாம் வீட்டிலேயே அடங்கிவிடுகிறது. திரைப்படம், வா னொலி, நாடகம், உல்லாசப் பயணம் முதலியன தரும் இன்பத்தை, வீட்டிலேயே பெற வேண்டிய வறுமை நிலை; எனவே பிள்ளைகள் பெருகுகின்றன.

பர.—இதைப்பற்றி எண்ணி நாம் என்னப்பா செய்ய முடியும்?

மனோ.—"எண்ணித் துணிக கருமம்"; செயலுக்கு விளைவுண்டு; எனவே எச் செயலையும் எண்ணி ஆராய்ந்து செய்ய வேண்டும்.

பர.—அறிவு அகன்று, உணர்ச்சி ஓங்கும் நிலையல்லவா இந்த விஷயம்?

மனோ.—உண்மைதான்; எனவேதான் மருந்து, மாத் திரை, ஊசி முதலியன பற்றிப் பேசப்படுகிறது.

பர.—இயற்கைக்கு மாறானதாயிற்றே அது?

மனோ.—பரமசிவம்! எது இயற்கை? பிறக்கும்போது ஆடையில்லை இப்போது அணிகிறோம்; இது இயற் கைக்கு முரண் இல்லையா? மரத்தடியிலே வாழ் வதை விட்டு மாளிகையிலே வாழ்கிறோமே இது இயற்கையை மீறுவதில்லையா? குடை, செருப்பு இவை கூடாது—இயற்கையை மீறக் கூடாது என்றால்! பச்சைக் காய்கறிகள்தான் உண்ணவேண்டும்— பதப் படுத்தி பக்குவமாய் உண்ணக்கூடாது; ஷேவிங் ஸிராப் இவை சிறிதும் கூடாது. இரவிலே விளக்கு வைக்கக் கூடாது-இயற்கையை மீறித்தானே கண்ணைப்பறிக்கும் மின்சார விளக்கேற்றுகிறோம்! ஆஸ்பத்திரி—இயற் கையை எதிர்க்கும் நிலையம்! நோய் வந்தால் அதன் போக்கில் விட்டுவிடுவதுதானே இயற்கை; இடி தாங்கி அமைக்கிறார்களே கட்டிடத்தில்; அது இயற் கைக்கு மாறுபாடுதானே!

பர.—என்ன மனோகர்! இயற்கையும் செயற்கையும் பற்றி உன் கைவரிசையைக் காட்ட நினைத்து விட்டாயா?

மனோ.—இல்லை பரமசிவம்! தன் வசதிக்காக எதற்கும் பொருத்தமான விளக்கம் தருவது மனித இயற்கை.

பர.—மனேகர்! இச்சிக்கல் தீர என்னதான் வழி?

மனே.—உண்டு. "மனமிருந்தால் மார்க்கமுண்டு" மூன்று குழந்தைகளைப் பெற்றதும் குடும்பக்கட்டுப் பாட்டு முறையைக் கைக் கொள்வதே குழப்பத்தைத் தீர்க்கும் வழி.

பர.—பழங்காலத்தில் இச்சிக்கல் இல்லையே—இப்போது மட்டும் "மக்கள் தொகை, மக்கள் தொகை" என்று மருள்கிறார்களே, ஏன்?

மனே.—அந்தக் காலத்து நிலை வேறு; போர்கள் பல இலட்சம் மக்களைப் பலி வாங்கின; நோய்களுக்கு இரையாகி நொந்துமடிந்தவர்கள் அளவற்றவர் இப்போது அவ்விரண்டிற்கும் அவ்வளவு வேலை இல்லாததாலேயே இச்சிக்கல்.

பர.—நாம் மட்டும் பேசி என்ன செய்வது?

மனே.—சலிப்பு வேண்டாம் பரமசிவம். வீடும் நாடும் இது பற்றி விளக்கம் பெற வேண்டும்.

பர.—(சிந்தனையுடன்) நல்லது மனேகர்! நான் வருகிறேன்.

மனே.—(கிண்டலாக) பஞ்ச சீலத்தோடு நின்றுவிடுமா?

பர.—நெஞ்சம் திறந்து சொல்வதென்றால், அதுவே என் திட்டம். ஆனல். . . .

மனே.—என்னப்பா இழுக்கிறாய், ஆனல் என்று. . .

பர.—வீட்டிலே இது பற்றி . . . . .

மனே.—உணர்ச்சியின் வடிவம் பெண்; அறிவோடு அளவோடு செயலாற்றுவது ஆடவன் கடமை. பிள்ளைகளைப் பெறவே பெண் துடிப்பாள்; ஆனல் தொல்லைகளை வளர்க்க ஆண் துணையாகக் கூடாது.

பர.—(சிந்தனையோடு) சரி, சந்திப்போம்.

மனே.—வணக்கம்.

காட்சி 2

இடம்: பரமசிவம் வீடு. இரவு மணி 10.

உறுப்பினர்: பரமசிவம், அவன் மனைவி பாக்கியலட்சுமி.

பரமசிவம்.—(மனைவி வர) அம்மா பாக்கியம்! அடியேனுக்குத் தெரிசன பாக்கியம் இரவு 10 மணிக்காவது கிடைத்ததே!

பாக்கியலட்சுமி.—(சலிப்புடன்) நான் என்ன செய்வது? ஐந்து பிள்ளைகளும் அடங்குகிறார்களா என்ன! ஒன்று சாப்பாடு என்றால் இன்னென்று கூப்பாடு போடுகிறது; பள்ளிக்குப் போன பிள்ளை கன்னத்தைக் கிள்ளி விட்டான் எனக் கதறுகிறது; தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தேன். அதற்குள் கட்டிலில் படுத்திருந்த பிள்ளை கவிழ்ந்து விழுந்து விட்டது.

பர.—அது சரி. ஏன் இன்று ரஸம் துவையலோடுமுடிந்து விட்டது?

பாக்.—குழந்தைகளைக் கட்டி மேய்க்கவே நேரமில்லை. கைக்குழந்தைக்குக் காய்ச்சல். மூத்த பிள்ளை மூச்சு விட முடியாமல் திணறுகிறான். . . .

பர.—நமக்கும் இனி மூச்சு விடமுடியாது போலிருக்கே, பாக்கியம்!

பாக்.—புரியும்படியாத்தான் சொல்லுங்களேன்.

பர.—குடும்பக் கட்டுப்பாடு இல்லாத குறைவினலே வந்த வினைதான் இது.

பாக்.—(பதறி)கட்டுப்பாடு இல்லையா? நமது குடும்பத்திலே கட்டுப்பாடு இல்லையா? ஊரெல்லாம் நம் குடும்பத்தை உயர்வாகப் பேசும்போது, குடும்பத்தில் கட்டுபாடில்லை என்பது முறையா, அத்தான்?

பர.—பதறாதே பாக்கியம்! குழந்தைகள் தொகையை அளவோடு கட்டுப்படுத்துவதே குடும்பக்கட்டுப்பாடு என்பதற்கு அர்த்தம்.

பாக்.—(சிரித்தவாறே) உங்கள் அர்த்தமும் அனர்த்தமும்! குழந்தைகள் பிறப்பதைக் கட்டுப்படுத்த மனிதனல் ஆகுமா? ஆக்குவதும் ஆண்டவன்; காப்பதும் கடவுளே; கவலை நமக்கு எதற்கு?

பர.—சற்று சிந்தித்துப் பார் பாக்கியம்! ஐந்து ஆண்டிலே ஐந்து குழந்தைகள்; இதே நிலை தொடர்ந்தால் நம்மால் தாங்க முடியுமா?

பாக்.—ஐந்து பிறந்ததும் அலறுகிறீர்களே! "பதினறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க" என்றல்லவா திருமணத்திலே வாழ்த்துகிறார்கள்.

பர.—பதினறு— குழந்தைகளைக் குறிக்காது—செல்வங்களைக் குறிக்கும்!

பாக்.—என் குழந்தைகள் செல்வமில்லையா?

பர.—செல்வம்தான்; அளவோடிருந்தால்!

பாக்.—எதற்கெடுத்தாலும் அளவு, அளவு!

பர.—"அளவுக்கு மீறினல் அமிர்தமும் நஞ்சு".

பாக்.—என்னதான் செய்யச் சொல்லுகிறீர்கள்?

பர.—எண்ணிப் பார்க்கச் சொல்லுகிறேன்.

பாக்.—(கிண்டலாக) எதை? நம்ம குழந்தைகளையா!

பர.—வேடிக்கையாக இருக்கிறது இப்போது; வேதனை விடாது முடிவிலே.

பாக்.—விளக்கமாகச் சொல்லுங்களேன்.

பர.—நீயே சற்று நினைத்துப்பார். குழந்தைகள் இரண்டு மூன்று என்று இருந்தால் எவ்வளவு முறையாக வளர்க்கலாம்; நமது உடல் நலமும் கெடாது; மூன்று ஆண்டிலே உன் உடல் பாதியாகி விட்டதே.

பாக்.—உடம்பை குழந்தைகளுக்கு கொடுத்தாகிவிட்டது. ஏன், உங்க உடம்பு?

பர.—அதையும் குழந்தைகள் கெடுத்தாகிவிட்டது. சம்பளம் 100 ரூபாய், 7 பேர் இதில் உயிர் வாழ வேண்டும்; குழந்தைகளை நோயிலிருந்து காத்து, படிக்க வைத்து, நல்லாடை அணிவித்து, நல்லுணவு தந்து ஆளாக்க வேண்டும்— இந்த 100 ரூபாய் கொண்டே.

பாக்.—மரம் வைத்த மகான் தண்ணீர் விடாமல் தவிக்கவா விடுவான் ?

பா.—காரியம் செய்வது மனிதன். இருந்தாலும் கடவுள் மீது பாரத்தைப் போடுவது அவன் வழக்கம்.

பாக்.—(கொஞ்சலாக) அத்தான் ! நீங்கள் ஏன் இப்படி வருந்த வேண்டும் ; தங்கள் சித்தம். . .

பர.—" அடியேன் பாக்கியம் " !

பாக்.—போங்களத்தான், குறும்புக்கொன்றும் குறைச்சல் இல்லே !

பர.—எதற்குத்தான் குறைச்சல் ? ஆண்டு 5—குழந்தை 5 அரசாங்கம் 30 ரூபாய் அன்பளிப்பு தருகிறது, பாக்கியம் ! அதைப் பெற்றுக் கொண்டு ஆவன செய்வதே நமது பாக்கியம் !

பாக்.—(அலறி) ஆஸ்பத்திரியாம், ஆப்பரேஷனும் ; அதுவா ?

பர.—ஆஸ்பத்திரி என்றதும் அலறுகிறுயே ! அதுதானே ஆபத்சகாயம் !

பாக்—இது ஆண்டவனுக்கு அடுக்குமா ?

பர.—இந்தப் பத்தாம்பசலிப் போக்கு உன்னை விடாது ; "பழையன கழிதலும் புதியன புகுதலும்" தவறு காது ; அளவாகக் குழந்தைகள் பெற்று அறிவாக வளர்ப்பதை ஆண்டவன் வெறுக்கமாட்டார்.

பாக்.—என்னை என்ன பண்ணச் சொல்றீங்க ?

பர.—பழையபடியும் சொல்லணுமா ? சம்பளம் அளவு—பிள்ளைகள் அளவு— தொல்லைகள் அளவு—இவற்றை எண்ணிப்பார். தொகை குறையாவிட்டால் வாழ்வில் வகையே இல்லை.

பாக்.—அப்ப நான் வரட்டுமா ?

பர.—(குழைவோடு) கேட்கணுமா ? வாயேன் !

பாக்.—கதைகதையாய் சொல்லிவிட்டு கடைசியிலே கட்டுப்பாடு இல்லாமே. . . .

பர.—அடி பாக்கியம் ! இல்லற இன்பத்தை இழப்பதல்ல —குடும்பக்கட்டுப்பாடு ; இல்லற இன்பத்தை பெற்றும் குழந்தைகள் பெருதிருக்கும் வழியே குடும்பக் கட்டுப்பாடு !

பாக்.—தங்கள் சித்தம் !

பர.—அடியேன் பாக்கியம் !

காட்சி 3

இடம் : திருமண மேடை ; பரமசிவம் சொற்பொழிவு.

பரமசிவம்.—பெரியோர்களே ! தாய்மார்களே ! மணமக்களை வாழ்த்திப் பலர் பலவாறு பேசினுர்கள் ஆனல் எனது அனுபவத்தில் கண்ட ஓர் உண்மையை இது போன்ற இடங்களில் எடுத்துச் சொல்வதே நாட்டுக்கு நாம் செய்யும் நல்ல தொண்டு என்று எண்ணுகிறேன். " பதினறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க " என்றுர் ஒரு அன்பர். பதினறு என்பது பிள்ளைகள் அல்ல—16 வகைப்பட்ட வாழ்வு வளங்களை குறிக்கும் என்ற விளக்கமும் தந்தார் ; அதற்காக நமது நன்றி அவருக்கு உரியதாகும்.—

மணமக்கள் வாழ்நாள் பெருகட்டும் ; வெற்றி பெருகட்டும் ; ஆனல் ஒன்று, இல்லம் மட்டும் பிள்ளைகளால் பெருக வேண்டாம். பிள்ளைகள் பெருகினல் தொல்லைகள் பெருகும் என்பதைக் கண்கூடாகக் கண்டவன் நான். பாரதி பாடினர் " 30 கோடி மக்கள் சமுதாயம்—ஒப்பிலாத சமுதாயம் " என்று ; அவர் காலத்தில் பாகிஸ்தான் பிரிக்கப்படவில்லை ; ஆனல் இன்று இந்தியாவின் தொகை மட்டும் 40 கோடி !

உற்பத்தி பெருக வேண்டும்; உற்பத்தி பெருக வேண்டும் என்று உரத்த குரலில் தலைவர்கள் சொன்னல் உண்மையில் நாம் காணும் முன்னேற்றம் இத்துறையில் தான் இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டம் நாட்டுக்கு இந்நிலையில் என்ன நன்மையைச் செய்ய முடியும் ? அணைக்கட்டு ஒன்று கட்டுவதற்குள் இங்கு மணைக்கட்டு ஆயிரம் கட்ட வேண்டியுள்ளது. ஒரு ஊருக்கு மின்சாரம் போடுவதற்குள் இங்கு ஓராயிரம் ஊர்கள் இருளடைந்து விடுகின்றன. மக்கள் பெருகுவது போல் வயலும் வரப்பும், காடும் கழனியும், தோப்பும் துரவும், பெருகவில்லையே ! மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தவில்லையென்றுல் இந்த நாட்டுக்கு வளமான வருங்காலமே இல்லை. இரண்டு குழந்தைகள் போதும் என்று எண்ணுபவர் நாட்டுக்கு மாபெரும் தொண்டுசெய்கிறுர்; 3 மூன்று குழந்தைகள் போதும் என்று முடிவுசெய்யாதவர் நாட்டை நலிவடையச் செய்பவர் ஆகின்றுர். நான்கும் ஐந்தும் பெறுவோர், நாட்டுக்கு நாசம் புரிவோரேயாவர்.

" அரசமரத்தைச் சுற்றியதும்
அடிவயிற்றைப் பற்றியதும்
அந்தக்காலம்—அது—அந்தக்காலம் ",

" ஆஸ்பத்திரியைத் தேடுவதும்
ஆப்பரேஷனை நாடுவதும்
இந்தக் காலம்—இது—இந்தக்காலம்."

" காசி ராமேஸ்வரம் காண தவித்தது
அந்தக் காலம்—அது அந்தக்காலம் ",
" ஊசி மருந்துக்காக ஊரெல்லாம் அலேவது
இந்தக்காலம்—இது இந்தக்காலம் ".

(கைத்தட்டல்)

(மனேகர் கூட்டத்தை விட்டு வாட்டத்துடன் வருகிருன்.)

மனே.—என்னப்பா பரமசிவம் வெளுத்து வாங்கிட்டையே!

பர.—வா மனேகர் வா! நலம் தானு? எல்லாம் உன் போதனே தானே!

மனே.—இருக்கிறேன் பரமசிவம்!

பர.—என்ன மனேகர் சலிப்பு; என்ன உடம்பு இப்படி இளேத்துவிட்டது? குழந்தை எத்தனே? குடும்பம் எப்படி?

மனே.—எல்லாவற்றுக்கும் ஒரே பதில்—அது நீ கேட்ட அனேத்திற்கும் விளக்கம் தரும்—குழந்தைகள்—9!

பர.—நவமணி என்று சொல்! 9 குழந்தையா? "படிக்கிறது ராமாயணம் இடிக்கிறது பெருமாள் "கோயில்" என்பது சரியாகப் போய்விட்டதே!

மனே.—நான் என்ன செய்வது பரமசிவம்! என் மனேவியின் சாதகம் அப்படியாம்! அதனுல்தான் அவ பெயரே அப்படி வைத்தார்களாம்!

பர.— எப்படி?

மனே.—சந்தான லட்சுமி!

பர.—(சிரித்தவாறே) என் மனேவி பெயர் கூடப் பாக்கிய லட்சுமி தான்! அதனுலே பாக்கியம் குறைந்தா போயிடும்! வெள்ளேச்சாமி என்பது பெயர்—காகத்தின் வெள்ளேயை அவனிடம் காணலாம்! சுந்தரி என்பது பெயர்—சுருண்டு விழுந்து மருண்டு ஓட வேண்டும்—அவ்வளவு விகாரம்!

மனே.—நீ பெரிய பேச்சாளியாயிட்டையே!

பர.—பேச்சு மட்டுமல்ல—செயாலாளியும் தான்! எல்லாம் உன்னுலேதானே! நீ ஊட்டிய உணர்ச்சி, நீ காட்டிய வழி தானே!

மனே.—"சொல்வது யார்க்கும் எளிது அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" என்பது சரியாகி விட்டது

பர.—வள்ளுவரை, " பொய்யில் புலவர் " என்று உலகம் கூறுவதற்கு நீ இவ்வாறு வாழ்ந்து காட்டுகிருய் போலும்!

மனே.—இன்றைய உனது பேச்சு மனமயக்கத்தைப்போக்கும் வாள் வீச்சு!

பர.—3 குழந்தைக்கு மேலிருந்தால் அரசாங்கம் வரி விதிக்க வேண்டும்; குழந்தைகளின் தொகை கூடக் கூட வரியின் அளவும் கூட வேண்டும்.

மனே.—அது மாத்திரமல்ல! மக்கள் தொகை பெருகுவது மாபெரும் நோய் பரவுவது போலாகும்; நோய்த் தடுப்பூசிகளே இன்று நாட்டில் போடுவது போல, 3 குழந்தைகளேப் பெற்ற பெற்றேருக்கும் அரசு ஆவன செய்தாக வேண்டும்.

பர.—நீ சொல்லுவது புதுமையாகத் தோன்றுகிறது—இன்று புற்றீசல் போல "பொலபொலவெனகலகலவென" புறப்படும் இப் பெருஞ் சிக்கலேத் தீர்க்காவிடில் உலகில் அமைதியே இருக்காது.

மனே.—(அவசரமாக) வருகிறேன், நேரமாகி விட்டது பரமசிவம்.

பர.—என் அவசரம்?

மனே.—உலக அமைதி என்ருயே! வீட்டில் அமைதி இருந்தால்தானே நாட்டில் அமைதி தவழ முடியும்! நான் போவதற்குள் வீடு போர்க்களம் தான்; 9 பிள்ளேகள்; எனவே 9 தொல்லேகள்!

பர.—என் உன் மனேவி பார்த்துக் கொள்ளமுடியாதா?

மனே.—அவளேத்தான் இந்த நவக்கிரகமும் நன்ருகப் பார்க்கின்றனவே!

பர.—நவ மணி—நவக்கிரகமாகிவிட்டதா?

மனே.—அவள் என்னதான் செய்வாள் பாவம்! 8 திசையிலிருந்தும் 8 குழந்தைகள் கட்டும், முட்டும், கதறும், பதறும். ஒன்பதாவது குழந்தை ஊளேயிட்டால் இவள் உயரத்தானே பார்க்க முடியும்?

பர.—(கிண்டலாக) உள்ளம் உயர வேண்டியது தானே!

மனே.—தொகை உயர்ந்து விட்டதில்லே!

பர.—தொகை உயர துன்ப வகையும் உயருமே!

மனே.—வருகிறேன் பரமசிவம்! (நடக்க)

பர.—அந்த 30 ரூபாயை!

மனே.—(நின்று) எந்த 30?

பர.—அரசாங்க அன்பளிப்பு—குடும்பக்கட்டுப்பாடு செய்வோருக்கு காணிக்கை!

மனே.—அதைப் பெற வேண்டியதுதான்! இவ்வளவு "பெற்றது" அரசாங்க அன்பளிப்புப் "பெற" வாவது உதவிற்றல்லவா?

(திரை)



G.N.—6

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் எட்டாண்டு வளர்ச்சி

1960 அக்டோபர் 2-ந் தேதியன்று சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் ஒன்பதாவது ஆண்டு ஆரம்பமாகிறது. மொத்தம் 19 கோடியே 20 லட்சம் ஜனத்தொகை கொண்ட 3,80,000 கிராமங்களில் இத்திட்டம் அமுலில் இருந்து வருகிறது. அதாவது, நாட்டின் கிராம ஜனத்தொகையில் 65 சத விகிதம் பேர் அதன்கீழ் பயன் பெற்று வருகின்றனர். 1960 எப்ரல் 1-ந் தேதியன்று முதலாவது, இரண்டாவது கட்ட தொகுதிகள் 2,907-ம் விஸ்தரிப்பு வேலைக்கு முற்பட்ட தொகுதிகள் 459-ம் இருந்தன.

இத்திட்டம் ஆரம்பமானது முதல் 1960 எப்ரல் 1-ந் தேதி வரையில் அபிவிருத்தி வேலைகளுக்காக மக்கள் பங்காக அளிக்கப்பட்டுள்ள தொகை 87 கோடி ரூபாயாகும். சர்க்கார் தரப்பில் செலவிடப்பட்டது 173·25 கோடி ரூபாய்.

ராஜஸ்தானிலும், ஆந்திரப் பிரதேசத்திலும் ஏற்பட்டுள்ள "பஞ்சாயத்து ராஜ்" முன்னேற்றம், சென்ற ஒரு வருஷ காலத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாகும். சென்னை ராஜ்யம் முதல் பகுதியாக, 75 தொகுதிகளில் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்களை 1960 அக்டோபர் 2-ந் தேதியன்று ஏற்படுத்தியது. மைசூர், அஸ்ஸாம் ராஜ்ய சர்க்கார்களும் இத்திட்டத்தை அமுல் நடத்துகின்றனர். இது சம்பந்தமாக, ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அங்கு இத்திட்டம் கூடிய சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவரப்படும். மத்தியப் பிரதேசம், பஞ்சாப் ஆகியவிடங்களிலும் இதற்கான சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. உத்திரப் பிரதேசத்தில் க்ஷேத்திர சமிதிகள், ஜில்லா பரிஷத்துக்கள் சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கேரளத்தில், தற்போது இருந்துவருகிற சட்ட திட்டங்களில் வரம்புக்குள் அபிவிருத்தி வேலைகளுக்குத் திட்டம் வகுத்து அவற்றை நிறைவேற்றும் அதிகாரங்கள் ஏற்கெனவே 146 பஞ்சாயத்துக்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. பீஹார் ராஜ்யத்திலும் அதற்கான சட்டத்தைக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மஹாராஷ்டிரம் குஜராத் ஆகிய ராஜ்யங்கள் "பஞ்சாயத்து ராஜ்" ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவருவது பற்றி ஆராய்ந்தறியக் கமிட்டிகளை நியமித்திருக்கின்றன.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 1960 எப்ரல் 1-ந் தேதி வரை நடந்துள்ள பிரதான சாதனைகளின் விவரம் வருமாறு: 2,73,20,000 மணங்கு உயர் ரக விதைகள் வினியோகிக்கப்பட்டிருக்கின்றன. 62,251,000 மணங்கு ரசாயன உரங்களும், 15,95,000 திருந்திய உபகரணங்களும் வினியோகிக்கப்பட்டிருக்கின்றன. விவசாய நிதரிசன விளக்கங்கள், 8,047,000 நடத்தப்பட்டிருக்கின்றன. குப்பை உரக் குழிகள் 9,300,000 வெட்டப்பட்டிருக்கின்றன.

கால்நடை வளர்ப்புத் துறையில் 74,000 உயர் ரக எருதுகள் சப்ளை செய்யப்பட்டிருக்கின்றன. 1,041,000 உயர் ரகப் பறவைகள் வினியோகிக்கப்பட்டிருக்கின்றன. 7,385,000 பிராணிகளுக்குக் காயடிக்கப்பட்டிருக்கிறது.

1960 எப்ரல் 1-ந் தேதியன்று மொத்தம் 2,281 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வந்திருக்கின்றன. 1,84,000 குடி தண்ணீர்க் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. 2,74,000 கிணறுகள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களில் 6,04,000 கக்குசுகள் கட்டப்பட்டிருக்கின்றன. 24,264,000 சதுர கஜம் பரப்பளவுக்கு நல்ல சாக்கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 1,27,09,000 சதுர கஜத்துக்குக் கிராம சந்துகள் பாவப்பட்டிருக்கின்றன.

சமூகக் கல்வித் துறையிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. 1960 எப்ரல் 1-ம்தேதியன்று இருந்த நிலவரப்படி, திட்டத்தின் கீழ் மொத்தம் 1,56,000 முதியோர் கல்வி நிலையங்கள் இயங்கி வந்தன அந்த தேதி வரை அவற்றின் வயது வந்தவர்கள் மொத்தம் 4,300,000 பேர் பயிற்சி அளிக்கப்பட்டனர். மொத்தம் 7,20,000 வாசக சாலைகளும், நூல் நிலையங்களும் இயங்கி வந்தன.

இந்த காலத்தில் 326,000 புகையில்லா அடுப்புக்கள் அமைக்கப்பட்டன; 28,332 அம்பர் சர்க்காக்கள் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டன. மொத்தம் 758,00 ரூபாய் மதிப்புக்கு திருந்திய கருவிகளும், துணை சாதனங்களும் வினியோகிக்கப்பட்டன.

போக்கு வரத்து வசதித் துறையில், பிரஸ்தாப காலத்தில், 1,09,000 மைல் நீளத்துக்கு கச்சா ரஸ்தாக்கள் அமைக்கப்பட்டன. ஏற்கெனவேயுள்ள கச்சா ரஸ்தாக்களில் 136,000 மைல் நீளத்துக்கு ரஸ்தாக்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. 86,000 சிறு மதகு பாலங்கள் கட்டப்பட்டன.

1960 எப்ரல் 1-ந் தேதிவரை திட்டத்தின்கீழ் வேலை நடவடிக்கைகளுக்கான கிராமத் தலைவர்கள் முகாம்கள் 61,000 நடைபெற்றன. அவற்றில் மொத்தம் 28 லட்சம் கிராமத் தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 149,000 இளைஞர் சங்கங்கள், விவசாயி சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் அங்கத்தினர் எண்ணிக்கை

(27-ம் பக்கம் பார்க்க)



சென்னையில் வன
விலங்கு வார விழா.







5-12-60-ல் சென்னையில் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது.

வீரச் செயல் புரிந்த சிறுவர் களுக்கு பதக்கங்கள் வழங்கப் பட்டன.

சென்னையில்
டிசம்பர் முதல் வாரத்தில்
போலீஸ் வாரம்
கொண்டாடப்பட்டது.







ஒரு வேண்டுகோள்

நமமுடைய மாநிலத்தில், 'டெவலப்மெண்ட் கமிஷனர்', 'அடிஷனல் டெவலப்மெண்ட் கமிஷனர்' என்ற இரண்டு சர்க்கார் பிரதம ஊழியர்கள் இருந்து கிராம அபிவிருத்தி சம்பந்தமான வேலைகளையும், பஞ்சாயத்து சம்பந்தமான அலுவல்களையும் கவனித்துவருவது அனைவரும் அறிந்ததே. "Development Commiss ioner" என்ற ஆங்கில சொல்லைத் தமிழாக்கும்பொழுது, "மாநில அபிவிருத்திக் கமிஷனர்" என்று வழங்கப்படுகிறது. ஆனால், "Additional Development Commissioner" என்ற ஆங்கில வார்த்தைக்கு, 'துணை அபிவிருத்திக் கமிஷனர்' என்றும், 'இணை அபிவிருத்திக் கமிஷனர்' என்றும், 'கூட்டுறவு அபிவிருத்திக் கமிஷனர்' என்றும், 'உதவி அபிவிருத்திக் கமிஷனர்' என்றும், இன்னும் பலவிதமான பெயர்களால் அவர் அழைக்கப்படுகிறார். அடிஷனல் டெவலப்மெண்ட் கமிஷனர் செய்து வருகின்ற வேலை விவரங்களை நோக்குமிடத்து, இந்த ஆங்கில வார்த்தைகளைத் தமிழ்ப்படுத்திச் சொல்லவேண்டுமென்றால், 'கிராம அபிவிருத்திக் கமிஷனர்' என்று சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

எனவே, இனிமேல் 'அடிஷனல் டெவலப்மெண்ட் கமிஷனர்' என்ற வார்த்தைகளைத் தமிழ்ப்படுத்தும்போது, கிராம அபிவிருத்தி ஊழியர்களும், மற்றவர்களும், கிராம அபிவிருத்திக் கமிஷனர் என்ற பெயரை உபயோகப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர், "கிராம நலம்"

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

18,49,000 ஆகும். 5,69,000 அங்கத்தினர்களுடன். 36,000 மஹிளா சமிதிகளும், மஹிலா மண்டலிகளும் ஆரம்பிக்கப்பட்டன.

நாட்டில் இப்பொழுது 1,76,109 பஞ்சாயத்துக்கள் இயங்கி வருகின்றன. ஆந்திரப் பிரதேசம் நீங்கலாக 22.5 கோடி பேர் ஜனத்தொகையுள்ள 480,000 கிராமங்கள் அவற்றின்கீழ் உள்ளன.

நாட்டில் இயங்கி வரும் சகல வகைப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிகை 2·58 லட்சம் ஆகும். அவற்றில் மொத்தம் 2·15 கோடி பேர் அங்கத்தினர்களாக உள்ளனர். அடிப்படை விவசாயம் பல காரிய சங்கங்கள் மொத்தம் 1.67 லட்சம் உள்ளன. அவற்றில் அங்கத்தினர் எண்ணிக்கை 1·02 கோடியாகும்.

உழைப்போம் வாரீர்!

[திரு. மு. அ. கணேசன்]

இந்தியநன் னாட்டினிலே அல்லல் கொண்டு
இதமின்றி யென்நாளும் வாழ்ந்து வந்தால்,
முந்தியதோர் நன்னாளில் நம்மின் முன்னோர்
முடிவின்றி உழைத்ததற்குப் பலன்தான் யாதோ!
சிந்தினர்செந் நீரெல்லாம் நாட்டின் ஏற்றம்
சிறந்தோங்க, பொருளாவி துரும்பாய் கொண்டு
இந்தசுய ஆட்சிதந்த அன்னார் நாடு
இன்பமின்றி ஏற்றமின்றி நிற்றல் நன்றோ?

குடும்பமொன்று வாழ்க்கையிலே செம்மை யின்றி
குறைபெற்று பன்னாளும் கடனில் வாழ்ந்தால்,
அடுத்தவீட்டு நன்நிலையர் இஃதைப் பார்த்து
அவமானம் என்றுகூறி இடித்து ரைப்பார்;
கடன்பெற்று வாழ்வதினும் கஞ்சி மாந்தி
கால்வயிற்றில் நிறைகண்டு வாழச் சொல்வார்;
இடும்பையுறு விந்நிலையில் நம்தாய் நாடு
இடர்ப்பட்டு நிற்பதூஉம் முறைமை தானோ?

துள்ளியெழுந் துழைத்துடுவீர்! நாட்டு மக்காள்!
தொல்லுலகில் நம்நாடே முதன்மை ஏற்க;
கள்ளமிலா சீர்தொழிலாம் விவசா யத்தில்
கருத்தின்றி உழவனும் புதுமை யின்றி,
தள்ளுகின்ற முறையெல்லாம் அந்நாள் தொட்டு
தரமுள்ள இத்தொழிலில் இயற்றி வந்தால்,
எள்ளிநகை யாடுவாரே வேற்று நாட்டார்!
ஏற்றமேது வளமுமேது பிறந்த நாட்டில்?

காட்டாறு பரவுகின்ற தன்மை போன்றே
வளம்பெற்ற வாழ்க்கையொலி, உயிராம் நாட்டின்
வாட்டமுற்று வருந்திவரும் கிராம வாழ்வில்
வன்மையுடன் பரவிநாளும் உயர்த்தல் வேண்டும்;
கூட்டுறவின் உயர்ந்தசேவை நாட்டி னெங்கும்
கொழுந்துவிட்டு வளர்ந்தோங்கச் செய்தல் வேண்டும்;
நாட்டுயர்வு சிறந்தோங்கும் வரையில் நாமும்
நாட்டமுடன் கூட்டுறவால் உழைப்போம் வாரீர்!



1–3 சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த அமெரிக்கப் பத்திரிகையாளர் குழுவினர் கோட்டையில் நிதி அமைச்சரையும், மற்ற அதிகாரிகளையும் சந்தித்தனர்.



3–4 குழந்தைப் புத்தகங்கள் வெளியீட்டு விழா 12–11–60-ல் உயர்நீதி மன்ற நீதிபதி ஸ்ரீ பி. எஸ். கைலாசம் தலைமையில் நடைபெற்றது.

5–6 ஐக்கிய நாடுகள் தினக் கொண்டாட்டம். (24–11–60).

7. 23–10–60-ல் 'அக்மார்க்' பொருட்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!

டிப்தீரியாவிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றுவது எப்படி?

(சுகாதார போதனையற்றிய இக்கட்டுரை டிப்தீரியா (தொண்டை அடைப்பான்) நோய்பற்றியும், அந்நோயிலிருந்து குழந்தைகளை எப்படிக் காப்பாற்றுவது என்பது பற்றியும் விவரிக்கிறது]

டிப்தீரியா என்பது "கோரின் பாக்டீரியம் டிப்தீரியா" என்னும் நோய்க் கிருமியினுல் ஏற்படுகிற மிகவும் கடுமையானதொரு தொற்று நோயாகும். இந்நோய் தொண்டையில் ஏற்படுகிறது. இதன் விளைவாகத் தொண்டையில் மெல்லிய ஜவ்வுப் படலங்கள் ஏற்பட்டு, அவை மென்மேலும் பரவிக் காற்றுக் குழாய்களை அடைத்துக்கொண்டு வரும். இந்த நோய்க் கிருமி மிகவும் சக்தி வாய்ந்த விஷத்தையும் உற்பத்தி செய்கிறது; இந்த விஷம் இரத்த ஓட்டத்தில் கலந்து, நரம்பு அமைப்பையும் இருதயத்தையும் பாதிக்கிறது.

பெரும்பாலும், இரண்டு வயது முதல் ஐந்து வயது வரையுள்ள குழந்தைகளுக்கே டிப்தீரியா நோய் ஏற்படுகிறது; இந்நோய் குழந்தைகளுக்கு மிகவும் அபாயகரமான விளைவை ஏற்படுத்தக் கூடியதாகும்.

நோய் பரவும் விதம்

இந்நோய் அதிவிரைவில் தொற்றிவிடக் கூடிய தன்மை வாய்ந்ததாகும்; இந்நோயின் தொற்று நேரடித் தொடர்புகள் மூலமாகவும் மறைமுகமான தொடர்புகள் மூலமாகவும் ஏற்படுகிறது. டிப்தீரியா நோய்க் கிருமிகள் நோயாளிகளின் உடலிலிருந்து வெளிப்படும் கழிவுப் பொருள்களிலும் நோய் குணமடைந்து உடல் தேறி வருகிறவர்களின் மூக்கிலும் தொண்டையிலும் காணப்படுகின்றன. நேரடித் தொற்று, முத்தமிடுவதன் மூலமும் அல்லது இருமும்போதும், மூக்குச் சிந்தும்போதும், ஏன் பேசும்போது கூட, தெறித்து வருகிற சளி அல்லது எச்சில் மூலமும் ஏற்படக்கூடும். நோயாளிகள், குணமடைந்து உடல் தேறிவருபவர்கள் அல்லது ஒரு தடவை நோய் கண்டவர்கள் ஆகியவர்கள் உபயோகித்த பாத்திரங்களில் சாப்பிடுவது அல்லது தண்ணீர் குடிப்பது, அல்லது அவர்கள் உபயோகித்த கைக்குட்டைகள், துண்டுகள், தொண்டை பரிசோதனைக்கு டாக்டர்கள் உபயோகிக்கிற கருவி, தெர்மாமீட்டர்கள், குழந்தைகள் உபயோகிக்கும் ஊதல்கள், ஸ்லேட்டுப் பென்சில்கள் ஆகியவற்றை உபயோகிப்பதன் மூலம் மறைமுகமான தொற்று ஏற்படுகிறது.

டிப்தீரியா நோய்க் கிருமிகள் பாலில் வெகு விரைவில் விருத்தியடைந்து விடுகின்றன; இதன் மூலம் இந்நோய் மிகவும் சுலபமாகப் பரவிடுகிறது. ஆகையால் எப்போதும் பாலைக் கொதிக்க வைத்தே சாப்பிடவேண்டும். சூரிய வெளிச்சமும் காற்றோட்டமும் இல்லாமலிருந்தால் டிப்தீரியா நோய்க் கிருமிகளிடையே வீரியம் நெடுநாட்களுக்கு நீடித்திருக்கும். எனவே துணிமணிகள் மூலமும் இந்நோய்பரவக் கூடும்.

இந்நோய்க் கிருமிகள் உடலில் புகுந்து வேலை செய்ய ஆரம்பிப்பதற்கு 24 மணி நேரத்திற்கு மேல் ஆகாது; ஆனால் தாக்கும் கிருமிகளின் தொற்றின் அளவையும், நோயை ஏற்படுத்துவதற்கான திறமையும் பொறுத்து சாதாரணமாய் இதற்கு மூன்று முதல் நான்கு நாட்கள் வரை ஆகிறது.

டிப்தீரியா நோயாளிகளிடம் நோய் ஏற்பட்டதிலிருந்து சாதாரணமாய் 14 முதல் 28 நாட்கள் வரை தொற்று இருந்து வருகிறது; ஆனால் தொற்றைக் கடத்திச் செலலும் ஜந்துக்களிடம் தொற்று இன்னும் நீண்ட காலத்துக்கு இருந்து வரும்.

அறிகுறிகள்

டிப்தீரியா நோய் ஏற்படும்போது, தொண்டை ரணம், குளிர், இலேசான ஜுரம், பசியின்மை, சில சமயங்களில் வாந்தி, தலைவலி ஆகிய அறிகுறிகள் காணப்படும்.

ஜுரம் சாதாரணமாய் அவ்வளவு அதிகமாக இருக்காது; அந்த ஜுரத்துக்கு எவ்வளவு தளர்ச்சி ஏற்படுமோ அதை விட அதிகமான அளவுக்கு குழந்தை நோயுற்றுக் காணப்படும். டான்சில்கள் அல்லது தொண்டையில் பழுப்பு நிறத்தில் பளபளப்பான ஜவ்வுப் படலங்கள் காணப்படும். இது வெகு விரைவில் வளர்ந்து விடுகிறது.

மூக்கில் ஏற்படும் டிப்தீரியா சாதாரணமாய் மூக்கில் ஒரு பக்கத்தில் ஏற்படும். இரத்தத்துடன் சளி கசிந்து வந்து மூக்குத் துவாரம் புண்ணாகி விடும்.

தொண்டையில் நோய் ஏற்படுவதன் விளைவாக குரல் வளையும் பாதிக்கப்படலாம். அப்போது பேசமுடியாதபடி தொண்டை அடைத்து விடும்; சப்தம் வராது; வரட்டு இருமல் ஏற்படும். பிறகு மூச்சுவிட முடியாதபடி திணறல் ஏற்படும். தக்க சிகிச்சை அளிக்கப்படாவிட்டால், நோயாளி மூச்சுத் திணறி மரணமடைய நேரிடும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் இந்நோயினின்றும் தக்க பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும்; ஏனெனில் எந்தக் குழந்தைக்கு எந்தச் சமயத்தில் இந்நோய் ஏற்படும் என்று சொல்ல முடியாது.

(31-ம் பக்கம் பார்க்க)

உப்பிலியபுரம்
வட்டாரத்தில்
கிராமத் தலைவர்கள்
பயிற்சி முகாம்—
முதல் அமைச்சர்
ஸ்ரீ காமராஜ்
அவர்கள் பரிசுகள்
வழங்கினார்கள்.

கூட்டுறவு பற்றிய புத்தகங்களுக்குப் பரிசுகள்

கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய அம்சங்கள் பற்றிய புத்தகங்களும் பிரசுரங்களும் உற்பத்தியாவதற்கு ஊக்க மளிப்பதற்காக, இந்திய சர்க்காரின் சமுதாய நல அபி விருத்தி கூட்டுறவு மந்திராலயம் குறிப்பிட்ட விஷயங்கள் பற்றிய புத்தகங்களின் ஆசிரியர்களுக்குப் பரிசுகள் வழங்கு வதென்றும், அப்புத்தகங்களின் காப்பிரைட் உரிமையை வாங்கிக் கொள்வதென்றும் முடிவு செய்திருக்கிறது. இப் புத்தகங்கள் கூட்டுறவு சங்க அதிகாரிகள், கூட்டுறவுத் துறையில் அக்கறையுள்ளவர்கள் ஆகியோரின் உபயோகத் துக்குரியவையாகும்.

இப்புத்தகங்களுக்கான விஷயங்கள் வருமாறு: (1) கூட்டுப்பண்ணை; (2) கூட்டுறவு விற்பனை சங்கத்தின் நடைமுறையும் நிர்வாகமும்; (3) கிராமக் கூட்டுறவு சங்கங்களில் அனுசரிக்கப்படவேண்டிய விதிமுறைகளும் கணக்கு வைப்பு முறைகளும்; (4) உபயோகிப்போர் கூட்டுறவுச் சங்கம்; (5) கிராம ஊழியர்களுக்கான கூட் டுறவு வழிகாட்டி; (6) வெற்றிகரமான கூட்டுறவு சங்கங் களின் வரலாறுகள்; (7) கூட்டுறவுக் கடன் வசதிகளாக கிடைக்கும் அனுகூலங்களை விளக்கும் ஒரு நாடகம்.

இப்பரிசுப் போட்டிக்குரிய புத்தகங்களை ஏற்றுக்கொள் வதற்கான கடைசித் தேதி 31—3—1961.

இத்திட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ள விரும்புகிற ஆசி ரியர்கள், இது பற்றிய விவரங்களுக்கு "அறை எண் 465-எ, கிருஷிக் பவன், புது டில்லி" என்னும் விலா சத்திலுள்ள சமுதாய நல அபிவிருத்தி-கூட்டுறவு மந்திரா லயத்தின் (கூட்டுறவு இலாகா) செக்ஷன் ஆபீஸருக்கு (கூட்டுறவுப் பயிற்சி) எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

(29-ம் பக்கம் தொடர்ச்சி)

தடுப்பு நடவடிக்கைகள்

டிப்தீரியா நோய் வராமல் தடுப்பதற்கு டிப்தீரியாத் தடை மருந்து குத்திக்கொள்வது தான் மிகவும் முக்கியமான நடவடிக்கையாகும்.

சாதாரணமாய்க் குழந்தைகளுக்கு ஒரு வயதில், முக்கியமாய் ஆறு மாதத்தில் டிப்தீரியா நோய் எதிர்ப்புச் சக்தி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மாதத்துக்கு ஒன்று வீதம் மூன்று ஊசிகள் தொடர்ந்து போடப்படுகின்றன. குழந்தை பள்ளிக்கூடம் செல்லும் பருவத்துக்கு முன்பும் பள்ளிக்கூடம் செல்லும் பருவத்திலும் அதற்கு ஒரு விசேஷ ஊசி ("பூஸ்டர்" அல்லது ரீஇன்போர்ஸிங் இஞ் செக்ஷன்) குத்தப்பட வேண்டும். டிப்தீரியா, கக்குவான். வலிப்பு நோய் ஆகிய மூன்று நோய்களிலிருந்தும் குழந் தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய "முக்கூட்டு" ஊசி மருந்து ஒன்று இப்போது கிடைக்கிறது.

ஒற்றுமை ஓங்குக

ச. இரா. சி. மணி, கடையாலுருட்டி

[ஏர் முனைக்கு நேர்........என்ற இசை]

ஒற்றுமைக்கு நேர் இங்கே எதுவும் இல்லை—மனம்
ஒன்றுபட்டால் துன்பம் நம்ம வாழ்விலே இல்லை.

ஒற்றுமைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை—மனம்
ஒன்றுபட்டால் துன்பம் நம்ம வாழ்விலே இல்லை.

மனிதரெல்லாம் வாழ்வதெல்லாம் உழுவதினாலே—அது
மங்களமாய் வளர்ந்து ஓங்கும் கூட்டுறவாலே—நாம்
பண்பு செய்து பயிர் செய்வோம் புத்தியினாலே—நல்ல
பலனடைந்து வாழ்ந்திடலாம் சக்தியினாலே—(ஒற்றுமை)

அறிவு வெள்ளம் பெருகிஓட ஆறு ஆறாக—மக்கள்
அன்பு ஓங்கி உள்ளத்திலே வேர் வேராக—ஊன்றித்
தழைத்து இன்பம் பூத்திடுமே கொத்து கொத்தாக—
உலகம்
தாங்கியதை கோத்திடுமே முத்து முத்தாக—(ஒற்றுமை)

கலையறிவு கற்றுணர பள்ளி கொஞ்சமா?—அதில்
கல்வி கற்று அறிவு பெற இனியும் அச்சமா?—கை
ராட்டை நூற்கப் பழகிக் கொண்டால் துணிக்குப் பஞ்சமா?
[சும்மா
ரவுடியாகச் சோம்பி நின்றால் பணமும் மிஞ்சுமா?
(ஒற்றுமை)

அன்பு உள்ளம் ஒன்று சேர மனிதர் நெஞ்சிலே—நல்ல
அறிவு தரும் நூல் பயில இளமைப் பிஞ்சிலே—உயர்
ஆடை தந்து மானம் காக்கும் நைந்த பஞ்சிலே—நாம்
ஆனந்தமாய் சேவை செய்வோம் பூதம் அஞ்சிலே
(ஒற்றுமை)





1–3 கன்யாகுமரி மாவட்
பஞ்சாயத்து வார விழா.
4–5 திருமங்கலம் வட்டாரம் பஞ்
சாயத்து யூனியன் துவக்க விழா.
6 குறிஞ்சிப்பாடி வட்டார அலு
வலகத் திறப்பு விழா.



மாநில மண் பாதுகாப்புக் கமிட்டியின் கூட்டம் 7–11–60-ல் உள்நாட்டுத் துறை அமைச்சர்
ஸ்ரீ பக்தவத்ஸலம் தலைமையில் நடைபெற்றது.

பெருங்களத்தூரில் நடைபெற்ற மிருக வைத்தியக் கல்லூரியின் திட்ட வேலைக் குழுவின் முதல் ஆண்டுவிழாவில்
கிராம அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி.

பாண்டி நாட்டு நாடோடிப் பாடல்கள்

"சீரான்"

புரட்டாசி அல்லது மாசி மாதத்தில் முல்லைப் பொரியாற்றின் கரை மேல் நின்று பார்க்கவேண்டும். கண்ணுக்கு எட்டியவரையிலும் பொன்னிறப் பட்டுப் போர்வையை மடிப்பு மடிப்பாக விரித்துக் காட்டுவது போல் நன்செய் நிலங்கள் காட்சி விருந்தளித்துக் களிப்பூட்டி நிற்கும்.

இன்னும் சற்று ஆழமாக நோக்கினால் நாணிக்கோணி தலை வணங்கி நிற்கும் கல்யாணப் பெண்ணைப் போல், நெற் கதிர்கள் மணிகுலுங்கிக் குழைந்து நிற்கும். நிற்குமா ?

தென்றல் தலைவன் தன்னைத் தழுவவருகிறானென்று மெல்லத் தலை நிமிர்ந்து பார்ப்பதும், அவன் வருகையைக் கண்டதும் தலை கவிழ்ந்து முறுவலிப்பதுமாக ஒரு(காதல்) நாடகத்தை நடித்துக்கொண்டே ஆடியும், மெல்லிசை பாடியும் காட்டிக்கொண்டிருக்கும் ! இக்காட்சியானது,

"யான் நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்."

என்ற திருக்குறள் கருவை உயிரோவியமாக்கிக் கற்றவர் நெஞ்சில் களிவெறி மூட்டும் ; மற்றவர் நெஞ்சையும் கவர்ந்து நிற்கும்.

இனி, இக்கோலக்காட்சியின் மற்றொரு பயனும் வீணாகக் கூடாதல்லவா ? அந்தப் பயனை ஒன்று கூட்டும் பருவமும் இதுதானே ! பருவத்தே பயிர் செய்தவர், பருவத்தே பலனைத் தொகுக்கவும் வந்துவிட்டார். ஆண்டு தோறும் வந்து அறுவடை செய்து களத்திற் சேர்த்துக் கொடுக்கும் புள்ளிக்காரரும், விவசாயியும் வரப்பில் நடந்துகொண்டே சுற்றிப் பார்க்கிறார்கள். அறுவடைக்குரிய கூலியும் பேசி முடித்துக்கொண்டு திரும்புகிறார்கள்.

மறுநாள் காலை சரியாகக் கூட விடியவில்லை. நான்கு ஐந்து கல் தூரத்திற்கு அப்பாலிருந்து பன்னரிவாளும் கட்டுச் சோறுமாக வந்த ஆண்களும், பெண்களும் வயல் வரப்பில் அணிவகுத்து நிற்கிறார்கள். வயல் சொந்தக்காரரும் புள்ளிக்காரரும் பின்னால் வந்து சேர்கிறார்கள். ஒவ்வொரு வயலுக்கும் உரிய ஆட்களைப் பகிர்ந்து அங்கங்கே அனுப்புகிறான் புள்ளிக்காரக் காளை. அறுவடை தொடங்கிவிட்டது.

மணிகுலுங்கும் நெற் கதிர்த்தாள்களை வலது கைப் பன்னரிவாளால் சரக் சரக் என்று அறுத்து இடது கையில் நிறைந்ததும், மயில் தோகையைப் போல் விசிறி, தமக்குப் பின்னால் அரி அரியாகப் பரப்பிக்கொண்டு முன்னேறுகிறார்கள் அரிவைப் பெண்கள்.

இந்நிகழ்ச்சி நாடக மயில் கூட்டங்களின் மனமோகன ஆட்டத்தை நினைப்பூட்டி நிற்கும். ஒவ்வொரு குழுவினரையும், பார்வையிட்டு, உற்சாகப்படுத்தி, வேலையில் விறுவிறுப்பு ஊட்டிக்கொண்டே வருகிறான் புள்ளிக்காரக் காளை.

அவன் மேற்கொண்டுள்ள "புள்ளிக்கார" வேலைதான் பழமையானது. மற்ற நடையுடை பாவனைகள் அத்தனையும் புதுமை மெருகோடுதான் மிளிரும். நல்ல முறுக்கான வாலிபப் பருவம் ; ஆரம்பக் கல்வியிலும் அரைகுறைப் பயிற்சிதான் ; என்றாலும் கிராப்பு முடி சுருள் சுருளாக நெளியும் ; கணைக்காலளவு ஆட்சி செய்யும் வேட்டி ; பருவத்துக்கேற்றபடி தைத்த மேல் சட்டை ; கையில் கடிகாரம் ; விரலில் கல் பதித்த மோதிரம் ; மேல் துண்டு இவ்வகைக் கோலத்தில் காட்சியளிக்கிறான் அக்காளை.

அவனுடைய உருவத்திற்கும், பருவத்திற்கும் ஏற்றவாறு மனப் பொருத்தமும், உடைவளாயிருந்தாள் அம் மங்கை நல்லாள். தன் உள்ளத்தைக் கவர்ந்த அப் புள்ளிக்காரக் காளை, தன் பக்கத்தில் வரப்பில் நிற்பதை ஓரக் கண்ணால் பார்த்துக்கொண்டாள். அவன் உடுத்தியுள்ள சாய வேட்டியில் சில மடிப்புச் சுருங்கல் நெளிகின்றன. கழுத்தில் சுற்றியுள்ள சரிகைத் துண்டின்

முனே, காற்றில் விரிந்து ஆடுகிறது. உடனே அவளுக்கு மனத்தில் ஒரு இன்பக் கிளுகிளுப்புத் துளிர்த்துப் பாட்டாக மலர்கிறது.

" சாய வேட்டி சுருங்குறதும்
சரிகைத் துண்டு ஆடுறதும்

சாமி போல் நிக்கிறவர்
சாயலைப் போல் காண்பதில்லே ".

எப்படி ? முதல் எடுப்பே பலமாயிருக்கிறதே ! தெய்வம் போல் நிற்கிருனும் ; அவன் சாயலைப் போல் (அழகுத் தோற்றம்) காண முடியாது என்றே முடிவு கட்டிக் கூறுகிறளே ! என்ன பெருமிதம்—பூரிப்பு அவளுக்கு. தன்னைக் கவர்ந்துள்ள காந்தத்தின் வாயிலிருந்து பெருகிய இசைத் தேன், அவன் காதுகளில் பாய்ந்து ஓர் இன்பப் போதை யூட்டுகிறது. அந்தப் போதை வெளிப்படும் விதத்தைப் பாருங்கள்.

" கருதறுப்புச் சங்கீர்தமே
கண்ணழகு இங்கிர்தமே

எனக்கு வாச்ச செங்கரும்பே
எண்ணைக்குத்தான் திங்கிறதோ!"

கதிரறுத்துக்கொண்டே அவள் பாடுவது அவனுக்கு உயர்ந்த சங்கீதமாகிறது. அவள் கயல் விழிகள் இங்கிதமாகப் (இன்பமாக) படுகிறது. அவள் தோற்றத்தைச் செங்கரும்பாக்கிக் காண்கிருன் ; என்னே கற்பனை ! ஆனுல், என்றைக்குத்தான் அக்கரும்பைச் சுவைத்து இன்பம் நுகர்வதோ என்பதில்தான் எத்தனை எக்கம் ! அவன் உள்ளக்கிடக்கையை அப்படியே அள்ளிக் காட்டுகிருனே !

அவனைக் கண்ணுரக் கண்டு காதார கீதத்தைக் கேட்ட அவள் மனம் மட்டும் அடங்கியிருக்குமோ ? தன் உள்ளத்தையும் படம் பிடிக்கிருள் பாருங்கள்.

" கையிலே கெடியாரம்—உங்க
கைவிரலில் மோதிரமாம்

நீலக்கல்லு மோதிரமே—உங்க
நினைவை மறந்ததில்லே. "

ஒளி வீசும் நீலக்கல் மோதிரமாகவே அவனை உருவகப்படுத்திப் பார்த்து ரசிக்கும் நிலைக்கு வந்த பின்னுல், அவளால் எப்படி மறக்க முடியும் ? உண்மைதானே ?

இவ்வளவு கேட்டால் அப்புள்ளிக்காரக் காளைக்கு எப்படியிருக்கும் ? இன்பக் கிறுக்கேறி அப்படியே மயங்கிவிட்டான். அந்த மயக்கத்தால் தன் மனத்தில் பட்ட திட்டத்தை வெளியிடுகிருன்.

" பச்சைப் பட்டுச் சீலைக்காரி
பவளப்பட்டு ரவிக்கைக்காரி

பட்டதெல்லாம் சொல்லிவாரேன்
பக்குவமா கேட்டுக்கடி. "

பச்சை நிறப் பருத்திப் புடவையும், காவிநிறத் துணியும், பச்சைப் பட்டாகவும், பவளப் பட்டாகவும், ஒளி வீசுகிறது. அவன் (காதல்) கற்பனைக் கண்களுக்கு. சரிதானே !

" காரை வீடு கட்டித்தாரேன்
கட்டைபோட்டு லாந்தித்தாரேன்

நூறுரூவா பரிசந் தாரேன்
நோக்கம்போல வாக்கப்படு."

தன் நோக்கம் போல வாழ்க்கைப்படுவதானுல், (மணம் புரிந்தால்) கட்டை போட்டு லாந்திய காரை (மச்சு) வீடு கட்டுவானும். என்ன பெருமையான திட்டம். பரிசப் பணம் நூறு ரூபாயாம். அவன் வாழ்க்கையில் அது ஒரு உயர்ந்த தொகைதானே. அதனுல்தான் நூறு என்ற பெருமைபூத்துக் கூறுகிருன்.

தன் கண்ணுக்குப் பிடித்த—கருத்தில் கொலுவீற்ற மாப்பிள்ளையின் திட்டத்திற்கும், கருத்திற்கும், மறுப்பா காட்டப் போகிருள் ? அவள் அவனையும், அவன் அவளையும் தேடக் கிடையாத செம்பொன் புதையலாகக் கொண்டிருக்கும்போது—வீடு—பொருள்—ஆடை—அணி இவையெல்லாம் அவர்கள் கருத்துக்குக் குறுக்குச் சுவராக நிற்க முடியுமா ? நின்றுலும் நிலைக்குமா? அவனைப் பற்றி அவள் மனம் இன்னும் எப்படியெல்லாம் கற்பனை செய்து பார்த்துப் பூரிக்கிறது பாருங்கள்.

" சந்திரரே, சூரியரே
தலைக்கு மேலே வாரவரே

இந்திரர்க்கு இளையவரே
என்ன சொல்லி கூப்பிடுவேன்."

இத்தனை வகையாக உருவகப் படுத்திப் பார்த்தும், அவள் மனம் நிறைவு பெற்றதா ? இல்லை ; மேலும், வருணிக்கவே அவாவுகிறது. ஆனுல், சொற்கள்தாம் உதவத் தாமதப்படுகிறது. சொற்கள் கிடைக்கவில்லையே என்ற கருத்தில் என்ன சொல்லிக் கூப்பிடுவேன் என்பதில்தான் எத்தனை பாசம்—ஆழம்—அழகு—உண்மைக் காதலின் உயிர்த் துடிப்பையல்லவா காட்டுகிறது!

இனி, அவன்பால் தன்னை மயக்கிய நிகழ்ச்சியொன்றையும் கூறுகிருள்.

மரத்தில் ஏறி ஒரு கொம்பை வெட்டுகிருன் அவன். ஓங்கி ஓங்கி கையாட்டி உடலசைத்து வெட்டும்போது, அவன் சுருள் நெளிவுக் கிராப்பு முடியும். அவன் வெட்டுக்குத் தாளம் போடுவதுபோல் ஆடிக் காட்டுகிறது. அந்த ஆட்டத்தில் சொக்கிக் கிறுகிறுத்துப் போனுளாம்! பார்த்தீர்களா ?

உச்சி மரமேறி—நீங்க
ஓங்கி மரம் வெட்டயிலே—ஓங்க

சிங்காரச் சோக்கழகில்—நான்
சொக்கிக் கிறுகிறுத்தேன்."

இவ்விதச் சொக்கு மயக்கப் பாடலை அவள் வாய் இசைக்க, கைகள் கதிராடுப்பு நடனம் செய்கின்றன. பார்க்கிறான் காளை. ஓர் சிறு குறும்பு காட்டி, நகைச்சுவை யூட்டிப் பாடுகிறான்.

"கண்ணாடி வளைகுலுங்கக்
கருதறுத்துப் போறவளே—உன்
கண்ணாடி மின்னுதடி—இப்போ
கருதறுப்புப் பிந்துதடி."

உண்மையாகப் பிந்தியிருந்தால்தான் அவள் ஒப்புவாள்? "என் வளைகளின் ஒளியினாலோ, மற்ற ஒளியினாலோ வேலையொன்றும் பிந்தவில்லை. அந்த ஒளியில் மூழ்கிக் கிறுகிறுத்திருக்கும் உங்கள் கண்தான் அவ்வாறு காட்டுகிறது. என் கண்ணே அவ்வாறு காட்டுகிறாய்? என்று கேட்டுப் பார்க்கலாமா? என அவன் பாணியிலே காட்டுகிறாள்.

கண்ணாடி மின்னுறதால்
கருதறுப்புப் பிந்தவில்லே—உங்க
கண்ணுரெண்டும் கிறுகிறுத்துக்
காட்டுறது கேக்கட்டுடா ?

அருவியொலி காட்டி இருவரும் சிரிக்க, அருகிலுள்ள பருவத்தார் அனைவரும் கைகொட்டி வெடிச் சிரிப்பை வீசுகிறார்கள். சரி, அறுவடை முடிந்துவிட்டது.

பகலுணவுக்குப் பின் கட்டுகள் கட்டத் தொடங்கிவிட்டார்கள். அரிகளை அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்கள் பெண்கள். அவற்றை வாங்கிச் சேர்த்துக் கட்டுகளாக்குகிறார்கள் ஆண்கள். சில கட்டுகள் பெரியவையாக உருவெடுக்கின்றன. "சின்னதாகவே கட்டுங்கள்; நாங்களென்ன சுமந்து வரப்பில் ஓட வேண்டாமா? இப்படிக் கட்டினால் எப்படிக் களத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பது?" தன் கடைக்கண்ணால் ஒரு மின்னல் வெட்டி, கடையிதழில் முறுவலை நெளியவிட்டாள் அவள். பார்த்த புள்ளிக்காரக் காளைக்குப் பொங்கிப் பூரிக்கிறது நெஞ்சம்.

எல்லாப் பெண்களும் கட்டுகளைத் தலையில் வைத்து அழகு நடையோட்டம் காட்டி, இடையழகை—எடுத்துக் காட்டி அணிவகுத்துச் செல்கிறார்கள். தன் காதலியைப் பார்க்கிறான் காளை. "ஐயோ! இவ்வளவு பெரிய கட்டைத் தலையில் வைத்து ஒடுக்கமான வரப்பென்றும் பாராமல் இடுப்பு ஒடியும்படி ஓடுகிறாயே!" என்ற ஆழ்ந்த வருத்தத்தை வடிக்கிறான் பாருங்கள்.

"சின்னக் கட்டு கட்டச் சொல்லி
சிமுட்டு முழி போட்டவளே
எம்மனசைச் சேத்துக்கட்டி—வரப்பில்
இடுப்பொடிய ஓடுறயே!"

மற்ற பெண்களும் அவளைப் போல்தானே ஓடுகிறார்கள். இவள் இடுப்பு மட்டும் ஒடிந்துவிடுமென்று ஏன் வருந்துகிறான்?

தன் மனத்தையும் சேர்த்துக் கட்டிச் சுமந்து (தன் மனத்தைச் சிறைப்படுத்தி) ஓடுகிறாளல்லவா!

"அணிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள்
நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை."

என்று, வள்ளுவர் காட்டும் தலைவன், தலைவியைப் புனைந்து, பாராட்டுகிறானல்லவா இங்கு. நாம் காணும் தலைவன், தன் வருத்த உணர்ச்சியின் மூலம் தலைவியின் இடையியல்பை இவ்வாறு காட்டுகிறான்.

உண்மைக் காதலுணர்ச்சிக்கு 'அடைக்குந் தாழ் எது? எப்படியெல்லாம் உருக வைக்கிறது பார்த்தீர்களா!

பஞ்சாயத்துத் திட்ட வரவு செலவுத் திட்டம்

கிராம அபிவிருத்தி, தலநிர்வாகத்துறை

(1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 664)

அரசாங்கம் தொடர்ச்சியாக உருவாக்கி நிறைவேற்றி வருகின்ற ஐந்தாண்டுத் திட்ட நடைமுறை வேலைகளில், கிராம மக்கள் பெருவாரியாகக் கலந்து கொள்ளும் முறையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்பது அரசாங்கத்தின் திட்ட வட்டமான கொள்கையாகும். இந்தக் கொள்கையையொட்டி, 1955-ம் வருடத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றும் அமைப்பின் ஒருபகுதியாக கிராமங்களுக்கான திட்டங்கள் (Village Plans), பிரதேசங்களுக்கான திட்டங்கள் (Area Plans) என்று வகுப்பதற்காகவே, பிரத்தியேகக் குழுக்களை (Adhoccommitees) அரசாங்கம் நியமனம் செய்தது.

2. இந்தக் குழுக்கள் சிறிது காலம் வேலை செய்து, சில திட்டங்களை வகுத்துத் தந்தன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முழு உருவம் பெறுவதற்கு முன்பு, இத்திட்டங்களும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கத்தை கிராம மக்கள் புரிந்து கொள்வதற்கு இவை பயன்பட்டன. என்றாலும், அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் முழுதும் நிறைவேறவில்லை என்றுதான் கொள்ளவேண்டும். ஏனென்றால், இந்தக் குழுக்கள் தயாரித்த திட்டங்களை நடைமுறையில் செயல்படுத்த இயலாமல் போய்விட்டது.

(i) இதற்கு முக்கிய காரணம்.—ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தயாரிக்கப்பட்ட திட்டங்களை முழுதாகச் சீர் தூக்கிப் பார்த்த போது, அவை அரசாங்கத்தின் நிதி வசதிக்குக் கட்டுப்படாத நிலையில், அதிகப்படியான முறையில் தயாரிக்கப் பட்டிருந்தன என்று தெரிந்தது.

(ii) திட்ட மிடும் முறையில் ஏற்பட்ட இந்தப் பெருங் குறை தவிர்க்கப்பட்டு விட்டாலும் கூட, நடைமுறையில் அவைகளை அமுல் நடத்துவது சிரமமான காரியம். ஏனென்றால், போடப்பட்ட திட்டங்களை முன்னின்று திறமையுடன் எடுத்துச் செயலாற்ற பிரதிநிதித்துவம் வாய்ந்த பலமான ஸ்தாபனம் ஒன்றும் கிராமப் புறங்களில் இல்லாமல் போய்விட்டது.

3. இரண்டாவதாகச் சொல்லப்பட்ட குறைபாடு இப்பொழுது மெள்ள மெள்ள நீக்கப்பட்டு வருகிறது. புதிய பஞ்சாயத்துச் சட்டம், பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்களை வகுத்து, ஒவ்வொரு வட்டாரத்தினுடைய நிர்வாக அதிகாரத்தை ஒரு பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கவும், அன்றியும் சமுதாய நல அபிவிருத்தி திட்டத்தின் தேசிய வளர்ச்சி வேலைகளை அவைகளினிடம் ஒப்படைக்கவும் வழிவகை செய்கிறது. இந்த வேலைமுறைப் படி, முனிசிபல் நகரங்கள் தவிர, மாநிலத்திலுள்ள மற்றப் பிரதேசங்களெல்லாம், 374 பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு, 374 பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் அமைக்கப்படும். இந்த 374 பஞ்சாயத்து யூனியன்கள் மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மூன்று வரிசைக் கிரமமாக அமைக்கப்படும். கடைசி மூன்றுவது தொகுதி 2—10—1961 அன்று அமைக்கப்பட்டு விடும். வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், விஸ்தரிப்பு அதிகாரிகள், கிராம சேவக்குகள், மற்றும் பயிற்சி பெற்ற அதிகாரிகள் என்று ஒவ்வொரு வட்டாரத்திலும் தேசிய வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள அத்தனை பேரும் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் பொறுப்பில் வேலை செய்து வருவார்கள். பஞ்சாயத்து யூனியன்களுக்கு இவர்களுடைய பணி இலவசமாக கிடைத்துவிடும். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், வட்டார அளவில் திட்ட வேலை இந்த முறையில் நடைபெறும். கிராம மக்களின் பிரதிநிதியாக, மூன்றுவது திட்டத்தின் வட்டார நிலை அபிவிருத்திக்கான வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரிக்கும பொறுப்பு பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்படும். அது மட்டுமல்லாமல், திட்டக்காலத்தில் அன்றாட வேலை முறைகளை நடத்தி வைக்கும் பொறுப்பும் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்குத் தகுந்த முறையில் அபிவிருத்தி வேலைகளை செயல் படுத்தும் முறையில் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்படும்.

4. புதிய பஞ்சாயத்துச்சட்டம் விரிவான முறையில் பிரதேச வரி விதிப்பு, நிதி நிலை ஆகியவை பற்றிய ஆதாரங்களை விளக்கிக் கூறுகிறது. பஞ்சாயத்து யூனியன்களிடம், பஞ்சாயத்துக்களினிடமும், இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும், கட்டாயமில்லாத முறையில், வருடா வருடம் பல்வகைப்பட்ட அரசாங்க மானி

யகங்ள் அளிக்கவும் புதுச் சட்டம் வழி வகை செய்திருக்கிறது. இந்த மானியங்களில் இரண்டு மான்யங்கள், பஞ்சாயத்து யூனியன்களும் பஞ்சாயத்துக்களும் திரட்டும் நிதிக்கு இணையாக கொடுக்கவேண்டிய "ஈட்டு மானியங்கள்" ஆகும். தல நிர்வாகம் பற்றி சட்ட சபையின் சகல கட்சிகளும் சேர்ந்த குழுவினால் நியமிக்கப்பட்ட உள்ளாட்சி நிதி உபக் குழு இந்த ஏற்பாடுகளெல்லாம் எந்த அளவுக்குப் பயன் படுத்திக் கொள்ளப்படும் என்பதைப் பற்றி ஆராய்ந்தது. இந்த உபக்குழு "பஞ்சாயத்து நிர்வாகத்திற்குரிய எதிர் கால வரவு செலவுத் திட்டம்" (Perspective Budget of Panchayat Administration) ஒன்றைத் தயாரித்துள்ளது. அதன்படி, பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்தும் ஆண்டொன்றுக்கு நபர் ஒன்றிற்கு 6 ரூபாய் வீதம் ரெவின்யூ பெற முடியும். புதிய பஞ்சாயத்துச் சட்டத்தினால் கிடைக்கக்கூடிய நிதி ஏற்பாடுகளையும், உபக்குழு வழி காட்டியுள்ளதையும் பயன் படுத்துவதின் மூலம், வட்டார நிலையில் திட்டமிடுவதற்கு நிலையான நிதி அடிப்படையை உண்டாக்க முடியும் என்ற சூழ்நிலையை உண்டாக்கியுள்ளது. இதனால் மேலே சொல்லப்பட்ட இரு குறைபாடுகளையும் தவிர்க்க ஏதுவாகிறது.

5. இது வரையில் இருந்ததை விட, உயர்ந்த முறையில் கிராம நலப் பணிகளையும் வேலைகளையும் நடத்த போதிய வருமானத்தை அளிக்கும் வகையில் உள்ளாட்சி நிதி உபக் குழு எதிர்கால வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. கிராமநல வேலைகளுக்கான மூலதனச் செலவீட்டிற்கான விசேஷ வசதி முறைகள் இதில் சேர்க்கப்படவில்லை. விவசாயம், கால்நடை, கிராமக் கைத் தொழில்கள் ஆகிய துறைகளில் உற்பத்தி அபிவிருத்திக் காணுவதற்கான நிதி ஆதாரங்களும் இதில் சேர்க்கப்படவில்லை. பஞ்சாயத்துக்களிடமும் பஞ்சாயத்து யூனியன்களிடமும் இப்படிப்பட்ட அபிவிருத்திப் பணிகளை செயல் படுத்தும் பொறுப்பானது ஒப்படைக்கப்படும்பொழுது, அவைகளுக்கு அதிகப்படியான நிதிகளும் கிடைக்கும்படியான வழிவகைகள் செய்வது அவசியமாகிறது. அப்படியில்லாவிட்டால், அவை நேரடியாக மாநில அரசாங்கத்தால் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக பயன் படுத்திக் கொள்ளப்படும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் (அல்லது பஞ்சாயத்தும்) தான் மூன்றுவது திட்டக் காலத்தில் மாநில அரசாங்கத்தினிடமிருந்து எந்த அளவுத் தொகையை சட்டப்படியில்லாத மானியங்கள் மூலம் எதிர்பார்க்க முடியும் என்பதையும், அவற்றுக்கான நிபந்தனைகளை (முக்கியமாக அதற்கான ஈட்டு நிதி ஆதாரங்களை திரட்டுவது) நிறைவேற்றுவது என்பதையும் அறிந்திராவிட்டால், வட்டார நிலையில் திட்டமிடுவதற்கு தேவையான, உறுதியான நிதி அடிப்படைக்கான ஏற்பாடு முழுமை பெற்றதாகாது.

6. தேசிய ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாகி வரும் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றுந் திட்டக் காலத்தில் நமது மாநிலத்தின் நிதி ஒதுக்கீட்டின் அளவு எப்படியிருக்கும் என்று அநுமானிக்கும் நிலையை இன்று அடைந்துள்ளது. இந்த நிதி, சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சித் திட்ட வரவு செலவுத் திட்டத்தின் பகுதியாகவும், சமுதாய நல அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட வேறு இலாக்காக்களின் மாநில மூன்றுவது திட்டத்தில் சேர்க்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் பகுதியாகவும் கிடைக்கும். ஆகையினால், பிரதேச நிதியாகக் கிடைக்கவிருக்கின்ற மொத்த நிதி ஆதாரங்களைக் குறித்து ஒரு மதிப்பீடு தயாரிப்பது இப்பொழுது சாத்தியமாகிறது. இந்த நிதிகள் பஞ்சாயத்து யூனியன்களினாலும் பஞ்சாயத்துக்களாலும் நிர்வகிக்கப்படும். அதன் மூலம், மூன்றுந் திட்டக்காலமான (1961–62 முதல் 1965–66 வரையுள்ள) ஐந்தாண்டுகளுக்கு ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்திற்கும் வட்டார வரவு செலவுத் திட்ட அமைப்புக்கு உறுதியான அடிப்படை ஏற்படும்.

7. மாநிலத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்து வட்டாரங்களுக்கும் மொத்தமாகக் கிடைக்கக்கூடிய நிதி ஆதாரங்களின் மதிப்பீட்டின் அடிப்படையை வைத்து, மூன்றுவது திட்டக் காலத்தில் வட்டார வரவு செலவுத் திட்டங்களை தயாரிக்கும் முறை, சமீபத்தில் சென்னையில் நடந்த நான்கு பஞ்சாயத்து அபிவிருத்திக் கருத்தரங்குகளில், மாநில அபிவிருத்திக் கமிஷனரால் ஆலோசிக்கப்பட்டது. கருத்தரங்குகளில் கலந்துகொண்ட கலெக்டர்களுடனும், மற்றும் 2—10—1960-ல் முதல் தொகுதியாக அமைக்கப்படப்போகும் பஞ்சாயத்து யூனியன்களைச் சேர்ந்த 75 முதல் தொகுதி வட்டாரங்களின் பொதுஜனப் பிரதிநிதிகளுடனும், அபிவிருத்திக் கமிஷனர் இந்த ஆலோசனையை நடத்தினர். இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் கருத்தானது, வெகுவாக வரவேற்கப்பட்டதுடன், புதிய பஞ்சாயத்துச் சட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்துவதற்கு இது வழிகோலும் என்றும் கருதப்பட்டது. அதன் பிறகு அபிவிருத்திக் கமிஷனர் சம்பந்தப்பட்ட இலாக்காக்களுடனும் நிதி ஏற்பாடுகள்பற்றி விரிவாக விவாதம் நடத்தினர். அவைகளுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக, மூன்றுவது திட்டக் காலத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகின்ற நிதி வசதிகளை மொத்தம் 142 கோடி ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு தயாரித்துச் சமர்ப்பித்துள்ளார். எல்லாப் பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்களினாலும் நிர்வகிக்கப்படும் இம்மொத்தத் தொகை பின்வரும் இனங்களில் கிடைக்கும்:—

	மொத்தத் தொகை. (ரூபாய் கோடிக்கணக்கில்)
பஞ்சாயத்து யூனியன்—	
(கல்வி) நிதிகள்	65
(பொது) நிதிகள்	23
(உற்பத்தி) நிதிகள் ..	12
நிதிகள் மொத்தம் ..	100
கிராமப் பஞ்சாயத்து நிதிகள் ..	37
பட்டணப் பஞ்சாயத்து நிதிகள்	5
பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்களின் பெரு மொத்தம். ..	142

[குறிப்பு.—திட்டமிடப்பட்டுள்ள தொகையான ரூ. 142 கோடி அபிவிருத்தித் திட்டங்களுக்கான புதிய பணிகளுக்கும், புதிய திட்டங்களுக்கும் மட்டும் அல்லாமல், இன்றுள்ள வேலைகளையும் இரண்டாவது திட்டக்கால இறுதியில் எஞ்சிய திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கும் ஆகும்.]

8. நமது மாநிலத்தில் 374 பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்கள் இருக்குமாதலால், ஒவ்வொரு வட்டாரத்திலும் சமாராக ரூபாய் 38 லட்சத்திற்கு நிதி வசதி இருக்கும் என்பது மேலே காணப்படும் செலவு மதிப்பீட்டிலேயே அடங்கியுள்ளது. தேசிய வளர்ச்சிப் பணிகளுக்கான செலவு நீங்கலாக, இந்த தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன்களுக்கு செலவில்லாமல், பஞ்சாயத்து யூனியன்களின்கீழ் அதிகாரிகள் வேலை செய்வதற்காக நியமிக்கப்பட்ட பிறகும்கூட, இந்தச் செலவானது தொடர்ந்து அரசாங்கத்தாரால் ஏற்றுக்கொள்ளப்படும். அதைப்போலவே இந்த 142 கோடி ரூபாயில், கடன் கொடுப்பதின்மூலம் செலவாகும் தொகையும் சேர்க்கப்படமாட்டாது. இந்தக் கடன் விவகாரங்கள் தனியாகவே இருந்துவரும்.

9. தனித்தனியாக வருவாய் அளிக்கக்கூடிய 20 வருவாய்த் துறைகளைப்பற்றி, அவற்றின் மதிப்பீடுகளுடன் கூடிய ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எல்லாப் பஞ்சாயத்து யூனியன் நிதிக்கும் கிராமப் பஞ்சாயத்து நிதிக்கும் எல்லாம் சேர்ந்து மொத்தம் 137 கோடி ரூபாய் கிடைக்கும் (நகரப் பஞ்சாயத்துக்கள் நிதி மதிப்பீடான ரூபாய் 5 கோடி நீங்கலாக) இந்த உத்தரவோடு அந்த அறிக்கையும் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளது (இணைப்பு—I). அத்துடன் ஒரு விளக்கக்குறிப்பும் சேர்க்கப்பட்டிருக்கிறது. (இணைப்பு—II) மேற் சொன்னபடி, தனித்தனியாய் வருவாய் அளிக்கக்கூடிய 20 வருவாய்த்துறைகளைப் பற்றியும், மாநிலம் முழுவதற்குமான மொத்த மதிப்பீட்டை எப்படித் திரட்ட முடிந்தது என்பது பற்றியும், ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்திற்கும் எந்த முறையில் தனித் தனியாக நிதி ஒதுக்கப்படும் என்பது பற்றியும், அந்த விளக்கக்குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும், அரசாங்கம் மானியம் அளிக்கும் ஒவ்வொரு விஷயத்திலும், அவை எந்தக் காரியத்துக்காக பயன்படுத்தப்படவேண்டும், உள்ளூரிலேயே வசூலிக்கப்படும் தொகைக்கு ஈட்டு மானியமாக எப்படி அதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பது பற்றிய நிபந்தனைகள் (ஏதேனும் இருந்தால்) அவையும் இந்த விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளன. விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளபடி, அபிவிருத்திக் கமிஷனரின் ஆலோசனைத் திட்டங்கள், வட்டார அளவில் திட்டமிட்டு செயலாற்ற கிடைக்கக்கூடிய நிதி ஆதாரங்கள் பற்றிய மதிப்பீட்டை மட்டும் குறிப்பிடாமல், அத்துடன் பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கிடைக்கக்கூடிய நிதி உதவிகள் பற்றிய ஒரு இணைப்பான அமைப்பு முறையைப் பற்றியும் குறிப்பிடுகிறது. ஆகவே, இது பஞ்சாயத்து அபிவிருத்திக்காக திட்டமிடப்பட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மாநில திட்ட வரவு செலவு மதிப்பீடு என்று சொல்லப்படுகிறது.

அரசாங்கம் இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆராய்ந்து பார்த்தது. அதன் பேரில், இந்த மதிப்பீட்டுத் திட்டமானது, பொதுவாக (i) சட்ட சபையில் சகல கட்சியில் அடங்கிய உள்ளாட்சி கமிட்டியினால் நியமனம் செய்யப்பட்ட உள்ளாட்சி நிதி உபக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட பஞ்சாயத்து நிர்வாகத்தின் "எதிர் கால வரவு செலவுத் திட்டத்தையும்," (ii) இந்திய அரசாகத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட சமுதாயநல அபிவிருத்தித் திட்டத்தின் தேசீய வளர்ச்சித் திட்டத்திற்காக திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தையும் (iii) கிராம அபிவிருத்தி சம்பந்தமாக அந்தந்த இலாக்காக்களை நடத்தும் ஒரு சில திட்டங்களுக்கான மதிப்பீட்டையும். ஆக இந்த மூன்று அம்சங்களையும் பொதுவாக இணைக்கின்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று அரசாங்கம் கருதுகிறது.

10. ஆனால், இந்த திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், அரசாங்கத்தின் விசேஷ அங்கீகாரத்தை பெற வேண்டிய ஒரு முக்கியமான பிரேரணை இருக்கிறது. உள்ளாட்சி நிதி உபக் குழு செய்துள்ள நிதித் திட்டத்தின்படி (இதற்கு புதிய பஞ்சாயத்துச் சட்டத்தில் சட்டபூர்வமான நிதி வகை செய்யப்பட்டுள்ளது) பஞ்சாயத்து யூனியனில், ஒவ்வொரு ஆண்டும் கல்விக்காகச் செய்யும் செலவை மூன்று படிகளாகப் (slab) பிரித்து, அவற்றிற்கு கீழ்க்கண்ட விதமான நிதி உதவி செய்யவேண்டும்.

முதல் படி (slab).—ஒரு வட்டாரத்தில் உள்ள ஜனத்தொகையில் தலைக்கு ஒரு ரூபாய் வீதம் செலவு செய்வதற்கு இது ஒப்பாகும். "நிலவரி ஒப்படைப்பு" என்று சொல்லப்படுகிற சட்ட பூர்வமான அரசாங்க மானியத்திலிருந்து இதற்கான செலவு பூராவும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

இரண்டாவது படி (slab).—முதல் தொகுதியில் சொல்லப்பட்டதற்கும் மேலாக சரியாக எவ்வளவு செலவாகிறதோ அந்த செலவு மட்டும் இதில் அடங்கும். ஆனல் இந்த அதிகப்படியான செலவுக்கு ஒரு நிபந்தனை உண்டு. வட்டார ஜனத்தொகையில் தலைக்கு 2–50 ந.பை.க்கு மேல், இது போகக்கூடாது. இது இரண்டு பகுதியாகப் பிரிக்கப்படவேண்டும். "பிரதேசக் கல்வி மானியம்" என்று சொல்லப்படுகிற சட்டபூர்வமான அரசாங்க மானியத்திலிருந்து ஒரு பகுதி ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். மற்றொரு பகுதிக்கான செலவை பிரதேச செஸ் நிதியிலிருந்தும் பஞ்சாயத்து யூனியன்களுக்கான பொதுநிதியிலிருந்தும் எடுத்துக்கொண்டும் சரிக்கட்டவேண்டும். இரண்டாவது படிக்கு (Slab) ஆகும் செலவில் ஸ்தல ஸ்தாபனங்களின் பங்கு ஏ வகுப்பு வட்டாரங்களாக இருந்தால் 50 சதவிகிதமும், பி வகுப்பு வட்டாரங்களாக இருந்தால் 40 சத விகிதமும், சி வகுப்பு வட்டாரங்களாக இருந்தால் 30 சதவிகிதமும், டி வகுப்பு வட்டாரங்களாக இருந்தால் 20 சதவிகிதம் ஆகும்.

மூன்றுவது படி (slab).—முதல் படி—செலவினம் சட்டப்படி கட்டுப்படுத்தப்பட்டுள்ள இரண்டாவது பகுதி—

ஆகியவற்றில் சொல்லப்பட்டதற்கும் மேலாக ஆகும் செலவு இதில் அடங்கும். அப்படிப்பட்ட செலவினங்களை எப்படி ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்பது பற்றி சட்டத்தில் சொல்லப்படவில்லை. இந்தச் செலவுத் தொகையை சரிக்கட்ட அரசாங்கம் ஏதாவது பங்குத் தொகை கொடுக்க வேண்டுமா ? அப்படிக் கொடுப்பதாயிருந்தால், எவ்வளவு கொடுப்பது என்பதையெல்லாம் அரசாங்கமே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

11. உள்ளாட்சி நிதி உபக்குழு இந்தத் திட்டத்தைத் தயாரித்த பொழுது, இந்த மூன்றுவது நிலையை ஒரு சில வட்டாரங்கள் தான் ஆரம்ப கட்டத்தில் அடைந்து இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. வயது வந்த எல்லாப் பிள்ளைகளுக்கும் தொடக்கக் கல்வியானது அளிக்கப்படவேண்டும் என்ற முடிவின் விளைவாக, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட முடிவின்போதுதான் ஏனைய வட்டாரங்களுக்கு அவை பொருந்தும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனல், அதன் பிறகு ஆசிரியர்களுக்கு ஊதிய அளவு இரண்டு முறை உயர்த்தப்பட்டது. அத்துடன், ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஆசிரியர்களின் ஊதியத்தை மாற்றியமைக்கும் ஓர் ஒருமைப்பாடான திருத்தமும் செய்யப்பட்டு வருகிறது.

ஆகவே, தொடக்கப்பள்ளிகள் சம்பந்தமான செலவு கணிசமான முறையில் அதிகரித்து இருக்கிறது. இந்த அதிகப்படியான செலவை சமாளிக்கும் முறையில், ஏதாவது விசேஷ நிதி வசதிகள் செய்யப்பட்டாலொழிய, இத்திட்டத்தை அமுல் நடத்துவதென்பது இயலாததாகிவிடும். இதற்காக அபிவிருத்திக் கமிஷனர் கீழ்க்கண்ட ஆலோசனையைக் கூறியுள்ளார் :—

(i) ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் அதிகப்படுத்தப்பட்டிருப்பதன் விளைவாக ஏற்பட்டுள்ள அதிகப்படியான செலவுகளைச் சமாளிக்க, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு துணைக் கல்வி மானியம் அளிக்கப்படவேண்டும். இந்த மானியமானது, புதிய சம்பள திட்டப்படி, ஒரு பஞ்சாயத்து யூனியனில் உள்ள எல்லா தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் (செகண்டரி கிரேடு, உயர்தர எலிமெண்டரி கிரேடு, லோயர் எலிமெண்டரி கிரேடு உட்பட) இந்த ஆண்டில் எவ்வளவு சம்பளமாகக் கொடுக்கப்படுகிறதோ, அதில் 20 சத விகிதத் தொகைக்குச் சமமாக இருக்க வேண்டும்.

(ii) இரண்டாவது பகுதியில் சொல்லப்பட்ட பிரகாரம் சட்ட பூர்வமாகக் கட்டுப்படுத்தப்பட்ட செலவில், ஆசிரியர்களுக்கு ஊதியமளித்தல், மற்றும் தொடக்கப்பள்ளிகளைப் பராமரிக்கும் சில்லரைச் செலவுகள் ஆகியவற்றை மட்டும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இலவச உணவு அளித்தல், சமூகப் பள்ளிகளை நடத்தல் ஆகியவை சம்பந்தமான செலவுகளுக்குத் தனியாக நிதி வசதி செய்து கொடுக்க வேண்டும்.

இந்த ஆலோசனைகளை அரசாங்கம் ஒத்துக்கொள்கிறது.

12. சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தேசிய வளர்ச்சி வேலைகளை ஒரு பஞ்சாயத்து வட்டாரத்தில் ஏற்படுத்தப்படுகிற பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கும்பொழுது (பஞ்சாயத்துச் சட்டத்தின் 66-வது ஷரத்தின்படி) பஞ்சாயத்து யூனியனனது, வட்டாரத்தில் உள்ள பஞ்சாயத்துக்களுடன் கலந்தாலோசித்து, ஓர் ஐந்தாண்டுக் கால வரவு செலவு மதிப்பீட்டைத் தயாரிக்க வேண்டும். இது (1961–62 லிருந்து 1965–66) மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வட்டாரத் திட்ட வரவு செலவு மதிப்பீடு என்று சொல்லப்படும். இந்த வரவு-செலவு மதிப்பீடானது, பஞ்சாயத்தாலும், பஞ்சாயத்து யூனியனுலும் நிர்வகிக்கப்படுகிற நிதிகளுக்கு எவ்வகையில் நிதி சேர்க்க முடியும் என்ற வருவாய்த்துறை பற்றி விவரங்களையும், அதனுடன் சேர்த்து பஞ்சாயத்து அபிவிருத்திக்காக திட்டமிடப்பட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வரவு, செலவு மதிப்பீட்டில் சொல்லப்படும் அம்சங்களைப்பற்றிய விளக்கங்களையும் உள்ளடக்கியதாய் இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் இந்த வரவு-செலவு மதிப்பீட்டைப் பற்றி விவாதித்து அதை ஒத்துக்கொள்ள வேண்டும். மாவட்டக் கலெக்டர் இந்த மதிப்பீட்டைப் பரிசீலித்து, அது மாநிலத்தின் பஞ்சாயத்து அபிவிருத்தி திட்ட வரவு-செலவுத் திட்டத்திற்கு ஏற்ற முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து பார்த்து, முடிவில் அது பொருத்தமாகவே தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு அறிகுறியாக அந்த வட்டாரத் திட்ட வரவு செலவு மதிப்பீட்டுக்கான தனது அங்கீகாரத்தைத் தெரிவிக்க வேண்டும். இந்த விஷயத்தில் என்ன என்ன முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பது சம்பந்தமான செயல் முறைகளை அபிவிருத்திக் கமிஷனர் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. எப்படி மாநில அரசாங்க வரவு-செலவு மதிப்பீடானது மாநில அளவில் திட்டமிடுவதற்கு உதவியாய் இருக்கிறதோ, அதுபோல் வட்டார வரவு, செலவு மதிப்பீடானது வட்டார அளவில் திட்டமிடுவதற்கு உதவியாக இருப்பதற்கே வகுக்கப்படுகிறது என்பதை அவரது அறிவிப்பு தெளிவாக்க வேண்டும். இது ஒரு பொருளாதாரக் கட்டுப்கோப்பு ஆகும். இதிலே தான் தனித்தனியாக அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டு மூன்றுவது திட்டக் காலத்தில் நிறைவேற்றப்படும். சட்டப்படி ஒவ்வொரு ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டினையும் சரிபார்த்து முடிப்பதற்கு இதுவே ஒரு அடித்தளமாக இருக்கும். குறிப்பாக, பஞ்சாயத்து அபிவிருத்திச்காக திட்டமிடப்பட்ட அடிப்படையில் வகுக்கப்பட்ட மாநில வரவு-செலவு மதிப்பீட்டிற்கேற்ப நிர்ணயிக்கப்படும் வட்டார வரவு-செலவு மதிப்பீடானது, அரசாங்க மானியம் கொடுப்பதற்காக அனுமதிக்கப்பட்ட ஒரு தனியான நிதித் திட்டமாக இராது என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு அனுமதிப்பதானது, மாநில அரசாங்கத்தின் ஒவ்வொரு ஆண்டுக்குமான வரவு-செலவுத் திட்டத்தில் தொகை ஒதுக்கப்படுவதையும், அத்துடன் சட்ட மன்றத்தில் அது ஓட்டுக்கு விடப்படுவதையும் அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து இருக்க வேண்டும்.

இணைப்பு I

பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம்

நிதி நிலை அறிக்கை

தலைப்புகள்—வருவாய்த்துறை பற்றிய முக்கிய தலைப்புகளும், உப-தலைப்புகளும்.	கிராமப் பஞ்சாயத்து நிதிகள்.	பஞ்சாயத்து யூனியன் நிதிகள் பொது.	கல்வி.	உற்பத்தி.	3-லிருந்து 6 வரை மொத்தம்.	கிராமப் பஞ்சாயத்து நிதி, பஞ்சாயத்து யூனியன் நிதி—இரண்டின் மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
I. பிரதேச (சாதாரண) வருமானங்கள்.						
					(ரூபாய் லட்சக்கணக்கில்.)	
1 பிரதேச செஸ்	250	375	500	..	875	1,125
2 பிரதேச செஸ் சர்சார்ஜ் ..	..	500	..	..	500	500
3 ஸ்டாம்பு, வரி சர்சார்ஜ்	500	..	..	..	..	500
4 கிராம வீட்டு வரி	400	..	..	..	..	400
5 பிரதேச சிறிய வரிகள்	160	240	..	..	240	400
மொத்தம்,—I ..	1,310	1,115	500	..	1,615	2,925
II. அரசாங்க (சட்டபூர்வமான) மானியங்கள்.						
					(ரூபாய் லட்சக்கணக்கில்).	
1 நில வரி ஒப்படைப்பு (சட்ட பூர்வ மானது).	..	..	1,500	..	1,500	1,500
2 பிரதேசக் கல்வி மாண்யம் ..	..	..	1,800	..	1,800	1,800
3 பிரதேச செஸ் சர்சார்ஜ் (ஈட்டு மானியம்).	..	500	..	..	500	500
4 பிரதேச சாலை மானியம் ..	..	600	..	..	600	600
5 கிராம வீட்டு வரி (ஈட்டு மானியம்).	400	..	..	..	..	400
மொத்தம், II, ..	400	1,100	3,300	..	4,400	4,800
III. அரசாங்க (சட்டத்தில் சொல்லாத) மானியங்கள்.						
11 துணைக் கல்வி மானியம் (சட்டத்தில் சொல்லாதது).	..	..	1,200	..	1,200	1,200
12 பள்ளி உணவு மானியம் ..	..	..	600	..	600	600
13 சமூகக் கல்வி மானியம் ..	..	..	150	..	150	150
14 தாய்-சேய் நல மானியம் ..	..	100	..	..	100	100
15 கிராம வேலைகள் மானியம் ..	1,500	..	200	..	200	1,700
16 பிரதேச பாசன மானியம் ..	..	..	..	200	200	200
17 விவசாய மானியம்	..	..	..	750	750	750
மொத்தம், III, ..	1,500	100	2,150	950	3,200	4,700
IV. பிரதேச (சிறப்பு) வருமானங்கள்.						
18 குடிமராமத்து வசூல். ..	..	..	..	..	..	..
19. கிராம அபிவிருத்தி வரி. .. } 20 கிராம அபிவிருத்தி நன்கொடை. }	500	..	600	200	800	1,300
ஆக மொத்தம், (I+II+III+IV) ..	3,710	2,315	6,550	1,150	10,015	13,725

		(ரூபாய் கோடிக்கணக்கில்.)
பஞ்சாயத்து யூனியன்கள்	.. .. ..	100
பஞ்சாயத்துக்கள்	.. ..	37
நகரப் பஞ்சாயத்துக்கள்	.. .. ..	5
மொத்தம்	..	142

இணைப்பு II

விவரக் குறிப்பு

பகுதி I.

பிரதேச (சாதாரண) வருமானங்கள்

1. பிரதேச செஸ்

மாநிலத்தின் நிலவரி வருமானத்தில், ரூபாய்க்கு 45 நயா பைசா வீதம் ஒரே அளவான முறையில் பிரதேச செஸ் விதிக்க புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் 115-வது பிரிவு அதிகாரம் அளிக்கிறது. அப்படி செஸ் விதிக்கப்பட்டதினுல் கிடைக்கும் வருமானத்தை பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள், இவைகளிடையே பகிர்ந்தளிக்கவும் சட்டம் அதிகாரம் அளிக்கிறது. இப்படி பிரதேச செஸ் மூலம் வசூல் செய்யப்பட்ட தொகையில், ஒண்பதில் நான்கு பாகம் பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதிக்காக ஒதுக்கப்படல் வேண்டும். மிச்சத் தொகையில், ஒரு அளவானது கிராமப் பஞ்சாயத்து நிதிக்கு ஒதுக்கப்படல் வேண்டும். இதனுல் பஞ்சாயத்துக்களுக்கு தலைக்கு 20 நயா பைசா வீதம் வருமானம் கிடைக்கும். மிச்சமிருக்கிற தொகை பஞ்சாயத்து யூனியன் பொது நிதிக்கு ஒதுக்கப்படல் வேண்டும்.

2. ஒரு ஆண்டுக்கு மொத்த நிலவரி வருமானம் 5 கோடி ரூபாய். இந்த அளவில் ஐந்தாண்டுகளுக்கு பிரதேச செஸ் மூலம் வரும் மொத்த வருமானம் ரூ. 1,125 லட்சமாகும். இந்தத் தொகையில், 500 லட்சம் ரூபாய் பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதிக்குப் போய்ச் சேரும். 250 லட்சம் ரூபாய் பஞ்சாயத்துக்களுக்கும், 375 லட்சம் ரூபாய் பஞ்சாயத்து யூனியன் பொது நிதிக்கும் போய்ச் சேரும்.

2. பிரதேச செஸ் சர்சார்ஜ்

3. புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் மேற்கண்ட 115-வது பிரிவின்கீழ் விதிக்கப்படும் பிரதேச செஸ்ஸுடன், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றமும், சரியென்று படுகிற அளவில், ஒரு பிரதேச செஸ் சர்சார்ஜை விதிக்க புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் 116-வது பிரிவில் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதிகப்பட்சமாக நிர்ணயக்கப்பட்டிருக்கிற வரம்பிற்கு மேல் இது போகாமல் இருக்கவேண்டும்.

4. இப்படி விதிக்கப்பட்ட சர்சார்ஜ் மூலம் வரும் தொகை முதலில் பஞ்சாயத்து யூனியன் பொது நிதியில் போய்ச் சேரும். ஆனுல், இந்தத் துறையில் வரும் வருமானத்தில் ஒரு பகுதி (கீழே 8-வது அம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதே போன்ற ஈட்டு மானியமும்) பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதிக்கு மாற்றப்படல் வேண்டும்.

5. இப்படி அளிக்கப்பட்டுள்ள நிதி வசதியை பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் உபயோகித்துக் கொள்ளும் என்றும், நில வருமானத்தில் ஒரு ரூபாயில் 25 நயா பைசா வரையில் அவை சர்சார்ஜாக விதிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்தாண்டுக் காலத்திற்கு, இந்த வகையில் 625 லட்சம் ரூபாய் கிடைக்கும் என மதிப்பீடு செய்யப்படலாம். ஆனுல், இந்த அளவு முறையை படிப்படியாகத்தான் அடைய முடியும் என்பதினுல்' இந்த திட்டமிடப்பட்ட வரவு—செலவுத் திட்டம் 500 லட்சம் ரூபாய்க்குதான் வழிவகை செய்திருக்கிறது.

3. ஸ்டாம்பு வரி சர்சார்ஜ்

6. இதற்கான விதிமுறை, சட்டத்தின் 124-வது பிரிவில் காணப்பட்டுள்ளது.

7. இதன் மூலம் வருகின்ற முழு வருமானமும், கிராமப் பஞ்சாயத்து நிதியுடன் சேர்க்கப்படும்.

8. இந்தத் துறையில் 1957–58-ல் 114 லட்சம் ரூபாயும், 1958–59-ல் 113 லட்சம் ரூபாயும் கிடைத்தது. ஸ்டாம்பு வரி சர்சார்ஜ் நான்கு சத விகிதம் என்ற முறையில் விதிக்கப்பட்டது. அதனுல் கிடைத்த வருமானம் இது. சட்டத்தில் அதிகபட்சமாக 5 சத விகிதம் தான் விதிக்கலாம் என்று விதி செய்யப்பட்டுள்ளது. இந்த விகிதாச்சாரமானது 5 சத விகிதத்திற்கு உயர்த்தப்பட்டால், அதனுல் கிடைக்கின்ற வருமானமும் உயரும். ஆனுல், நிலச் சீர்திருத்தத்தினுல் உண்டாகும் சொத்து மாற்றங்கள் பற்றிய கேஸ்கள் குறையலாமாகையால், இந்த வருமானத் தொகை சற்று பாதிக்கப்படலாம். எப்படியிருந்தாலும், இந்தத் துறையில், வருடத்திற்கு 100 லட்சம் ரூபாய் அல்லது ஐந்தாண்டுகளுக்கு 500 லட்சம் ரூபாய் கிடைக்கும் என்று தாராளமாக நிர்ணயம் செய்து கொள்ளலாம்.

4. கிராம வீட்டு வரி

9. இதைப்பற்றிய விதி முறை சட்டத்தின் 120-வது பிரிவில் கண்டுள்ளது. 119 (1)-வது பிரிவின்படி, வீட்டு வரி விதிப்பது கட்டாயமாக்கப்படுகிறது.

10. இதன் மூலம் வருகின்ற வருவாய் முழுவதும் கிராமப் பஞ்சாயத்துகளுக்காக பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

11. வீட்டு வரி மூலம் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு 1957–58-ல் 19 லட்சம் ரூபாயும், 1958–59-ல் 22 லட்சம் ரூபாயும் கிடைத்தது. ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட இருக்கின்றன. எல்லாக் கிராமங்களிலும் வீட்டு வரி கட்டாயமாக விதிக்கப்படும். குடி

சைகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த விதிவிலக்கு எடுக்கப் பட்டுள்ளது. இந்தத் துறையில் ஒரு நல்ல தூண்டுதலை உண்டாக்கும் முறையில், ஓர் இணை மானியம் பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. கிராம அதிகாரிகளால் இந்த வரியை வசூல் செய்யும் வேலை ஏற்றுக் கொள்ளப்படும். இப்படிப்பட்ட முக்கியமான அம்சங்களினால், இந்தத் துறையில் வரும் வருமானம் வருடத்திற்கு எண்பது லட்சம் ரூபாய் அல்லது ஐந்தாண்டுக்கு நானூறு லட்சம் ரூபாய் வரையில் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

5. பிரதேச சிறிய வருமானங்கள்

12. 1957–58, 1958–59–ஆம் ஆண்டுகளில், இந்த அம்சத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வருவாய்த் துறைகளும், கிடைத்த வருவாயும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:–

வருவாய்த்துறை.	வருவாய். 1957–58.	1958–59.
(1)	(2)	(3)
	(ரூபாய் லட்சக் கணக்கில்)	
1 மார்க்கெட் வரி	26·06	30·17
2 கேளிக்கை வரி	9·3	14·16
3 லைசென்ஸ் கட்டணங்கள்.	9·03	8·90
4 தொழில் வரி	3·92	2·82
5 வாகன வரி	7·60	8·87
6 மீன் விற்கக் குத்தகை ..	0·65	0·93
	58·64	65·85

13. இதில், முதல் அம்சம் நல்ல வருமானம் வருகின்ற துறையாகும். பஞ்சாயத்துக்கள், மார்க்கட்டுகளை மேலும் அபிவிருத்தி செய்துகொள்ளலாம். இரண்டாவது அம்சமான கேளிக்கை வரியின் மூலமாக வரும் வருமானம் வளர்ந்து கொண்டே போகும் தன்மையது. பஞ்சாயத்து யூனியன்கள் லைசென்ஸ் விதி முறைகளை நடைமுறையில் கொண்டு வரும்போது, மூன்றுவது அம்சமான லைசென்ஸ் கட்டணங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் அதிகமாகும். சட்டத்தின் 119 (i)-வது பிரிவின் படி, கட்டாயமாக விதிக்க வேண்டிய தொழில் வரியை பஞ்சாயத்துகள் விதிக்கும்பொழுது, நான்காவது அம்சமான தொழில் வரி மூலம் வருகின்ற வருமானம் ஓரளவுக்கு கூடுதலாகும். ஐந்தாவது அம்சமான, வாகன வரியும் இதே மாதிரிதான். இந்த எல்லாத் துறையிலிருந்தும் கிடைக்கும் மொத்த வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 80 லட்சம் ரூபாய் அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு 400 லட்சம் வரும் என்றும் குறிப்பிட்டு, அது பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் 2 : 3 என்ற விகிதாசாரத்தில் பிரித்துக்கொடுக்கப்படும்.

பகுதி II

அரசாங்க [சட்ட பூர்வமான] மானியங்கள்

6. நிலவரி ஒப்படைப்பு (சட்ட பூர்வமானது.)

14. பிரஸ்தாப ஆண்டில், இந்த மாநிலத்தில் வசூல் செய்யப்பட்ட மொத்த நிலவரியிலிருந்து, ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியிலுள்ள நபர் ஒவ்வொருவருக்கும், ஒரு ரூபாய் என்ற அளவிலுள்ள ஒரு தொகையை அரசாங்கம் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கும் கொடுக்க வேண்டும் என்று சட்டத்தின் 118-வது பிரிவில் விதிமுறை செய்யப் பட்டிருக்கிறது.

15. தலைக்கு ஒரு ரூபாய் அளிக்க வேண்டுமென்ற இந்தச் சட்ட பூர்வமான ஒப்படைப்பரனது, கல்வி செலவிற்கான முதல் படியின் (slab) ஆகும் தொகைக்கு வகை செய்கிறது. இந்தத்துறையில் வரும் வருமானம் பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதியில் சேர்க்கப்படும்.

16. 1961-ம் ஆண்டில் கிராம மக்கள் தொகை மூன்று கோடி என்ற கணக்கின்படி, இந்தத் துறையின் மூலம் வருகின்ற மொத்த வருமானம் ரூபாய் 1,500 லட்சமாக இருக்கும்

7. பிரதேசக் கல்வி மானியம்

17. மேற்கண்ட ஆறுவது அம்சத்தில் குறிப்பிட்ட நிலவரி ஒப்படைப்புக்கு ஏற்ப, முதல் படியில் கண்டுள்ள செலவு விகிதாச்சாரத்தை சரிக்கட்டிய பிறகு, அரசாங்கம் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கும் ஒரு பிரதேசக் கல்வி மானியத்தை ஆண்டு தோறும் அளிக்க வேண்டும் என்று சட்டத்தின் 128-வது பிரிவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. கல்விக்கான செலவினத்தில், இரண்டாவது படியில் (slab) தலைக்கு 250 நயா பைசாவாக இருக்க வேண்டும் என்று ஒரு வரம்பு முறை சட்டத்தில் கண்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்தின் பிரிவுக்கும், தரத்துக்கும் ஏற்ப, அரசாங்கம் ஒரு பிரதேசக் கல்வி மானியத்தை அந்தந்த வட்டாரத்துக்கும் அளிக்கும். இந்த தொகையானது, இரண்டாவது படியின் 50 சதவிகிதத்திலிருந்து 80 சதவிகித தொகை அளவில் இருக்கும்.

18. மூன்றுவது திட்ட முடிவுக்காலத்தில் தான் ஆரம்பக் கல்விக்காகும் செலவின் அளவு அதனுடைய குறிப்பிட்ட இலக்கான தலைக்கு 350 நயா பைசா என்ற அளவை எட்டும் என்றும் இந்த தலைக்கு 350 நயா பைசா இலக்கு என்பது தொடக்கக் கல்வியை மேலும் விஸ்தரிப்பதற்கு போதிய நிதி வசதியை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்த அளவுக்கு மேல் செலவு விகிதமானது வெகு சீக்கிரத்திலேயே மிறிவிடலாம் என்று இப்பொது தெளிவாகத் தெரிகிறது.

ஆசிரியர்களுக்குஅவ்வப்பொழுது அளிக்கப்பட்டுவந்த ஊதிய உயர்வு இதற்கு முக்கிய காரணம். சமீபத்தில் வெளியான ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் விளைவினுல் இந்த உயர்வு இன்னும் அதிகமாகிறது. ஆகவே, இரண்டாவது படியில் வரம்பிற்கு அப்பாற்பட்ட பள்ளி உணவு, சமூகக் கல்வி ஆகியவைகளுக்கான செலவுக்காக நிதி வசதி அளிக்க வேண்டியது அவசியமாகிறது. அத்துடன், ஆசிரியர்களுக்கு அதிகப்படியான ஊதியம் அளிக்கின்ற பொறுப்பை பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்ற வேண்டி, அதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் அதிகார பூர்வ மான துணைக் கல்வி மானியம் ஒன்று அளிக்கப்பட வேண்டும். இதற்கான வழிவகைகள் கீழே குறிப்பிட்டுள்ள 11-வது அம்சத்தில் செய்யப்பட்டுள்ளது. இந்த துணைக் கல்வி மானியம் முதல்படியின் (slab) விஸ்தரிப் பாகக் கருதப்படும். மிச்ச செலவினமானது தலைக்கு 250 நயா பைசா என்ற வரம்பு வரைக்கும் இரண்டாவது படியில் தொடர்ந்து கருதப்படும். அதற்காக 50-லிருந்து 80 சதவிகிதம் வரையில் ஒரு பிரதேசக் கல்வி மானியம் அளிக்கப்படும். இது தலைக்கு சராசரி 60 சதவிகிதம் அல்லது சராசரி 150 நயா பைசா என்று வரும். இந்த செலவு முறையை படிப்படியாகத்தான் அடைய முடியும். இந்த ஹேஷ்யத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தத் துறையின் மூலம் கிடைக்கும் வருமானம் 1,800 லட்சம் ரூபாய் என்று குறிப்பிடபட்டிருக்கிறது.

(1·50 × 3 கோடி × 5 ஆண்டுகள் × 415).

8. பிரதேச செஸ் சர்சார்ஜ் ஈட்டு மானியம்

19. சட்டத்தின் 116-வது பிரிவில் கண்டபடி, பஞ்சாயத்து யூனியன் விதிக்கின்ற பிரதேச செஸ் சர்சார்ஜுக்கு ஈடாகவே அரசாங்கம் பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு ஈட்டு மானியம் அளிக்க வேண்டும் என்று சட்டத்தின் 129-வது பிரிவில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த அம்சம் பஞ்சாயத்து பொது நிதியில் நேரடியாக சேர்க்கப் படும். பிரதேச செஸ் சர்சார்ஜ் போலவே, இந்தத் தொகையில் ஒரு பகுதி பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதிக்கு பின்னுல் மாற்றப்படவேண்டும். ஐந்து ஆண்டு களுக்கு 500 லட்சம் ரூபாய் என்று பிரதேச சர்சார்ஜ் மதிப்பீடு செய்யப்பட்டது போலவே, இந்த வருமானமும் 500 லட்சம் ரூபாய் வரும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

9. பிரதேச சாலை மானியம்

20. பஞ்சாயத்து யூனியன் சாலைகளை பராமரிப்பதற் காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கும், நபர் ஒன்றுக்கு தலைக்கு 40 நயா பைசா என்கிற அளவில் ஒரு தொகையானது மானியமாக அளிக்கப்படவேண்டும் என்று சட்டத்தின் 139-வது பிரிவில் வழிவகை செய் யப்பட்டிருக்கிறது. இப்படிக் கிடைக்கின்ற தொகை பஞ்சாயத்து யூனியன் பொது நிதியில் சேர்க்கப்பட்டு பஞ்சாயத்து யூனியன் சாலைகளை சீரான முறையில் பரா மரிக்க உபயோகப்படுத்தப்பட வேண்டுமே தவிர, இந்தத் தொகையில் யாதொரு பகுதியும் புது வேலைகளுக்கோ, சீரமைப்பு வேலைகளுக்கோ பயன்படுத்தப்படக்கூடாது.

10. கிராம வீட்டு வரி ஈட்டு மானியம்

21. இதற்கு சட்டத்தின் 132-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. 120-வது பிரிவின்கீழ் பஞ்சாயத்து கள் எப்படி வீட்டு வரியை விதித்து வசூல் செய் கின்றனவோ, அதற்கு ஈடாக அளிக்கப்படும் ஈட்டுமானியம் இது. இதன்படி வருகின்ற தொகை பூராவும் பஞ்சாயத்து நிதியுடன் சேர்க்கப்பட வேண்டும். வீட்டு வரி மூலம் வருகின்ற வருமானத்தைப் போலவே, இதுவும் ஐந்து ஆண்டுகளுக்கு 400 லட்சம் ரூபாய் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

22. மேற்கண்ட பத்து அம்சங்களும் சட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ள அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளன.

பகுதி III

அரசாங்க [சட்டத்தில் சொல்லாத] மானியங்கள்

11. சட்ட பூர்வமில்லாத துணைக் கல்வி மானியம்

23. ஏழாவது அம்சமான பிரதேசக் கல்வி மானியத்தின் கீழ் கொடுக்கப்பட்ட விவரங்களைப் பார்க்கவும். ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் விளைவினுல் ஏற்பட்டுள்ள ஆசிரியர்களின் அதிகப்படியான ஊதியத்தை, பஞ்சாயத்து யூனியன்கள் அளிப்பதற்காக நிதி வசதிகளை அவை களுக்கு செய்து கொடுப்பது அரசாங்கத்தின் கடமை யாகிறது. அப்படி அளிக்கப்படும் அதிகப்படியான ஊதி யமானது எல்லாத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் (செகண்டரி கிரேடு, உயர்தர எலிமெண்டரி கிரேடு, லோயர் எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்களையும் சேர்த்து) அளிக்கப்படும் புதுச் சம்பளத் தொகையில் (பஞ்சப்படி யையும் சேர்த்து) 20 சத விகித அளவுக்குச் சமமாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அதிகப் படியான செலவினத்தைச் சமாளிக்க பஞ்சாயத்து யூனியனில் உள்ள எல்லாத் தொடக்கப் பள்ளி ஆசிரியர் களுக்கும் (செகண்டரி கிரேடு, உயர்தர எலிமெண்டரி கிரேடு, லோயர் எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்களையும் சேர்த்து) புதிய சம்பள விகித முறைப்படி, அந்த ஆண்டில் அளிக்கப்படும் ஊதியத் தொகையில் 20 சத விகிதத்திற்கு சமமான தொகை எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அளிக்கப்படும். சட்ட பூர்வமல்லாத ஒரு துணைக் கல்வி மானியமாக இது அளிக்கப்படும். இந்தத் துறையில் ஐந்தாண்டுகளுக்கு மொத்தத் தொகை ரூ. 1,200 லட்சமாக இருக்கும் என்று குத்துமதிப்பாக காட்டப்பட்டுள்ளது.

12. பள்ளி உணவு மானியம்

24. கல்விச் செலவின் முதல் இரண்டு படிகளிலிருந்து பள்ளி உணவுக்காகச் செலவை ஈடு செய்ய முடியாது என்பது இப்பொழுது தெளிவாகத் தெரிகிறது. இரண்டாவது திட்டக் கால முடிவில் எல்லாப் பிள்ளைகளுக்கும் பள்ளி உணவு அளிப்பதற்கான செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 123 லட்சமாக இருக்கும். மூன்றுவது திட்டக் கால முழுமைக்கும் இந்தத் துறையில் எல்லாப் பிள்ளைகளுக்கு மான அதிகப்படியாக எதிர்ப்பார்க்கப்படுகிற செலவு 25 லட்சம் ரூபாய். இந்தத் தொகையிலிருந்து, முனிசிபல் நகரங்கள் உள்ள பிள்ளைகளின் காரணமாக ஒரு தொகையை குறைத்துக் கொள்ள வேண்டியிருக்கும். இதையெல்லாம் ஆலோசனை செய்து பார்த்து ஐந்தாண்டுக்கு 600 லட்சம் ரூபாய் என்று வழி வகை செய்யப்பட்டுள்ளது.

13. சமூகக் கல்வி மானியம்

25. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் சமூகக் கல்விக்கான செலவிற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. முதலில் இந்த சமூகக் கல்வி மானியத்திற்காக ஏற்படும் செலவு, சட்டத்தில் கண்டுள்ள ஆரம்பக் கல்விக்கான 350 நயா பைசா என்ற இலக்களவில் சேர்த்துக்கொள்ளப்படலாமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இப்பொழுது இது இயலாமல் போகவே, பஞ்சாயத்து யூனியன்களுக்கு தனியாக ஒரு சமூகக் கல்வி மானியம் அளிக்கப்படும். வட்டாரத்தின் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கிடைத்துள்ள வசதியை வைத்து, மூன்றுவது ஐந்தாண்டுக் கால அளவுக்கு 150 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதியில் சேர்க்கப்படும். தலைக்கு 50 நயா பைசா என்ற சமமான அளவில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் இத்துறையில் ஒரு தொகையைப் பெறும்.

14. தாய் சேய்நல மானியம்

26. தாய் சேய் நலத்திற்காக இரண்டு கட்டங்களில் ரூபாய் 40,000, ரூபாய் 20,000 என்று முறையே தேசிய வளர்ச்சித் திட்டத்தின் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் தனியே வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிதி வசதியை அடிப்படையாக வைத்து, மேற்குறிப்பிட்ட தலைப்பில் ஐந்தாண்டு காலத்திற்கு 100 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படி கிடைக்கின்ற மொத்தத் தொகை எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும். இந்தத் தொகை பஞ்சாயத்து யூனியன் பொது நிதியில் சேர்க்கப்படும்.

15. கிராம வேலைகள் மானியம்

27. தற்பொழுது கீழ்க்கண்ட முக்கியமான திட்டங்களின் கீழ் கிடைக்கக்கூடிய நிதி வசதியைப் பொறுத்து, கிராம வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. வட்டாரப் பிரதேசங்களில் வட்டார அளவில் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் ;

2. வட்டாரம் அல்லாத பிரதேசங்களில் பிரதேச அபிவிருத்தி வேலைகள். ;

3. கிராமக் குடிதண்ணீர் விஸ்தரிப்புத் திட்டம் ;

4. தேசியக் குடிதண்ணீர் வசதி, துப்புரவுத் திட்டம் ;

5. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட சாலைகள் வேலை முறைகள் ;

6. தனியார் பள்ளிகள் கட்டுவதற்கு உதவ கல்வி இலாகாவில் கிடைக்கக்கூடிய குறிப்பிட்ட அளவுள்ள வருமானம்.

28. இப்பொழுது இருக்கிற அமைப்பு முறையின்கீழ் ஒரேமாதிரியான வேலையானது பலவகைப்பட்ட திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. கிராமக் குடிதண்ணீர் வசதியை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். வட்டாரங்களில் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம், பிரதேச அபிவிருத்தித் திட்டம், கிராம குடிதண்ணீர் பிரதேச விஸ்தரிப்புத் திட்டம், தேசியக் குடிதண்ணீர் விநியோகம், துப்புரவுத் திட்டம் என்று பலவிதத் திட்டங்கள் உள்ளன. இந்தத் திட்டங்களில் உள்ள வசதிகளை எல்லாவற்றையும், ஒன்று தவிர ஒருமுகப்படுத்தி, எல்லா வட்டாரங்களிலும் ஒரு முகப்படுத்தப்பட்ட துறையில் இதைச் செயலாற்றுவது என்று இப்பொழுது முடிவு செய்யப்பட்டு வருகிறது. சில விஷயங்களில் பொது ஜனங்களிடமிருந்து கிடைக்கும் நன்கொடையின் சதவிகிதம் செயல்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள் ஒரே மாதிரியாக இருந்த போதிலும் ஒவ்வொரு திட்டத்திற்கும் வித்தியாசப்பட்டு இருக்கிறது, இப்படிப்பட்ட வித்தியாசங்களைப் போக்கவும் இப்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்படி சகல துறைகளையும் ஒரு முனைப்படுத்தும் வேலையில் ஒரே ஒரு துறை மட்டும் சேர்க்கப்படவில்லை. அது தேசிய குடி தண்ணீர் விநியோகம்—துப்புரவு வேலைத் திட்டமாகும். இந்தத் திட்டத்தில் கிடைக்கும் பயன்கள் பிரதேசத்திற்கு தகுந்த மாதிரி இருப்பதனுலும், அதைப் பற்றி இந்திய அரசாங்கம் இந்தத் துறையில் விதித்துள்ள நிபந்தனையினுலும், இந்தத் திட்டம் மட்டும் தனியாகக் கவனிக்கப்பட்டு மாநில அளவில் தனி ஒரு திட்டமாகச் செயலாற்றப்படும்.

29. எல்லாவற்றையும் சேர்த்து ஒரு முகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு வரையறை செய்யப்பட்ட ஒரு கிராம வேலைகளுக்கான மானியம் கிடைக்கும்.

அதே போல், ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் குடிதண்ணீர் வசதிக்காகவும் பாதைகளை ஒன்றோடொன்று சேர்ப்பதற்காகவும்வேண்டி, ஒரு கிராம வேலைகளுக்கான மானியம் கிடைக்கும்.

30. (இத்தனை பேருக்கு ஒரு கிணறு என்ற முறையில்) குடிதண்ணீர் வசதிபற்றி ஒரு அடிப்படை இலக்கு நிர்ணயிக்கப்படும். அதேபோல் ரோடுகளைச் சேர்ப்பதற்கான வேலைகளுக்காகவும் ஒரு அடிப்படை இலக்கு வரையறுக்கப்படும்.

31. பல்வேறுபட்ட திட்டங்களிலிருந்து இந்த இரண்டு அம்சங்களின்பேரில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செலவான தொகை 10 கோடி ரூபாய். இந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மேலும் செலவு செய்யப்படவேண்டும் என்ற தேவையை கருத்திலிருத்தி, மூன்றுவது திட்டத்தில் இதற்கென்று 15 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

32. இந்த 15 கோடி ரூபாயை வட்டார ரீதியில் பிரித்துப் பகிர்ந்தளிப்பதுபற்றி ஒரு கொள்கை நிர்ணயிக்கப்படவேண்டியது அத்தியாவசியமாகிறது. "ஒவ்வொரு வட்டாரமும் இரண்டாவது திட்டம், மூன்றுவது திட்டக்கால அளவாகிய பத்தாண்டுக் காலத்திற்கு ஒரு சமமான தொகையைப் பெறவேண்டும்" என்ற விதி முறையை ஏற்படுத்த யோசனை செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டத்திற்கு ஒதுக்கிவைக்கப்பட்டது 10 கோடி. மூன்றுவது திட்டத்திற்கு 15 கோடி. மொத்தம் 25 கோடி ரூபாய். 374 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்தின் பங்கு 6·67 லட்சம் ரூபாயாக இருக்கும். ஆகையினால், இந்த இரண்டு வேலைத் திட்டங்களுக்காக, பல்வேறுபட்ட திட்டங்களிலிருந்து இரண்டாவது திட்டக் காலத்தில் செலவழித்த தொகையை இந்த 6·76 லட்சம் ரூபாயிலிருந்து குறைத்து, மிச்சத் தொகையை ஒவ்வொரு வட்டாரமும் பெறும்படியான வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

33. தண்ணீர் விநியோக வேலைகளுக்காக 25 சத விகிதம் நன்கொடையாகப் பெறவேண்டும் என்றிருக்கும். மிச்சமிருக்கிற 75 சத விகிதத்தை இந்த மானியத்தின் மூலம் பெறலாம். ஹரிஜனங்கள், பிற்பட்ட வகுப்பினரிடமிருந்து இந்த நன்கொடையை எதிர்பார்க்கக்கூடாது.

34. சாலைகளைத் தொடர்பு படுத்தும் வேலையில் ஏற்படும் செலவில் பொதுஜனங்களிடமிருந்து, ஏ பிரிவு வட்டாரங்களிலிருந்து 50 சத விகிதமும், பி பிரிவு வட்டாரங்களிலிருந்து 40 சத விகிதமும், சி பிரிவு வட்டாரங்களிலிருந்து 30 சத விகிதமும், டி பிரிவு வட்டாரங்களிலிருந்து 20 சத விகிதமும் நன்கொடையாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் மண் பாதைகள் போடவும் அனுமதி அளிக்கப்படும். பாதைகள் போடப்படும் நிலமானது அரசாங்கத்தாருக்கு இனமாகக் கிடைப்பது என்ற நிலை அப்படியே தொடர்ந்து இருக்கும். அப்படி கிடைக்கும் நிலங்கள் நன்கொடைத் தொகையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

35. பாலங்கள் கட்டவும், பஞ்சாயத்து யூனியன் சாலைகளின் தரத்தை உயர்த்துவதும், சீரமைப்புச் செய்வதும், இதற்கான நிதி வசதி மாநில நெடுஞ்சாலை வரவு செலவுத் திட்டத்தில் தனியாகச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

36. 1,500 லட்ச ரூபாயும் கிராமப் பஞ்சாயத்து நிதியில் சேர்த்துக்கொள்ளப்படும்.

37. பொதுஜனங்களிடமிருந்து 50 சத விகிதத் தொகையை நன்கொடையாகப் பெற்று, வட்டாரத்திற்காக திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்தும், பிரதேச அபிவிருத்தி வேலை திட்டத்திலிருந்தும் பள்ளிக்கூட கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பெருவாரியான அளவில் பள்ளிக்கூட கட்டிடங்கள் கட்டுவது என்ற திட்ட அடிப்படையில், ஐந்தாண்டு காலத்திற்கு 200 லட்ச ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கப்பட்ட தொகை பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதியில் சேர்க்கப்படும்.

38. ஒவ்வொரு வட்டாரத்திலும் எத்தனை மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்ற இலக்கின் அடிப்படையில் இந்த 200 லட்சம் ரூபாய் வட்டாரங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். மாநிலத்தின் கிராமப் புறங்களில் இத்தனை மாணவர்கள் சேர்க்கப்படவேண்டும் என்பதற்கான இலக்கு 13·5 லட்சமாகும். வட்டார ரீதியாக இதைப் பிரிக்கும்பொழுது, கீழ்க்கண்ட விதி முறையானது அனுசரிக்கப்படும்—புதிய மாணவர்களை சேர்ப்பதில் மாநிலத்தின் இலக்கை வட்டார ரீதியாகப் பிரித்துக் கொடுக்கும் வகையில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மூன்றுவது திட்டக் காலத்தில் புதிதாக சேர்க்கப்படும் ஒவ்வொரு குழந்தைக்கு 15 ரூபாய் என்ற அளவில் ஒதுக்கப்படும்.

39. இதில் 50 சத விகிதம் நன்கொடையாக கிடைக்கப் பெறவேண்டுமென்பது வலியுறுத்தப்படும்.

16. குடி மராமத்து மானியம்

40. சட்டத்தின் 85-வது பிரிவின்கீழ், அரசாங்கம் சிறிய நீர்ப்பாசன வேலைகளை பராமரிக்கும் பொறுப்பை யாதொரு பஞ்சாயத்துக்கோ, பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கோ மாற்றலாம். பஞ்சாயத்து யூனியன்களிடம் இந்த பொறுப்பை ஒப்படைக்கும் உத்தரவுகள் முன்பே பிறப்பிக்கப்பட்டுவிட்டன. இந்த உத்தரவுகளின்படி, ஒப்படைக்கப்பட்ட சிறிய நீர்ப்பாசன வேலைகளை பராமரிப்பதற்காக வேண்டி, அரசாங்கம் பஞ்சாயத்து யூனியனுக்கு போதிய நிதி வசதிகளை அளிக்கவேண்டும். இதற்காக

ஆண்டுக்கு 30 லட்சம் ரூபாய் அல்லது ஐந்தாண்டுக்கு 150 லட்சம் ரூபாய் தேவைப்படும். வட்டாரத்தில் உள்ள குளம், ஆயக்கட்டு இவைகளை அடிப்படையாக வைத்து இந்தத் தொகை ஒவ்வொரு வட்டாரத்திற்கும் நிர்ணயிக்கப் படும். அப்படி நிர்ணயிக்கப்பட்ட தொகை பஞ்சாயத்து யூனியன் உற்பத்தி நிதியில் சேர்க்கப்படும்.

41. அத்துடன் மட்டுமல்லாமல், குடி மராமத்து வேலையை நிறைவேற்றுவதில் விவசாயிக்கு உள்ள பொறுப்பை பஞ்சாயத்தேநேரடியாக எடுத்துச் செயலாற்றவும், அதனால் பலன் பெறுகிறவர்களிடமிருந்து ஒரு கட்டணத்தை பஞ் சாயத்து விதித்து வசூலித்துக்கொள்ளவும், சட்டத்தின் படி பஞ்சாயத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு சர்க்கார் மான்யம் ஒன்றும் தேவையில்லை. ஆனால் இந்தத் துறையில் குடி மராமத்து வேலை கவ னிக்கப்படாமல் அப்படியே நீண்டகாலமாக கைவிடப் பட்டுவிட்டபடியால, சில குடி மராமத்து வேலைகள் மிக வும் சீர்கேடான நிலையை அடைந்திருக்கின்றன என்பது உண்மையாகும். அதனால், விவசாயிகள் இப்பொழுது வழக்கம்போல் மராமத்து வேலைகளைச் செய்தாலும், இந்த வேலைகள் நல்ல முறையில் திருத்தி திருப்பியும் அமைக்கப் பட முடியாத நிலையில் உள்ளன. இந்த வேலைகளை மறு படியும் முழுமையும் சீர்திருத்தி நல்ல நிலையில் அமைக் கப்பட வேண்டுமானால், செலவு மிக அதிகமாகும். அத னால், ஒரு ஆண்டுக்கு ஒரு எக்கர் ஆயக்கட்டுக்கு ஒரு ரூபாய் என்ற அளவில் எடுக்கப்படும் குடிமராமத்து வேலை கள் சாதாரணக் குடி மராமத்து வேலைகளாக கருதப்பட வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குமேல் ஆகும் செலவு "அதிகப்பட்ட குடி மராமத்துச் செலவாக" கருதப்படும். அதிகப்பட்ட குடி மராமத்துக்கு ஆகும் செலவில் அரசாங்கம் மூன்றில் இரண்டு பங்குத் தொகை யை அளிக்கும். இப்படி அதிகப்பட்ட குடி மராமத்து வேலைகளுக்காக ஆகும் செலவைச் சமாளிக்க ஐந்தாண் டுக் காலத்திற்கு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

42. சிறிய நீர்ப்பாசனங்களின் பராமரிப்புக்காகவும், அதி கப்படியாக குடி மராமத்து செலவுகளுக்காகவும் மொத் தம் 200 லட்சம் ரூபாய் ஆகும் என்று காட்டப்பட்டுள்ளது. இந்தத் தொகை பஞ்சாயத்து யூனியன் உற்பத்தி நிதியில் சேர்க்கப்படும்.

17. விவசாய மானியம்

43. வட்டாரத்திற்கான திட்டமிடப்பட்ட வரவு செல வுத் திட்டத்திலிருந்து ஒரு பகுதியும், விவசாயத் துறை யில், இலாகாவுக்கென ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து ஒரு பகுதியுமாக இந்தத் தொகையிலிருந்து, உயர்தரச் சாகுபடி (better farming) திட்டத்தை மேலும் அபி விருத்தி செய்யும் வகையில், பல்வேறுபட்ட வேலைத் திட்டங்கள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. இந் தப் பல்வேறுபட்ட பணிகளில், தரமான விதைகளை விநி யோகம் செய்தல், பிரதேச எரு உற்பத்தியை (பசுந்தாள் உரம், கலவை எரு உட்பட) அபிவிருத்தி செய்தல். பயிர்ப் பாதுகாப்பு முறைகள், விவசாயத்திற்கான உப கரணங்களை குறைந்த விலையில் விநியோகம் செய்தல் ஆகியவை அடங்கும். கால்நடை அபிவிருத்தி சம்பந்த பட்ட வேலைகளும், கால்நடை மருந்துச் சாலைகள் கட்டுதல் போன்ற வேலைகளும், மற்றும் பொலிக்காளைகளையும், பொலி செம்மறி ஆடுகளையும் குறைந்த விலையில் விநி யோகம் செய்தல், கோழிப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல் போன்ற மற்ற வேலைகளும் இதே தலைப்பில் வட்டாரத்திற்கான திட்டமிடப்பட்ட வரவுச் செலவுத் திட் டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்படி வட்டாரத்திற்கான திட்டமிடப்பட்ட வரவுச் செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்டுள்ள தொகையும், விவசாயத்துறை, கால்நடை பரா மரிப்புத் துறை போன்ற பிரிவுகளில் சேர்க்கப்பட்ட தொகை யும் சேர்த்து, இந்த ஐந்தாண்டுக் காலத்திற்கு மாநிலத் தில் மொத்தம் 750 லட்சம் ரூபாய் நிதி வசதி செய்யப்பட வேண்டும்என்ன எதிர்பார்க்கப்படுகிறது.

44. இந்தத் தொகை ஐந்தாண்டுகளுக்கு எல்லா வட் டாரங்களுக்கும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தலைக்கு 25 லட்சம் ரூபாய் என்ற வீதத்தில் சமமாகப் பகிர்ந்தளிக் கப்படும்.

45. இப்படி பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை யான 2 லட்சம் ரூபாயில் ஒரு லட்சம் ரூபாய் கீழ்க்கண்ட வகைகளில் செலவு செய்யப்படுவதற்காக வட்டாரத்தி லுள்ள பஞ்சாயத்துக்களுக்கு ஒரு குறிப்பிட்ட உதவி சிறி தளவில் மான்யமாக பகிர்ந்தளிக்க என்று ஒதுக்கப் படும் :—

(i) விறகு, தீவனம், பசுந்தழை உரம் இவைகளை உற்பத்திச்செய்யவேண்டி அதற்கான பயிர்களை அதிகப் படுத்தல்,

(ii) கலவை எரு தயாரித்தல், அதிகப்படுத்தல்,

(iii) பசுந்தாள் உரத்தை அதிகப்படுத்தல்,

(iv) பூச்சி மருந்துகளை குறைந்த விலையில் விநி யோகம் செய்தல்,

(v) அவ்வப்போது குறிப்பிடப்படுகிற பல்வேறு காரி யங்கள்.

இந்த எல்லா அம்சங்களிலும், இந்த மான்யமானது பஞ்சாயத்தால் இந்தத் துறையில் செலவிடப்படும் தொகை யில் மூன்றில் இரண்டு பங்கை ஈடு செய்யும். ஆனால், ஒரு வட்டாரத்திற்கு ரூபாய் 1 லட்சம் என்ற வரம்புக்கு மேல் இந்தத் தொகை போகக்கூடாது.

46. மிச்சமிருக்கிற ஒரு லட்சம் ரூபாய் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஐந்தாண்டுக் காலத்திற்கு கீழ்க்கண்ட காரியங்களுக்காக மான்யமாகக் கொடுக்கப்படும் :—

(i) கிராம சகாய வேலைத் திட்டத்தை பராமரித்தல் (இதற்காக வறையறுக்கப்பட்ட பொது வேலைத் திட்டத்தின்படி),

(ii) பஞ்சாயத்துக்களுக்கும், கூட்டுறவுகளுக்கும் பயிர்ப் பாதுகாப்பு சாதனங்களை விநியோகித்தல், வட்டாரத் தலைமையிடத்தில் ஒரு பயிர்ப் பாதுகாப்புச் சாதனத்தை உபயோகத்திற்கு கிடைக்கும்படியாக வைத்திருத்தல்,

(iii) அவ்வப்போது குறிப்பிடப்படுகிற பல்வேறு காரியங்கள்.

47. இதன்படி கொடுக்கப்படுகிற மொத்தத் தொகையான 750 லட்சம் ரூபாயும் பஞ்சாயத்து யூனியன் உற்பத்தி நிதியில் சேர்க்கப்படும்.

பகுதி IV

பிரதேச சிறப்பு வருமானங்கள்

18. குடி மராமத்து வசூல்

48. சட்டத்தின் 85 (2)-வது ஷரத்தின் கீழ், பஞ்சாயத்து, விவசாயிகள் செய்யவேண்டிய குடி மராமத்து வேலையை, அவர்கள் சார்பாக ஏற்று நடத்தலாம். இந்தக் காரியத்திற்காக, பஞ்சாயத்தானது வரையறுக்கப்பட்ட வகையில் ஒரு கட்டணத்தை விதித்து வசூல் செய்யவும் சட்டத்தில் அதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த காரியத்தைப் பஞ்சாயத்துக்கள் ஏற்றுக்கொண்டு, அப்படி ஒரு தகுந்த கட்டணத்தை வசூல் செய்யும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்த அம்சத்திற்கு "குடிமராமத்து வசூல்" என்று பெயர்.

19. கிராம அபிவிருத்தி வரிகள்

49. ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக, பஞ்சாயத்து விவகாரம் செய்யப்படுகின்ற நிலங்களின் மீதும் ஒரு வரியை விதிக்க சட்டத்தின் 119 (3)-வது ஷரத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. முன்னால் கண்டுள்ள பாராக்களில் சொல்லப்பட்டுள்ள வேலை முறைகளை நிறைவேற்ற நிதி வசதி வேண்டியிருப்பதால், அதற்காக இந்த அதிகாரத்தை பஞ்சாயத்துக்கள் உபயோகப்படுத்திக்கொண்டு போதுமான தொகையை வசூல் செய்யும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கு "கிராம அபிவிருத்தி வரிகள்" என்று பெயர்.

20. கிராம அபிவிருத்தி நன்கொடை

50. இந்த இரண்டுடன் பகிர்ந்தளிக்கக்கூடிய பல்வேறுபட்ட செலவினங்களில் அவர்களுடைய பங்குக்கு ஈடாக பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் பொது மக்களிடமிருந்து நன்கொடைகள் திரட்டுவதன் மூலம் நிதி வசதியை அதிகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

51. குடி தண்ணீர், சாலை பராமரிப்புக்காக கிராம வேலை மானியமாக கொடுக்கப்படும் 1,500 லட்சம் ரூபாய்க்கு ஈடாக, 500 லட்சம் ரூபாய் நன்கொடையாக தரப்படவேண்டும். பள்ளிக்கூட கட்டடங்களுக்காக கிராம வேலை மானியத் தொகையான 200 லட்சம் ரூபாய்க்கு ஈடாக 200 லட்சம் ரூபாய் பிரதேச நன்கொடையாக திரட்டப்படவேண்டும். அதே போல் 400 லட்சம் ரூபாய் பள்ளி உணவுத் திட்டத்திற்காக திரட்டப்படவேண்டும். இந்தப் பிரதேச சிறப்பு வருமான இனங்களெல்லாம் 18-லிருந்து 20 வரை மூன்று அம்சங்களாக ஒன்றுகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டு காலத்திற்கு ரூ. 1,300 லட்சம் என்று ஒரு மொத்த தொகைக்கு இது வழி செய்கிறது.

—(::)—

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Development Commissioner, Government of Madras.

ஜெர்மன் குடியரசின் முன்னாள் தலைவர் டாக்டர் தியாடர் ஹெஸ் முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜிடம் வெள்ள நிவாரண வேலைக்காக ரூ. 17,100 அளிக்கிறார்.

3-12-1960-ல் நடைபெற்ற பத்திரிகையாளர் கூட்டத்தில் "கிராம உணவு உற்பத்தித் திட்டத்தை" விவசாயத் துறை அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் விளக்கிக் கூறினார்கள்.

Regd. No. M. 7277.

©
GOVERNMENT OF MADRAS
1960



மேல்படம் :—வெளி நாடுகளில்சுற்றுப்பயணம் செய்துவிட்டு நிதி அமைச்சர் ஸ்ரீ சுப்ரமணியம் 27–10–1960-ல் சென்னை திரும்பினார்.

நடுவில் :—முன்னாள் பிரதமக் காரியதரிசி ஸ்ரீ டி. என். எஸ். ராகவன், ஐ.சி.எஸ், புது பிரதமக் காரியதரிசி ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்.

கீழ் படம் :—அமெரிக்க கோதுமை உற்பத்தியாளருடன 26–10–1960-ல் சேவா சமாஜத்தினரின் ஒப்பந்தம் கையொப்பம் இடல்.

*